# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2013

# மதிப்பீட்டு அறிக்கை

# 21 - பொருளியல்

Curriculum
Assessment
&
Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2013

# மதிப்பீட்டு அறிக்கை

# 21 - பொருளியல்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப் பதிப்புரிமையுடையது.**

**பொருளியல்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2013

**நிதி அனுசரணை**

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை
கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP-WB) ஊடாக

# அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையானது இலங்கையின் உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப் பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்த போதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவு செய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப் பரீட்சையாகவும் தேர்வுப் பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம் நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது இப்பரீட்சைக்காக 2013 ஆம் ஆண்டில் 209,906 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 31,723 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சி செய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) பொருளியல் பாடத்தின் நோக்கம், பாட அடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளது. இப்பகுதியில் பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ள விதம், மாவட்ட மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம், வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாட அடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் பொருளியல் பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ள விதம் என்பன பற்றி விரிவாகக் குறிப்பிடும் பாட அடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2013 பரீட்சையில் பொருளியல் பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. அதில் வினாப்பத்திரம் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள், பாட அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபு ரீதியான சோதனைக் கோட்பாடு (Classical Testing Theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item Response Theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்திலுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல்-கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையில் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள், அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன தொடர்பாக இந்த அறிக்கையானது பெரிதும் துணை புரியும் என நம்புகின்றேன். **எதிர்காலத்தில்** தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக் கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர்கள், மேலதிக பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்கள், ஆர்வத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் இத்தொகுப்புக்கான நிதி அனுசரணை வழங்கிய எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்விமுறைமையை மீளமைக்கும் செயற்றிட்டத்துக்கும் (TSEP - WB) எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2015 சனவரி 19 ஆம் திகதி

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| ஆலோசனை | : | டப்ளியூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| நெறிப்படுத்தலும் ஒழுங்கமைப்பும் | : | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| இணைப்பு | : | ஈ. குலசேகர<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் |
| தொகுப்பு | : | பேராசிரியர் ஈ. தயாரத்ன<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்<br><br>பேராசிரியர் நவரத்ன பண்டார<br>களனி பல்கலைக்கழகம்<br><br>கலாநிதி சுமுது பெரேரா<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| ஆக்கக் குழு | : | டபிள்யூ. லயனல் வீரசிங்க<br>விசாகா வித்தியாலயம்<br>கொழும்பு 05<br><br>டீ.ஜீ. சுகத்<br>மா / புனித தோமஸ் மகளிர் வித்தியாலயம்<br>மாதறை<br><br>கே.என்.ஆர். பெரேரா<br>வலயக் கல்விப் பணிமனை<br>களனி |
| மொழிபெயர்ப்பு | : | எஸ். விஷ்வநாதன்<br>உதவி பரீட்சை ஆணையாளர் |
| கணனி பக்க வடிவமைப்பு | - | றஹீனா ஹாசிம்<br>கணனி தரவுப் பதிவாளர் |
| முகப்பு அட்டை வடிவமைப்பு | - | வை. எஸ். அனுராதி<br>அபிவிருத்தி அதிகாரி |

# உள்ளடக்கம்

பக்க எண்


## பகுதி I

1. பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்
   1.1 பாடக் குறிக்கோள்கள் 1

   1.2 பாட அடைவு தொடர்பான தகவல்கள் 2
   - 1.2.1. இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2
   - 1.2.2. பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் 2
   - 1.2.3. மாவட்ட அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் 3
   - 1.2.4. வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 4

   1.3 பாட அடைவு தொடர்பான பகுப்பாய்வு
   - 1.3.1. வினாப்பத்திரம் I இன் அடைவு 5
   - 1.3.2. வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 6
   - 1.3.3. வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கு புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 6
   - 1.3.4. வினாப்பத்திரம் II இன் அடைவு 7

## பகுதி II

2. வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்
   2.1 வினாப்பத்திரம் I உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும் 9
   - 2.1.1. வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 9
   - 2.1.2. வினாப்பத்திரம் I 10
   - 2.1.3. வினாப்பத்திரம் I இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 18
   - 2.1.4. வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை பற்றிய அவதானிப்புகள் 19
   - 2.1.5. சதவீத அடிப்படையில் வினாப்பத்திரம் இல் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளைத் தெரிவு செய்துள்ள விதம் 20
   - 2.1.6. வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 21

   2.2 வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான விவரங்களும்
   - 2.2.1. வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 23
   - 2.2.2. வினாப்பத்திரம் II இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 25
   - 2.2.3. வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 65

## பகுதி III

3. விடையளிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்
   3.1 விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் 66
   3.2 கற்றல் கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும் 67

# பகுதி I

## 1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

★ சமூகம் ஒன்றின் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியாக பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவ்வடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள் தொடர்பாக தெளிவான விளக்கமளித்தல்.

★ பொருளாதார எண்ணக்கருக்கள் மற்றும் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலம், பிரயோகப் பொருளாதார பிரச்சினைகளையும் பிற்போக்கான நிலைமைகளையும் பகுப்பாய்வு செய்வதற்குத் தேவையான திறன்களை வழங்குதல்.

★ பேரினப் பொருளியல் மாறிகளின் துலங்கள்கள் மற்றும் அவற்றுக்கிடையே நிலவும் இடைத் தொடர்புகளை விளங்கிக் கொள்ளச் செய்தல்.

★ சந்தையொன்றில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தர்க்க ரீதியாக நடந்து கொள்ளும் முறைகளை விமர்சிக்க ஊக்குவித்தல்.

★ பொருளியல் ரீதியாக எண்ணுவதற்கு தேவையான தர்க்க ரீதியான சிந்தனைகளை உருவாக்குதல்.

★ பல்வேறு பொருளியல் எண்ணக்கருக்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணப்படுத்த சந்தர்ப்பம் வழங்குதல்.

★ சந்தை முறையொன்றில் பேரினப் பொருளியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையீடு செய்கின்ற முறைமை தொடர்பாக ஆராய்ந்து விமர்சனத்தில் ஈடுபடுத்துதல்.

★ நடைமுறையிலுள்ள பொருளியல் கொள்கைகளை விமர்சன ரீதியாகப் பகுப்பாயும் ஆற்றலை வழங்குதல்.

★ பொருளியல் அபிவிருத்தியில் பல்வகைத் தன்மையை சமநிலை ரீதியில் விமர்சிப்பதற்குத் தேவையான திறன்களை வழங்கல்.

★ பொருளியல் பாடத்தைப் பகுப்பாய்வு ரீதியில் விளக்குவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்குல்.

★ சர்வதேச வர்த்தகத்திலும் நிதியிலும் மற்றும் பூகோளமயமாதலுக்கிடையில் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டுதல்.

★ இலங்கைப் பொருளாதாரத்தின் செயலாற்றுகை தொடர்பாக விமர்சன ரீதியில் நோக்குவதற்கான திறன்களை வளர்த்தல்.

★ சமூகத்தின் நல் இருத்தலுக்காகச் (Social well being) செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படையினை வழங்குதல்.

★ உயர் கல்விக்குப் பிரவேசிப்பதற்குப் பொருத்தமான அடித்தளத்தை வழங்குதல்.

## 1.2. பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1. பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழிமூலம் | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | 62 886 | 5150 | 68 036 |
| தமிழ் | 9834 | 862 | 10 696 |
| ஆங்கிலம் | 1947 | 561 | 2508 |
| மொத்தம் | 74 667 | 6573 | 81 240 |

**அட்டவணை 1**

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 4062 | 5.44 | 184 | 2.80 | 4246 | 5.23 |
| B | 6973 | 9.34 | 505 | 7.68 | 7478 | 9.20 |
| C | 16 889 | 22.62 | 1319 | 20.06 | 18 208 | 22.41 |
| S | 21 715 | 29.08 | 1770 | 26.93 | 23 485 | 28.91 |
| F | 25 028 | 33.52 | 2795 | 42.52 | 27 823 | 34.25 |
| **மொத்தம்** | **74 667** | **100.00** | **6573** | **100.00** | **81 240** | **100.00** |

**அட்டவணை 2**

1.2.3 முதற்தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் - மாவட்ட அடிப்படையில்

| மாவட்டம் | தோற்றியோரின் எண்ணிக்கை | அதி சிறந்த சித்தி (A) பெற்றோர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றோர் | | திறமைச் சித்தி (C) பெற்றோர் | | சாதாரண சித்தி (S) பெற்றோர் | | சித்தி பெற்றோர் (A+B+C+S) | | சித்தி அடையாதோர் (F) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 10663 | 902 | 8.46 | 1070 | 10.03 | 2375 | 22.27 | 3109 | 29.16 | 7456 | 69.92 | 2307 | 30.08 |
| 2. கம்பஹா | 6794 | 420 | 6.18 | 579 | 8.52 | 1297 | 19.09 | 1905 | 28.04 | 4201 | 61.83 | 2593 | 38.17 |
| 3. களுத்துறை | 3426 | 213 | 6.22 | 337 | 9.84 | 749 | 21.86 | 921 | 26.88 | 2220 | 64.80 | 1206 | 35.20 |
| 4. கண்டி | 4320 | 238 | 5.51 | 337 | 7.80 | 918 | 21.25 | 1230 | 28.47 | 2723 | 63.03 | 1597 | 36.97 |
| 5. மாத்தளை | 1217 | 30 | 2.47 | 67 | 5.51 | 205 | 16.84 | 378 | 31.06 | 680 | 55.88 | 537 | 44.12 |
| 6. நுவரெலியா | 1711 | 79 | 4.62 | 134 | 7.83 | 372 | 21.74 | 442 | 25.83 | 1027 | 60.02 | 684 | 39.98 |
| 7. காலி | 3295 | 239 | 7.25 | 306 | 9.29 | 652 | 19.79 | 882 | 26.77 | 2079 | 63.10 | 1216 | 36.90 |
| 8. மாத்தறை | 2682 | 88 | 3.28 | 178 | 6.64 | 524 | 19.54 | 760 | 28.34 | 1550 | 57.79 | 1132 | 42.21 |
| 9. அம்பாந்தோட்டை | 1629 | 45 | 2.76 | 130 | 7.98 | 318 | 19.52 | 457 | 28.05 | 950 | 58.32 | 679 | 41.68 |
| 10. யாழ்ப்பாணம் | 1283 | 69 | 5.38 | 115 | 8.96 | 323 | 25.18 | 377 | 29.38 | 884 | 68.90 | 399 | 31.10 |
| 11. கிளிநொச்சி | 266 | 4 | 1.50 | 11 | 4.14 | 74 | 27.82 | 92 | 34.59 | 181 | 68.05 | 85 | 31.95 |
| 12. மன்னார் | 234 | 16 | 6.84 | 20 | 8.55 | 56 | 23.93 | 61 | 26.07 | 153 | 65.38 | 81 | 34.62 |
| 13. வவுனியா | 332 | 31 | 9.34 | 44 | 13.25 | 82 | 24.70 | 91 | 27.41 | 248 | 74.70 | 84 | 25.30 |
| 14. முல்லைத்தீவு | 211 | 4 | 1.90 | 14 | 6.64 | 41 | 19.43 | 72 | 34.12 | 131 | 62.09 | 80 | 37.91 |
| 15. மட்டக்களப்பு | 954 | 50 | 5.24 | 116 | 12.16 | 245 | 25.68 | 275 | 28.83 | 686 | 71.91 | 268 | 28.09 |
| 16. அம்பாறை | 1570 | 54 | 3.44 | 129 | 8.22 | 348 | 22.17 | 523 | 33.31 | 1054 | 67.13 | 516 | 32.87 |
| 17. திருகோணமலை | 829 | 39 | 4.70 | 58 | 7.00 | 157 | 18.94 | 260 | 31.36 | 514 | 62.00 | 315 | 38.00 |
| 18. குருநாகல் | 4464 | 173 | 3.88 | 295 | 6.61 | 915 | 20.50 | 1249 | 27.98 | 2632 | 58.96 | 1832 | 41.04 |
| 19. புத்தளம் | 1833 | 77 | 4.20 | 167 | 9.11 | 422 | 23.02 | 529 | 28.86 | 1195 | 65.19 | 638 | 34.81 |
| 20. அனுராதபுரம் | 2257 | 71 | 3.15 | 154 | 6.82 | 374 | 16.57 | 660 | 29.24 | 1259 | 55.78 | 998 | 44.22 |
| 21. பொலன்னறுவை | 1139 | 41 | 3.60 | 79 | 6.94 | 208 | 18.26 | 294 | 25.81 | 622 | 54.61 | 517 | 45.39 |
| 22. பதுளை | 2301 | 67 | 2.91 | 149 | 6.48 | 455 | 19.77 | 680 | 29.55 | 1351 | 58.71 | 950 | 41.29 |
| 23. மொனராகலை | 1148 | 48 | 4.18 | 81 | 7.06 | 242 | 21.08 | 355 | 30.92 | 726 | 63.24 | 422 | 36.76 |
| 24. இரத்தினபுரி | 2889 | 178 | 6.16 | 259 | 8.97 | 606 | 20.98 | 769 | 26.62 | 1812 | 62.72 | 1077 | 37.28 |
| 25. கேகாலை | 2025 | 63 | 3.11 | 144 | 7.11 | 400 | 19.75 | 587 | 28.99 | 1194 | 58.96 | 831 | 41.01 |
| **மொத்தம்** | **59472** | **3239** | **5.45** | **4973** | **8.36** | **12358** | **20.78** | **16958** | **28.51** | **37528** | **63.10** | **21044** | **35.38** |

### 1.2.4. வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 3 | 0.03 | 81 240 | 100.00 |
| 81 - 90 | 194 | 0.24 | 81 237 | 100.00 |
| 71 - 80 | 1821 | 2.24 | 81 043 | 99.76 |
| 61 - 70 | 5431 | 6.69 | 79 222 | 97.52 |
| 51 - 60 | 9538 | 11.74 | 73 791 | 90.83 |
| 41 - 50 | 12 945 | 15.93 | 64 253 | 79.09 |
| 31 - 40 | 16 351 | 20.13 | 51 308 | 63.16 |
| 21 - 30 | 18 016 | 22.18 | 34 957 | 43.03 |
| 11 - 20 | 15 107 | 18.60 | 16 941 | 20.85 |
| 01 - 10 | 1824 | 2.25 | 1834 | 2.26 |
| 00 - 00 | 10 | 0.01 | 10 | 0.01 |

**அட்டவணை 5**

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறை கீழே தரப்பட்டுள்ள உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் :

இப்பாடத்தில் 31 - 40 இற்கு இடையில் புள்ளிகள் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 16351 என்பதுடன் அது மொத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 20.13% ஆகும். 40 அல்லது அதனை விடக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 51308 ஆகும். அது மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 63.16% ஆகும்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் I இன் அடைவு




**வரைபு** 1 (இது RD/16/05/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

மேலே தரப்பட்டுள்ள வரைபின் அடிப்படையில் 04 ஆம் வினாவுக்கே கூடுதலான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். அது கிட்டத்தட்ட 81% சதவீதம் ஆகும். அதேபோன்று 5, 27, 32, 34 ஆகிய வினாக்களுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையான பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர். அது கிட்டத்தட்ட 13% சதவீதம் ஆகும்.

## 1.3.2. வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.




இவ்வரைபின்படி, தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறை பின்வரும் உதாரணத்தின் மூலம் காட்டடுப்பட்டுள்ளது.

உதாரணம்: 'அ' பகுதியின் 01 ஆம் வினா அதிகளவான பரீட்சார்த்திகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதன் சதவீதம் 97% ஆகும். 'ஆ' பகுதியிலுள்ள 10 ஆம் வினாவினைக் குறைந்தளவான பரீட்சார்த்திகள் தெரிவுசெய்துள்ளதோடு அதன் சதவீதம் 16% ஆகக் காணப்படுகின்றது.

**வரைபு 2** -(RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

## 1.3.3. வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




இவ்வரைபின்படி தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையை பின்வரும் உதாரணம் காட்டுகின்றது.

உ-ம்: இங்கு 4 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். இவ் வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% என்ற வீச்சில் அதாவது 16 தொடக்கம் 20 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் 3% ஆவர். அதேபோன்று 20 புள்ளிகளில் 0%-25% வீச்சில் அதாவது 0 முதல் 5 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டோர் 54% ஆவர்.

**வரைபு 3** - (RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

### 1.3.4 வினாப்பத்திரம் II இன் அடைவு

**க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2013**
**21 - பொருளியல் - வினாப்பத்திரம் II (பிரிவு 'அ')**
**ஒவ்வொரு வினாவினதும் பிரிவுகள் / உபபிரிவுகளின் இலகுச் சுட்டி**




வரைபு 4.1 : (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

உ-ம் : மேல் வரைபின் மூலம் தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது. முதலாம் வினாவின் (iii) ஆம் பிரிவின் இலகுச்சுட்டி 47% உம் நான்காம் வினாவின் iv ஆம் பிரிவின் (b) உபபிரிவின் இலகுச்சுட்டி 66% உம் ஆகும்.

**க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2013**

**21 - பொருளியல் - வினாப்பத்திரம் II (உபபிரிவு 'ஆ')**

**ஒவ்வொரு வினாவினதும் பிரிவுகள் / உபபிரிவுகளின் இலகுச் சுட்டி**




வரைபு 4.2 : (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)
இவ்வரைபின்படி தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது. ஆறாம் வினாவின் (iv) ஆம் பிரிவின் (b) உபபிரிவின் இலகுதன்மை 15% ஆகும்.

## பகுதி II

## 2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1. வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1. வினாப்பத்திரம் I இல் கட்டமைப்பு

நேரம் 02 மணித்தியாலங்கள் ஆகும்.

- ஐந்து தெரிவுகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும்.
- ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

## 2.1.2. வினாப்பத்திரம் I

1. பின்வருவனவற்றில் நியமக் கூற்றாக அமைவது எது ?
   (1) பொருளியலாளர்கள் இயற்கை வளங்களை புதுப்பிக்கத்தக்க(renewable) வளங்கள் மற்றும் புதுப்பிக்கப்படமுடியா (non renewable) வளங்கள் என வகைப்படுத்துகின்றனர்.
   (2) சுற்றாடல் என்பது அருமையான வளத்திற்கான ஓர் உதாரணமாகும்.
   (3) பொருளாதாரங்கள் வரையறையற்ற விருப்பங்களைப் பூர்த்தி செய்ய வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டுள்ளன.
   (4) இலங்கையின் பணவீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்தில் உள்ளது.
   (5) வருமானம் சமமற்ற முறையில் பங்கீடு செய்யப்படுவது நியாயமற்றதாகும்.

2. நிறை தொழில் மட்டத்திலுள்ள பொருளாதாரமொன்றில் மூலதன முதலீட்டினை (capital investment) அதிகரித்துக் கொள்வதற்கான அமையச் செலவாக அமைவது
   (1) நுகர்வில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   (2) வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
   (3) சேமிப்பில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
   (4) வட்டிவீதத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு
   (5) வெளியீட்டில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

3. "மாறுநிலைப் பொருளாதாரம்" (transition economy) என்பதனால் விபரிக்கப்படுவது
   (1) ஊழியச் செறிவுடைய முறைகளுக்குப் பதிலாக மூலதனச் செறிவுடைய முறைகளை கைக்கொள்ளும் ஒரு நாட்டையாகும்.
   (2) மத்திய திட்டமிடலிலிருந்து சந்தைமுறைமையை நோக்கி நகரும் ஒரு நாட்டையாகும்.
   (3) குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் வரிசையிலிருந்து நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் வரிசைக்கு நகரும் நாட்டையாகும்.
   (4) வர்த்தக நிலுவைப் பற்றாக்குறை நிலையிலிருந்து வர்த்தக நிலுவை மிகைநிலைக்கு மாறும் நாட்டையாகும்.
   (5) பாரம்பரியப் பொருளாதாரத்திலிருந்து மத்திய திட்டமிடற் பொருளாதாரமாக மாறும் ஒரு நாட்டையாகும்.

4. மத்திய திட்டமிடற் பொருளாதார முறைமையின் ஒரு முக்கிய பண்பாக அமைவது
   (1) வளஒதுக்கீடு சார்பு விலைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்.
   (2) பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ள தனியார் சொத்துரிமை காணப்படுவதாகும்.
   (3) பொருளாதாரத்தில் பொருள்களையும் சேவைகளையும் எவ்வாறு சிறப்பாக உற்பத்தி செய்யலாம் என்பது பற்றிய தீர்மானங்கள் அரசாங்க கொள்கை வகுப்பாளர்களால் மேற்கொள்ளப்படுவதாகும்.
   (4) சந்தைப் பொருளாதார முறைமையைவிட அதிசிறந்த பொருளாதார வினைத்திறனை அடைவதாகும்.
   (5) வருமானம் மற்றும் செல்வம் என்பன மிகவும் சமமற்ற விதத்தில் பங்கீடு செய்யப்படுவதாகும்.

5. வரைபடமானது பொருளொன்றின் கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது.




சமநிலைமட்ட வெளியீட்டிற்காக நுகர்வோர் செலுத்தத் தயாராகவுள்ள மொத்த பண அளவினைக் காட்டும் பகுதி எது?
   (1) 0QEP (2) 0TEQ (3) PEK (4) 0KM (5) 0KEQ

6. வரைபடமானது X மற்றும் Y ஆகிய இரு நாடுகளின் உற்பத்தி இயல்தகவு வளையிகளைக் காட்டுகிறது.




இவ்விரு பொருளாதாரங்கள் தொடர்பில் சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது ?

(1) இரு பொருளாதாரங்களும் எப்போதும் சமமான அமையச் செலவைக் கொண்டுள்ளன.

(2) இரு பொருளாதாரங்களும் சமமான எதிர்கால வளர்ச்சிச் சாத்தியங்களைக் கொண்டுள்ளன.

(3) இரு பொருளாதாரங்களிலும் அமையச் செலவுகள் அதிகரிக்கின்றன.

(4) இரு பொருளாதாரங்களும் ஒருபோதும் ஒரே பொருட் சேர்க்கையினை உற்பத்தி செய்ய முடியாது.

(5) நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் X நாடு Y நாட்டை விட உயர்ந்த அமையச் செலவைக் கொண்டுள்ளது.

7. அட்டவணையானது ஐந்து கம்பனிகளின் உற்பத்திப் பொருள்கள் தொடர்பில் அவற்றின் நெருங்கிய பதிலீடுகளின் விலைகள் குறித்த குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி அளவுகளைக் காட்டுகிறது.

| கம்பனி | குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் |
|---|---|
| கம்பனி A | + 3.0 |
| கம்பனி B | + 2.5 |
| கம்பனி C | + 1.0 |
| கம்பனி D | + 0.8 |
| கம்பனி E | + 0.2 |

இத்தரவுகளின் அடிப்படையில் மிக உயர்வான சந்தைச் சக்தியைக் (market power) கொண்டுள்ள கம்பனி எது ?

(1) கம்பனி A (2) கம்பனி B (3) கம்பனி C (4) கம்பனி D (5) கம்பனி E

8. நிறுவனத்தின் மொத்த வருவாய் குறைவடைவது

(1) நிரம்பல் நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.

(2) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்.

(3) கேள்வி நெகிழ்வற்ற நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.

(4) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்.

(5) கேள்வி அலகு நெகிழ்ச்சியுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்.

9. X என்பது ஒரு இழிவுப் பொருளாயின், வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியானது அப்பொருளின்

(1) கேள்வியைக் குறைக்கும், விலையைக்குறைக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்.

(2) கேள்வியைக் குறைக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்.

(3) கேள்வியை அதிகரிக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும்.

(4) நிரம்பலை அதிகரிக்கும், விலையைக் குறைக்கும் அத்துடன் கேள்வித் தொகையை அதிகரிக்கச் செய்யும்.

(5) கேள்வியை அதிகரிக்கும், விலையை அதிகரிக்கும் அத்துடன் கேள்வித் தொகையை அதிகரிக்கச் செய்யும்.

10. தோடம்பழங்களுக்கான சந்தை சமநிலையில் உள்ளதாகக் கருதுக. தோடம்பழங்களின் நிரம்பல் வீழ்ச்சியடையும் அதேவேளை அவற்றுக்கான கேள்வி அதிகரிக்குமாயின், சந்தையில் தோடம்பழங்களின் விலை மற்றும் தொகை பற்றி நீர் என்ன கூறமுடியும் ?
   (1) விலை, தொகை ஆகிய இரண்டுமே அதிகரிக்கும்.
   (2) விலை அதிகரிக்கும் ஆனால் தொகையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றதாகும்.
   (3) விலை, தொகை ஆகிய இரண்டுமே வீழ்ச்சியடையும்.
   (4) தொகை அதிகரிக்கும் ஆனால் விலையில் ஏற்படும் மாற்றம் நிச்சயமற்றதாகும்.
   (5) கேள்வி, நிரம்பல் வளையிகளில் ஏற்படும் மாற்றங்கள் ஒன்றையொன்று ஈடுசெய்து விடுவதால் விலையும் தொகையும் மாறாதிருக்கும்.

11. சிகரட்டுக்களின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதாக உள்ளதெனக் கருதுக. சிகரட் உற்பத்தி மீது கலால்வரி விதிக்கப்படுமாயின் அது பின்வருவனவற்றில் எவ்விதத்தில் விலை, தொகை மற்றும் சிகரட் மீதான நுகர்வோன் செலவு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் ?

| | விலை | தொகை | நுகர்வோரின் செலவீடு |
|---|---|---|---|
| (1) | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (2) | குறையும் | குறையும் | குறையும் |
| (3) | அதிகரிக்கும் | குறையும் | குறையும் |
| (4) | அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் |
| (5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

12. பிள்ளைகளை பகல் வேளைகளில் பராமரிக்கும் (daycare) நிலையங்களுக்கு அனுப்பும் செலவை ஈடுசெய்ய மானியமாகப் பயன்படுத்தக் கூடியவாறு ஒவ்வொரு பெற்றோருக்கும் அரசாங்கம் கூப்பன்களை வழங்குமாயின் பகல் வேளைகளில் பராமரிப்புச் சேவையினை வழங்கும் நிறுவனங்களின் சந்தையில் யாது நிகழுமென நீர் எதிர்பார்ப்பீர் ?
   (1) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கான கேள்வி குறைவதோடு விலையும் வீழ்ச்சியடையும்.
   (2) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கான கேள்வி அதிகரிப்பதோடு விலையும் அதிகரிக்கும்.
   (3) பகல் வேளைப் பராமரிப்புச் சேவை நிரம்பல் அதிகரிப்பதோடு அதன் விலை வீழ்ச்சியடையும்.
   (4) பகல் வேளைப் பராமரிப்புச் சேவை நிரம்பல் வீழ்ச்சியடையும் அதே வேளை விலை அதிகரிக்கும்.
   (5) பகல் வேளைப் பராமரிப்புச் சேவைக்கு நிரந்தரமாக ஒரு பற்றாக்குறை நிலவும்.

13. நுகர்வோன் மிகை பூச்சியமாக மாறத் தேவையான நிபந்தனை எது ?
   (1) கேள்வி பூரண விலை நெகிழ்வுள்ளது.
   (2) கேள்வி பூரண விலை நெகிழ்வற்றது.
   (3) நிரம்பல் பூரண நெகிழ்வுள்ளது.
   (4) நிரம்பல் பூரண நெகிழ்வற்றது.
   (5) கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது சார்பளவில் நிரம்பலின் விலை நெகிழ்ச்சியை விட உயர்வானது.

14. "சாதாரண பொருளொன்றின்" விலை மற்றும் சந்தையில் அதன் விற்பனைத் தொகை இரண்டிலுமே ஏக காலத்தில் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வாக அமைவது.
   (1) பொருளின் மீது விதிக்கப்பட்டிருந்த பயனுறுதிமிக்க உயர்ந்தபட்ச விலையானது நீக்கப்பட்டமை
   (2) பொருளின் உற்பத்தியில் ஏற்படும் தொழில் நுட்ப முன்னேற்றம்
   (3) பொருளின் மீது வரிவிதிக்கப்படல்
   (4) பொருள் உற்பத்தியாளர்களுக்கு மானியமொன்று வழங்கப்படல்
   (5) குறித்த பொருளின் பதிலீடொன்றின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி

15. ஊழியத்தின் எல்லை உற்பத்தியானது ஊழியத்தின் சராசரி உற்பத்திக்குச் சமனாகும் போது
   (1) ஊழியத்தின் எல்லை உற்பத்தி உச்சத்திலிருக்கும்.
   (2) உற்பத்தியின் எல்லைச் செலவு உச்சத்திலிருக்கும்.
   (3) எல்லைச் செலவானது சராசரி மாறும் செலவின் அதிகுறைந்த மட்டத்திற்குச் சமனாகும்.
   (4) சராசரி மொத்தச் செலவு அதிகுறைந்த மட்டத்திலிருக்கும்.
   (5) ஊழியத்தின் மொத்த உற்பத்தி அதன் உச்சத்திலிருக்கும்.

16. நிறுவனமொன்று தனது ஊழியப்படையை 100 இலிருந்து 101 தொழிலாளர்களாக அதிகரிக்கும்போது அதன் நாளாந்தக் கூலியினை ரூபா 600 இலிருந்து ரூபா 650 ஆக அதிகரிக்க வேண்டியுள்ளது. இந்நிலைமையின் கீழ் ஊழியத்தின் நாளொன்றுக்கான எல்லைச் செலவு
   (1) ரூபா 50 ஆகும்.
   (2) ரூபா 650 ஆகும்.
   (3) ரூபா 5 650 ஆகும்.
   (4) ரூபா 60 000 ஆகும்.
   (5) ரூபா 65 650 ஆகும்.

17. நிறுவனமொன்று ஒரு வருட காலப்பகுதியில் பின்வரும் செலவுகளை மேற்கொண்டதாக பொருளியலாளரொருவர் கணிப்பீடு செய்கிறார்.

| செலவு வகை | செலவு (ஆயிரம் ரூபாயில்) |
|---|---|
| கூலிகளும் சம்பளங்களும் | 150 |
| உரிமையாளரின் நேரத்தின் அமையச்செலவு | 40 |
| உற்பத்தி உள்ளீட்டுப் பொருள்கள் | 80 |
| வாடகை | 30 |
| சந்தைப்படுத்தல் செலவுகள் | 20 |
| வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 25 |
| உரிமையாளர் வழங்கிய நிதிக்காக இழந்தவட்டி வருவாய் | 15 |

இத்தகவல்களின் அடிப்படையில்,
கணக்கியலாளரொருவரால் கணிப்பிடப்படும் மொத்தச் செலவைவிட பொருளியலாளரால் கணிப்பிடப்படும் மொத்தச் செலவு எந்த அளவினால் கூடுதலாக இருக்கும் ?

(1) ரூபா 30 500
(2) ரூபா 55 000
(3) ரூபா 85 000
(4) ரூபா 305 000
(5) ரூபா 360 000

18. A என்னும் நிறுவனம் தனது வேலையாட்களை 250 இலிருந்து 200 ஆகக் குறைக்கிறது. இதன் விளைவாக அதன் வெளியீடானது நாளொன்றுக்கு 5 000 அலகுகளிலிருந்து 4 800 அலகுகளாக வீழ்ச்சியடைகிறது. B என்னும் நிறுவனம் தனது வேலையாட்களை 800 இலிருந்து 1 000 ஆக அதிகரிக்கிறது. இதன் விளைவாக நிறுவனத்தின் வெளியீடு நாளொன்றுக்கு 2 000 அலகுகளிலிருந்து 2 200 அலகுகளாக அதிகரிக்கிறது. இவ்விரு நிறுவனங்களிலுமுள்ள ஊழியர்களின் ஊழிய உற்பத்தித்திறனில் எத்தகைய மாற்றம் ஏற்படும் ?

| | நிறுவனம் A யின் உற்பத்தித்திறன் | நிறுவனம் B யின் உற்பத்தித்திறன் |
|---|---|---|
| (1) | குறையும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | குறையும் |
| (3) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (4) | குறையும் | குறையும் |
| (5) | அதிகரிக்கும் | மாறாதிருக்கும் |

19. ஒரு கைத்தொழில் பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்களைக் கொண்டிருப்பதோடு ஒவ்வொரு நிறுவனமும் ஓரினத்தன்மை வாய்ந்த பொருள்களை உற்பத்தி செய்கின்றது. இந்நிலையில் ஒவ்வொரு தனிப்பட்ட நிறுவனமும் கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் கேள்வி வளையியை எதிர்நோக்குமாயின் அதனை பின்வருவனவற்றில் எது விளக்கக் கூடும் ?

(1) எல்லா நிறுவனங்களும் விலையை ஏற்போராகத் தொழிற்படுகின்றன.
(2) பிரவேச மற்றும் வெளியேற்ற சுதந்திரம்.
(3) உற்பத்தி வளங்கள் பூரண அசைவுள்ளன.
(4) நுகர்வோர் செலவிடுவதற்காகக் கிடைக்கும் பணத்தொகை வரையறைக்குட்பட்டிருத்தல்.
(5) நுகர்வோரின் சந்தைபற்றிய அறிவு பூரணமற்றிருத்தல்.

20. நிறைபோட்டி நிறுவனமொன்று வாராந்தம் 200 அரிசிப் பொதிகளை உற்பத்தி செய்கிறது. இவை ஒவ்வொன்றும் ரூபா 250 விலைக்கு விற்கப்படுகின்றன. நிறுவனத்தின் செலவுகளை அட்டவணை காட்டுகிறது.

| வகை | செலவு (ரூபா) |
|---|---|
| மொத்த நிலையான செலவு | 20 000 |
| மொத்த மாறுஞ் செலவு | 40 000 |
| எல்லைச் செலவு | 250 |

குறுங்காலத்தில் இந்நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்த அல்லது நட்டத்தை இழிவு படுத்த யாது செய்ய வேண்டும் ?

(1) உற்பத்தியை முற்றாக நிறுத்த வேண்டும்.
(2) உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.
(3) உற்பத்தியை குறைக்க வேண்டும்.
(4) விலையைக் குறைக்க வேண்டும்.
(5) உற்பத்தியைத் தற்போதைய மட்டத்தில் பேண வேண்டும்.

21. பின்வருவனவற்றில் மொத்த மெய் உள்நாட்டு உற்பத்தியின் அளவில் பாதிப்பை **ஏற்படுத்தாதது** எது ?

(1) நுகர்வோனொருவன் தனது தனிப்பட்ட உபயோகத்திற்காக புதிய மோட்டார் வண்டியொன்றை கொள்வனவு செய்தல்

(2) அரசாங்கம் தனது பாதுகாப்பு கற்கை நிறுவனத்திற்காக புதிய பேருந்து வண்டியொன்றைக் கொள்வனவு செய்தல்

(3) நுகர்வோனொருவன் சிகையலங்கார சேவையினைப் பெற்றுக் கொள்ளல்

(4) ஒரு முதலீட்டாளன் அரியவகை ஓவியமொன்றை ஏலத்தில் கொள்வனவு செய்தல்

(5) ஒரு நிறுவனம் தனது தொழிற்சாலைக்காக புதிய மின்பிறப்பாக்கியொன்றைக் கொள்வனவு செய்தல்

22. பொருளாதாரமொன்றின் தன்னிச்சையான நுகர்வு ரூபா 400 எனவும் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 எனவுங் கொள்க. செலவிடத்தக்க வருமானம் ரூபா 1 200 வினால் அதிகரிக்குமாயின் நுகர்வுச் செலவீடு அதிகரிக்கும் அளவு

(1) ரூபா 1 600 ஆகும். (2) ரூபா 1 360 ஆகும். (3) ரூபா 1 200 ஆகும.

(4) ரூபா 960 ஆகும். (5) ரூபா 400 ஆகும்.

23. தொகை வரியினை மாத்திரம் கொண்டுள்ள மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.25 ஆகக் காணப்படுமாயின் அரசாங்க செலவீட்டில் ஏற்படும் ரூபா 80 பில்லியன் அதிகரிப்பானது வெளியீட்டில் ஏற்படுத்தக் கூடிய உச்ச அதிகரிப்பினளவு

(1) ரூபா 80 பில்லியனாகும்.

(2) ரூபா 80.25 பில்லியனாகும்.

(3) ரூபா 160 பில்லியனாகும்.

(4) ரூபா 240 பில்லியனாகும்.

(5) ரூபா 320 பில்லியனாகும்.

24. அரச துறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் நுகர்வுச்சார்பு $C = 30 + 0.7\,Y$ ஆகவுள்ளது. (இங்கு C என்பது நுகர்வாகும், Y என்பது வருமானமாகும்.) சமநிலை வருமான மட்டம் ரூபா 300 மில்லியனாக இருப்பின் முதலீட்டு மட்டத்தின் அளவு

(1) ரூபா 60 மில்லியனாகும். (2) ரூபா 100 மில்லியனாகும். (3) ரூபா 210 மில்லியனாகும்.

(4) ரூபா 240 மில்லியனாகும். (5) ரூபா 300 மில்லியனாகும்.

25. பின்வரும் வரைபடம் அரச துறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றின் சேமிப்பு மற்றும் முதலீட்டு வளையிகளைக் காட்டுகிறது.




வெளியீட்டின் சாத்தியவள மட்டம் $Y_p$ யாகும். எனவே சாத்தியவள வெளியீட்டிற்கும் உண்மையான வெளியீட்டிற்கும் இடையிலான இடைவெளியானது

(1) LG இனால் அளவிடப்படும்.

(2) GH இனால் அளவிடப்படும்.

(3) JH இனால் அளவிடப்படும்.

(4) KJ இனால் அளவிடப்படும்.

(5) HK இனால் அளவிடப்படும்.

26. குறித்த ஒரு ஆண்டில் ஒரு நாட்டின் நுகர்வு, முதலீடு, மற்றும் அரச கொள்வனவுகள் என்பவற்றின் மீதான செலவீடுகள் அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 103 சதவீதமாகக் காணப்பட்டன. இந்நிலை சாத்தியமாவது

(1) பணநிரம்பல் அதிகரிக்கப்பட்டால் மட்டுமேயாகும்.

(2) தேறிய ஏற்றுமதிகள் நேர்க்கணியமாக இருந்தால் மட்டுமேயாகும்.

(3) தேறிய ஏற்றுமதிகள் எதிர்க்கணியமாக இருந்தால் மட்டுமேயாகும்.

(4) அரசாங்கம் பாதீட்டில் ஒரு மிகைநிலையினைக் கொண்டிருந்தால் மட்டுமேயாகும்.

(5) அரசாங்கம் சமநிலைப் பாதீட்டைக் கொண்டிருந்தால் மட்டுமேயாகும்.

27. வங்கி முறைமையானது ஒரேயொருவங்கியை மாத்திரம் கொண்டுள்ள மூடப்பட்ட பொருளாதாரமொன்றைக் கருதுக. இவ்வங்கியானது 10% காசொதுக்கு வீதத்தைக் கொண்டுள்ளது. வாடிக்கையாளர்கள் ரூபா 10 000 பணத்தை வைப்பில் இடுகின்றனர். புழக்கத்திலுள்ள தாள் குற்றி நாணயங்களின் அளவில் மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை எனக் கருதினால் இவ்வங்கி வழங்கக் கூடிய கடனின் உச்ச அளவு யாது ?

(1) ரூபா 1 000 ஆகும். (2) ரூபா 9 000 ஆகும். (3) ரூபா 10 000 ஆகும்.
(4) ரூபா 90 000 ஆகும். (5) ரூபா 100 000 ஆகும்.

28. கெயின்ஸியக் கோட்பாட்டின்படி பின்வருவனவற்றில் எச்சந்தர்ப்பத்தில் பணத்திற்கான கேள்வியில் ஒரு அதிகரிப்பு ஏற்படும் ?

| | மெய்வருமானம் | விலை மட்டம் | வட்டிவீதம் |
|---|---|---|---|
| (1) | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (2) | மாறாது | மாறாது | அதிகரிப்பு |
| (3) | அதிகரிப்பு | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (4) | மாறாது | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (5) | வீழ்ச்சி | மாறாது | அதிகரிப்பு |

29. பொருளாதாரமானது நிறைதொழில் மட்டத்தில் உள்ளதாகக் கருதுக. கொள்கை வகுப்பாளர்கள் விலை மட்டத்தை உறுதியாகப் பேண விரும்பும் அதேவேளை முதலீட்டைப் பெருமளவு ஊக்குவிக்க விரும்புகின்றனர். இக்குறிக்கோளை அடைவதற்கு இறைக்கொள்கை மற்றும் பணக்கொள்கை என்பவற்றின் பின்வரும் சேர்க்கைகளில் மிகவும் பொருத்தமானது எது ?

| | பணக்கொள்கை | இறைக்கொள்கை |
|---|---|---|
| (1) | மாற்றமில்லை | சுருக்கம் |
| (2) | விரிவாக்கம் | மாற்றமில்லை |
| (3) | விரிவாக்கம் | சுருக்கம் |
| (4) | விரிவாக்கம் | விரிவாக்கம் |
| (5) | சுருக்கம் | விரிவாக்கம் |

30. பின்வரும் கொள்கைத் தெரிவுகளில் எது பொருளாதாரத்தைப் பின்னடைவிலிருந்து (recession) மீட்சியடையச் செய்ய வடிவமைக்கப்பட்ட பணக்கொள்கை மற்றும் இறைக்கொள்கைச் சேர்க்கையினைப் பிரதிபலிக்கிறது ?

(1) வரிகள் மற்றும் பணநிரம்பல் ஆகிய இரண்டையும் குறைத்தல்
(2) வரிகள் மற்றும் பணநிரம்பல் ஆகிய இரண்டையும் அதிகரித்தல்
(3) அரச செலவினங்களை அதிகரிப்பதுடன் மத்திய வங்கி வட்டிவீதங்களைக் குறைத்தல்
(4) வரிகள் மற்றும் கழிவீட்டு வீதங்கள் ஆகிய இரண்டையும் குறைத்தல்
(5) குறைநிலை பாதீட்டை மேற்கொள்வதுடன் பிணையங்களை திறந்த சந்தையில் விற்பனை செய்தல்

31. பொருளாதாரமொன்றில் வெளியீட்டின் அளவு வருடாந்தம் 2% இனால் அதிகரிக்கும் அதேவேளை பணத்தின் அளவு 5% இனால் உயர்கிறது. பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம் மாறாதாயின் விலை மட்டத்தில் ஏற்படும் அண்ணளவான அதிகரிப்பு யாது ? தேசிய வெளியீட்டின் பணப் பெறுமதியின் அதிகரிப்பு யாது ?

| | விலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு | தேசியவெளியீட்டின் பணப்பெறுமதியின் அதிகரிப்பு |
|---|---|---|
| (1) | 2% | 5% |
| (2) | 2% | 7% |
| (3) | 2.5% | 10% |
| (4) | 3% | 5% |
| (5) | 3% | 7% |

32. பின்வரும் அட்டவணையானது பொருளாதாரமொன்றின் 2008 - 2012 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெயரளவுப் பெறுமதிக்கான சுட்டெண்களைத் தருகிறது.

| ஆண்டு | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெயரளவுப் பெறுமதி GDP |
|---|---|
| 2008 | 100 |
| 2009 | 96 |
| 2010 | 90 |
| 2011 | 85 |
| 2012 | 83 |

மேற்படி தரவுகளிலிருந்து 2008 - 2012 காலப்பகுதியில் எந்தமாறியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக முடிவு செய்யலாம் ?

(1) மொத்தக் கேள்வி
(2) மெய் வெளியீடு
(3) பணவீக்க வீதம்
(4) அரசாங்கத்தின் பாதீட்டுக் குறைநிலை
(5) வர்த்தக நிலுவையின் குறைநிலை

. புதிய புகையிரத மார்க்கமொன்றை உருவாக்குவதனால் ஏற்படும் பின்வரும் விளைவுகளில் எதனை நேர்க்கணிய வெளிவாரியாக கருதலாம் ?

(1) சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(2) புகையிரதத் திணைக்களத்தின் இலாபத்தில் ஏற்படும் அதிகரிப்பு
(3) குறித்த மார்க்கத்தில் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பெறப்படும் வருவாய் அதிகரிப்பு
(4) குறித்த மார்க்கத்தில் பயணிப்பதனால் பயணிகளின் பயணநேர மீதப்படுத்தல்
(5) குறித்த மார்க்கத்திற்கு அருகே அமைந்துள்ள மெய்ச் சொத்துக்களின் பெறுமதி குறைதல்

4. ஒரு "மேன்மைப் பொருள்" என்பது

(1) ஒவ்வொருவரினதும் தகைமையின் அடிப்படையில் நுகர்வோருக்கு வழங்கப்படும் பொருளாகும்.
(2) தாராள சந்தையினால் வழங்கப்படுமாயின் நுகர்வோர் மிகச் சிறியளவே கொள்வனவு செய்வார்கள் என அரசாங்கம் கருதும் பொருளாகும்.
(3) தாராள சந்தையினால் வழங்கப்படுமாயின் நுகர்வோர் தேவைப்படும் அளவைவிட மிக அதிகமான அளவில் கொள்வனவு செய்வார்கள் என அரசாங்கம் கருதும் பொருளாகும்.
(4) பொருளை நுகர்வதனால் ஒரு நுகர்வோன் பெறும் நன்மையினை எல்லா நுகர்வோருக்கும் விரிவாக்கம் செய்யப்படத்தக்க பொருளாகும்.
(5) பொருளை நுகர்வதனால் பெறப்படும் தனியார் நன்மைகள் சமூக நன்மைகளை விடக் கூடுதலாக உள்ள பொருளாகும்.

5. குறைந்து செல்லும் வரி (regressive tax) முறையின் வரைவிலக்கணமாக அமைவது

(1) எல்லா வரி இறுப்பாளர்களும் தமது வருமானங்களின் முழுக் தொகையின் சமமான அளவுகளை வரியாகச் செலுத்துவர்
(2) குறைந்த வருமானம் பெறுபவர்களுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வருமானம் பெறுவோர் தமது வருமானத்தின் குறைவான ஒரு சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்
(3) உயர்ந்த வருமானப் பெறுவோர், குறைந்த வருமானம் பெறுபவர்களைவிடக் குறைவான பணத்தொகையை வரியாகச் செலுத்துகின்றனர்.
(4) உயர்ந்த வருமானம் பெறுவோர் குறைந்த வருமானம் பெறுவோரைவிட அதிகமான பணத்தொகையை வரியாகச் செலுத்துகின்றனர்.
(5) வரிச்சுமையானது பின்னோக்கி நகர்த்தப்படலாம்.

36. பின்வரும் அட்டவணையானது A மற்றும் B ஆகிய இரு நாடுகள் ஓரலகு வளச்சேர்க்கையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக் கூடிய X மற்றும் Y ஆகிய இரு பொருள்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.

| பொருள் | நாடு A | நாடு B |
|---|---|---|
| X | 100 | 300 |
| Y | 200 | 400 |

ஒவ்வொரு நாடும் தான் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள பொருளின் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடையுமாயின் வர்த்தகத்தின் மூலம் நன்மையடைய இரு நாடுகளுக்கும் பொருத்தமான பரிமாற்ற வீதமாக அமைவது

(1) 1 X = 1 Y (2) 1 X = 1.3 Y (3) 1 X = 1.5 Y (4) 1 X = 2 Y (5) 1 X = 3 Y

37. இலங்கையிலுள்ள உற்பத்தி நிறுவனமொன்று ஐக்கிய அமெரிக்காவிலுள்ள நிறுவனமொன்றிற்கு 10 மில்லியன் டொலர் பெறுமதியான டயர்களை ஏற்றுமதி செய்கிறது.

இரட்டைப்பதிவு அடிப்படையில் கணக்குப்பதிவை மேற்கொள்ளும்போது இக் கொடுக்கல் வாங்கலினால் சென்மதி நிலுவைக் கணக்குகளின் எந்த இரு கணக்குகளில் தாக்கங்கள் ஏற்படும் ?

(1) நடைமுறைக்கணக்கின் ஏற்றுமதிகள் மற்றும் மூலதனக் கணக்கின் மூலதன மாற்றல்கள்
(2) நடைமுறைக்கணக்கின் ஏற்றுமதிகள் மற்றும் நடைமுறைக்கணக்கின் வருமானங்கள்
(3) நடைமுறைக்கணக்கின் ஏற்றுமதிகள் மற்றும் நிதிக்கணக்கின் சொத்தொதுக்குகள்
(4) நிதிக்கணக்கின் பொறுப்புகள் மற்றும் நிதிக்கணக்கின் வதியாதோர் சொத்துகள்
(5) நடைமுறைக்கணக்கின் ஏற்றுமதிகள் மற்றும் நிதிக்கணக்கின் வதியாதோர் மீதான உரிமைகள்

38. நாடொன்றின் புள்ளி விபரத் திணைக்களம் தனது சென்மதி நிலுவைக் கணக்கின் இறுதி வடிவத்தினை முன்வைக்க விரும்புகிறது. அது நடைமுறைக்கணக்கு நிலுவை, மூலதனக் கணக்கு நிலுவை, மற்றும் நிதிக்கணக்கு நிலுவை என்பவற்றைக் கணிப்பீடு செய்துள்ளது. திணைக்களத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய தேவைப்படும் மேலதிக தகவல் எது ?

(1) வெளிநாட்டு நாணய ஒதுக்குகளில் ஏற்படும் மாற்றம்
(2) வெளிநாட்டு உதவி
(3) வழுக்களும் விடுபாடுகளும்
(4) உத்தேச நோக்க நாணயப்பாய்ச்சல்
(5) பட்டியலிடப்பட்ட முதலீடுகளில் ஏற்படும் மாற்றம்

39. நாடொன்றின் வர்த்தக மாற்று விகிதம் தற்போது 150 (அடிப்படையாண்டு 2010 = 100) ஆகவுள்ளது. 2010 இலிருந்து நாடு அதன் ஏற்றுமதிகளுக்காகப் பெற்ற சராசரி விலைகள் 20% இனால் அதிகரித்தன. எனவே இந்நாடு தனது இறக்குமதிகளுக்குச் செலுத்திய விலைகள் மாற்றமடைந்திருக்க வேண்டியது

(1) – 50% இனாலாகும். (2) – 25% இனாலாகும். (3) – 20% இனாலாகும்.
(4) + 20% இனாலாகும். (5) + 25% இனாலாகும்.

40. ஐக்கிய அமெரிக்காவில் நகர்வோர் கொள்வனவுகளை பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய தெரிவுசெய்யப்பட்ட ஒரு கூடைப் பொருள்கள் $ 120 விலையுடையன. இதே கூடையில் உள்ளடங்கும் பொருள்கள் இலங்கையில் ரூபா 9 600 விலையுடையதாகக் காணப்படுகின்றன. இதிலிருந்து நாம் உய்த்தறியக் கூடியது

(1) ரூபா 25% மிகைமதிப்புடையதாக உள்ளது.
(2) ரூபா 25% குறைமதிப்புடையதாக உள்ளது.
(3) கொள்வனவுச் சக்தி சமமதிப்பு நாணய மாற்று வீதம் டொலரொன்றுக்கு ரூபா 96 ஆகும்.
(4) கொள்வனவுச் சக்தி சமமதிப்பு நாணய மாற்று வீதம் டொலரொன்றுக்கு ரூபா 80 ஆகும்.
(5) கொள்வனவுச் சக்தி சமமதிப்பு நாணய மாற்று வீதம் ரூபாவொன்றுக்கு $ 0.10 டொலராகும்.

41. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடானது

(1) உள்ளூர் கூலிமட்டங்களில் ஒரு வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம்.
(2) இப்பொருளாதாரங்களின் வரி வருவாய்களில் ஒரு வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம்.
(3) உள்ளூர் வாசிகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள நுகர்வுப் பொருள்களின் எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம்.
(4) வெளிநாட்டு முதலீடுகளில் இருந்து பெறப்படும் தேறிய வருமானப் பாய்ச்சல்களில் ஒரு பாதகமான நிலையை ஏற்படுத்தலாம்.
(5) சென்மதி நிலுவையின் முலதனக் கணக்கின் ஒரு பாதகமான நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

42. நாடொன்றில் தலைக்குரிய வருமானமட்டம் சார்பளவில் குறைவாக உள்ளபோது, அதனோடு இணைந்ததாக பொதுவாக அவதானிக்கப்படுவது

(1) ஓர் உயர் வீதத்திலான சேமிப்பு
(2) ஒரு குறைந்த வீதத்திலான பொருளாதார வளர்ச்சி
(3) ஒரு குறைந்த வீதத்திலான பணவீக்கம்
(4) ஒரு குறைந்த வீதத்திலான சனத்தொகை வளர்ச்சி
(5) ஓர் உயர் வீதத்திலான தொழில்வாய்ப்பு

43. மிகத் துரிதமான பொருளாதார வளர்ச்சியினை பெரும்பாலும் ஏற்படுத்தவல்ல ஒரு காரணிச் சேர்க்கையாக அமைவது

(1) தொழில் வாய்ப்புகளில் ஏற்படும் ஓர் அதிகரிப்பும் சென்மதி நிலுவையில் குறை நிலை அதிகரிப்பும்.
(2) முதலீட்டு மட்டம் மற்றும் தொழில்புரியும் சனத்தொகையின் அளவு என்பவற்றில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(3) வருமானம் சமமாகப் பகிரப்படுவதுடன் மாற்றல் செலுத்தல்கள் உயர்மட்டத்தில் இருத்தல்
(4) பணவீக்கம் துரிதமடைதல் மற்றும் தேசிய கடன்கள் அதிகரித்தல்
(5) வெளிநாட்டு நேரடி முதலீடும் வட்டி வீதமும் அதிகரித்தல்

**2.1.3 வினாப்பத்திரம் I இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

| வினா இலக்கம் | விடை | வினா இலக்கம் | விடை |
|---|---|---|---|
| 01. | 5 | 26. | 3 |
| 02. | 1 | 27. | 4 |
| 03. | 2 | 28. | 3 |
| 04. | 3 | 29. | 5 |
| 05. | 5 | 30. | 3 |
| 06. | 5 | 31. | 4 |
| 07. | 5 | 32. | 1 |
| 08. | 4 | 33. | 1 |
| 09. | 5 | 34. | 2 |
| 10. | 2 | 35. | 2 |
| 11. | 4 | 36. | 3 |
| 12. | 2 | 37. | 5 |
| 13. | 1 | 38. | 3 |
| 14. | 1 | 39. | 3 |
| 15. | 3 | 40. | 4 |
| 16. | 3 | 41. | 4 |
| 17. | 2 | 42. | 2 |
| 18. | 2 | 43. | 2 |
| 19. | 5 | 44. | 2 |
| 20. | 5 | 45. | 1 |
| 21. | 4 | 46. | 2 |
| 22. | 4 | 47. | 1 |
| 23. | 5 | 48. | 2 |
| 24. | 1 | 49. | 1 |
| 25. | 2 | 50. | 2 |

சரியான ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் ஆகும்.

### 2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கபட்டுள்ளமை பற்றிய அவதானிப்புகள்




மேலுள்ள வரைபின் படி, வினாப்பத்திரம் I இன் 27 குறைந்த இலகுத்தன்மையைக் கொண்ட வினா 27 ஆகும். அதன் இலகுத்தன்மை 12.7% ஆகும். அதாவது பரீட்சார்த்திகளில் 12.7% அளவிலான குறைந்த சதவீத்தினர் 27ஆவது வினாவிற்குச் சரியாக விடையளித்துள்ளனர். அவ்வாறே கூடிய இலகுதன்மையைக் கொண்ட வினாவாக வினா 04 அமைவதுடன், அதன் இலகுதன்மை 81.3% ஆகும். அதாவது பரீட்சார்த்திகளில் 81.3% சதவீதத்தினர் 04 ஆவது வினாவிற்குச் சரியாக விடையளித்துள்ளனர்.

முழு வினாப்பத்திரத்தையும் நோக்கும்போது வினாப்பத்திரம் I இற்கான முழு இலகுதன்மை 56.45% ஆகும்.

## 2.1.5 வினாப்பத்திரத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவுசெய்துள்ள விதம் - சதவீத அடிப்படையில்

| வினா இலக்கம் | சரியான விடை | ஒவ்வொரு விடையையும் தெரிவுசெய்துள்ள மாணவர்களின் சதவீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | Missing |
| 1 | 5 | 10.78 | 7.17 | 8.50 | 10.33 | **62.83** | 0.33 |
| 2 | 1 | **61.11** | 10.83 | 13.83 | 10.28 | 3.83 | 0.11 |
| 3 | 2 | 10.17 | **57.67** | 9.72 | 10.33 | 11.89 | 0.22 |
| 4 | 3 | 6.33 | 4.94 | **81.33** | 5.28 | 1.83 | 0.28 |
| 5 | 5 | 44.28 | 6.28 | 33.33 | 3.06 | **12.83** | 0.22 |
| 6 | 5 | 21.39 | 4.61 | 4.11 | 12.72 | **56.61** | 0.56 |
| 7 | 5 | 24.44 | 3.06 | 14.89 | 4.50 | **52.67** | 0.44 |
| 8 | 4 | 7.06 | 18.17 | 17.89 | **44.33** | 12.06 | 0.50 |
| 9 | 5 | 13.06 | 10.50 | 20.72 | 13.78 | **41.61** | 0.33 |
| 10 | 2 | 17.44 | **65.50** | 3.67 | 5.50 | 7.72 | 0.17 |
| 11 | 4 | 2.00 | 3.33 | 34.33 | **50.67** | 9.44 | 0.22 |
| 12 | 2 | 11.28 | **30.56** | 36.06 | 11.06 | 10.83 | 0.22 |
| 13 | 1 | **33.50** | 26.56 | 9.78 | 11.33 | 18.28 | 0.56 |
| 14 | 1 | **38.22** | 27.00 | 10.44 | 8.83 | 15.17 | 0.33 |
| 15 | 3 | 8.11 | 10.33 | **36.94** | 15.06 | 28.28 | 1.28 |
| 16 | 3 | 61.28 | 7.67 | **19.61** | 2.89 | 8.17 | 0.39 |
| 17 | 2 | 8.22 | **52.56** | 15.89 | 12.11 | 9.94 | 1.28 |
| 18 | 2 | 23.39 | **43.11** | 6.00 | 6.28 | 21.06 | 0.17 |
| 19 | 5 | 24.78 | 29.28 | 16.39 | 14.22 | **15.11** | 0.22 |
| 20 | 5 | 11.33 | 32.22 | 10.00 | 5.94 | **39.89** | 0.61 |
| 21 | 4 | 6.07 | 8.17 | 32.72 | **48.06** | 4.00 | 0.28 |
| 22 | 4 | 11.50 | 22.61 | 10.06 | **47.44** | 7.56 | 0.83 |
| 23 | 5 | 12.00 | 12.94 | 11.94 | 15.33 | **46.89** | 0.89 |
| 24 | 1 | **57.06** | 6.44 | 11.50 | 19.72 | 4.28 | 1.00 |
| 25 | 2 | 5.67 | **30.72** | 22.17 | 24.94 | 16.06 | 0.44 |
| 26 | 3 | 18.06 | 21.72 | **29.00** | 25.33 | 5.17 | 0.72 |
| 27 | 4 | 11.17 | 63.83 | 4.78 | **12.67** | 7.06 | 0.50 |
| 28 | 3 | 14.22 | 10.00 | **40.78** | 23.50 | 10.83 | 0.67 |
| 29 | 5 | 22.78 | 24.06 | 21.89 | 16.56 | **13.83** | 0.89 |
| 30 | 3 | 10.50 | 10.00 | **50.78** | 5.78 | 22.33 | 0.61 |
| 31 | 4 | 18.94 | 16.11 | 33.61 | **14.00** | 15.83 | 1.50 |
| 32 | 1 | **13.22** | 42.72 | 25.78 | 8.22 | 9.44 | 0.61 |
| 33 | 1 | **38.72** | 8.94 | 11.78 | 33.72 | 6.28 | 0.56 |
| 34 | 2 | 2.33 | **13.00** | 11.72 | 47.83 | 24.44 | 0.67 |
| 35 | 2 | 7.72 | **43.78** | 14.44 | 18.94 | 14.39 | 0.72 |
| 36 | 3 | 13.83 | 35.50 | **21.83** | 20.28 | 7.28 | 1.28 |
| 37 | 5 | 11.06 | 46.61 | 20.00 | 4.22 | **17.50** | 0.61 |
| 38 | 3 | 13.28 | 8.78 | **60.33** | 6.83 | 10.17 | 0.61 |
| 39 | 3 | 12.28 | 15.11 | **32.22** | 23.94 | 14.17 | 2.28 |
| 40 | 4 | 4.89 | 9.17 | 8.56 | **71.56** | 5.00 | 0.83 |
| 41 | 4 | 10.72 | 24.11 | 11.50 | **31.78** | 21.17 | 0.72 |
| 42 | 2 | 8.67 | **57.00** | 15.44 | 9.11 | 8.94 | 0.83 |
| 43 | 2 | 7.44 | **71.28** | 9.72 | 3.39 | 7.72 | 0.44 |
| 44 | 2 | 12.67 | **36.00** | 13.06 | 25.78 | 11.56 | 0.94 |
| 45 | 1 | **37.72** | 15.17 | 19.11 | 13.72 | 13.44 | 0.83 |
| 46 | 2 | 21.78 | **36.06** | 9.11 | 14.50 | 17.56 | 1.00 |
| 47 | 1 | **27.33** | 27.33 | 10.44 | 9.44 | 4.78 | 0.67 |
| 48 | 2 | 25.11 | **29.11** | 20.00 | 10.33 | 14.94 | 0.50 |
| 49 | 1 | **41.67** | 14.78 | 16.78 | 17.28 | 8.22 | 1.28 |
| 50 | 2 | 19.50 | **49.06** | 10.28 | 13.44 | 7.33 | 0.39 |

- ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான தெரிவை மேற்கொண்ட மாணவர் சதவீதம் நிழற்றப்பட்டுள்ளது.
- வினாவிற்கு விடையைத் தெரிவு செய்யாத அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட தெரிவுகளை மேற்கொண்ட மாணவர்களின் சதவீதம் Missing எனக் காட்டப்பட்டுள்ளது.

**2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்**

- ⋆ முழுமையாக நோக்கும் போது, பல்தேர்வு வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரம் I இல் 01, 02, 04, 10, 38, 40, 43 ஆகிய வினாக்களுக்குப் பரீட்சார்த்திகளில் 60% இற்கு மேற்பட்ட சதவீதத்தினர் சரியாக விடையளித்துள்ளனர்.

- ⋆ 05, 12, 13, 14, 15, 16, 19, 25, 26, 27, 29, 31, 32, 33, 34, 36, 37, 39, 41, 44, 45, 46, 48 ஆகிய வினாக்களுக்கு மொத்தப் பரீட்சார்த்திகளுள் 40% இற்கும் குறைவான சதவீதத்தினரே சரியாக விடையளித்துள்ளனர்.

- ⋆ 5 ஆம் வினாவுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்துள்ளோர் 12.83% சதவீதத்தினர் ஆவர். இவ்வினாவில் பண்டம் ஒன்றின் சந்தை சமநிலை தொடர்பாகத் தரப்பட்ட வரைபடத்தின் ஊடாக சமநிலைத் தொகையில் நுகர்வோர் செலுத்தத் தயாராகவுள்ள மொத்தப் பண அளவினைக் கண்டறிதல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நுகர்வோர் மிகை, சமநிலை மட்டத்தில் நுகர்வோர் செலவு ஆகிய விடைகளில் பல பரீட்சார்த்திகள் கவனம் செலுத்தியுள்ளனர். அதன் காரணமாக சந்தை சமநிலை மட்டத்தில் நுகர்வோர் மிகை, நுகர்வோர் செலவு, நுகர்வோர் செலுத்தத் தயாராகவுள்ள பணத்தின் அளவு ஆகியவற்றைக் கணிப்பது தொடர்பான சரியான விளக்கத்தினை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

- ⋆ 12 ஆம் வினா நுகர்வோருக்கு மானியம் வழங்குவதனால் சந்தை சமநிலையில் ஏற்படும் பாதிப்பினைச் சரியாக இனங்காண்பதில் கவனம் செலுத்துவதாகும். பரீட்சார்த்திகளில் 69% சதவீதத்தினர் பிழையான விடையைத் தெரிவு செய்துள்ளமையிலிருந்து நுகர்வோருக்கு வழங்கப்படும் மானியங்கள் நேரடியாக பாதிப்புச் செலுத்துவது கேள்வியிலா நிரம்பலிலா என்பதனை இனங்காண முடியாமையால் சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பன மற்றமடையும் விதத்தினை தீர்மானித்துக்கொள்ள முடியாது போனமையும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

- ⋆ 13 ஆம் வினா நுகர்வோர் மிகை, உற்பத்தியாளர் மிகை என்பன கேள்வி, நிரம்பல் நெகிழ்ச்சிக்கிடையே பகிரப்படும் விதத்தினைப் பரீட்சிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. அது தொடர்பான விளக்கமின்மை காரணமாக பரீட்சார்த்திகளில் 66% சதவீதத்தினர் பிழையான பிரதிபலிப்பினைக் காட்டியுள்ளனர். அதனால் அது தொடர்பான தெளிவான விளக்கத்தினை மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயன்முறை ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

- ⋆ 14 ஆம் வினா அரச தலையீடு காரணமாக சந்தையில் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்வதில் கவனம் செலுத்தியுள்ளது. அதில் பரீட்சார்த்திகளில் 62% சதவீதத்தினர் சரியான விடையத் தெரிவு செய்யத் தவறியுள்ளனர். அதனால் அரசினால் சந்தையின் மீது ஏற்படுத்தப்படுகின்ற பாதிப்பையும் அவற்றை நீக்கும் போது ஏற்படும் விளைவுகள் தொடர்பாகவும் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

- ⋆ 16 ஆம் வினா உற்பத்தி நிறுவனம் ஒன்றின் மாறும் உள்ளீடுகள், எல்லைச் செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை ஆராய்வதில் கவனம் செலுத்தியுள்ளது. அது மாறும் உள்ளீடுகளின் விலை அதிகரிக்கும் போது மொத்தச் செலவை சரியாக மதிப்பிடுவதன் மூலம் எல்லைச் செலவைக் கணிக்கத் தவறியதனால் பரீட்சார்த்திகளில் 80% பிழையான விடையைத் தெரிவு செய்துள்ளனர். அதனால் மாறும் காரணிகளின் விலை மாறும்போது எல்லைச் செலவு மாற்றமடையும் விதம் தொடர்பான விளக்கத்தினை மாணவர்களுக்கு வழங்குதல் முக்கியமாகும்.

- ⋆ 19 ஆம் வினா உற்பத்தி நிறுவனம் ஒன்றின் கேள்வி வளையியின் அமைவு சந்தை நடவடிக்கைகளை ஆராய்வதில் கவனம் செலுத்தியுள்ளது. அதன்போது நிறுவனத்தின் கேள்வி வளையி கிடையாகக் கணப்படுவதற்கும் தொழிலின் கேள்வி வளையி கீழ்நோக்கிச் சரிந்து செல்வதற்கும் ஏதுவான காரணிகளைச் சரியாகத் தீர்மானிக்க முடியாமை காரணமாக பரீட்சர்த்திகளில் 85% சதவீதத்தினர் பிழையான விடையைத் தெரிவு செய்துள்ளனர்.

- ⋆ 25 ஆம் வினா எளிய பொருளாதாரம் ஒன்றின் சமநிலை வெளியீட்டு மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு வெளியீட்டு இடைவெளியை தீர்மானிப்பதற்கான ஆற்றலைப் பரீட்சிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. அதன் போது பரீட்சார்த்திகளில் 69% சதவீதத்தினர் உண்மையான வெளியீட்டு மட்டத்தினையும் சாத்தியமான வெளியீட்டு மட்டத்தினையும் (நிறைதொழில் வெளியீட்டு மட்டத்தினையும்) தீர்மானிக்கத் தவறியுள்ளனர். எனவே வரைபடததினூடாக சமநிலை வெளியீட்டு மட்டத்தினையும் சாத்தியமான வெளியீட்டு மட்டத்தினையும் தீர்மானிக்கும் திறனை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

- 26 ஆம் வினா மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் மொத்த உள்நாட்டுச் செலவுக்கும் இடையிலான வேறுபாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண்பதில் கவனம் செலுத்தியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் மொத்த உள்நாட்டுச் செலவுக்கும் இடையிலான வேறுபாடு தேறிய ஏற்றுமதியின் மூலம் காட்டப்படும். அதன்போது தேறிய ஏற்றுமதிகளின் பெறுமதி நேர் (+) கணியமாக அல்லது எதிர் (−) கணியமாக அமையலாம் என்பதனையும் தேறிய ஏற்றுமதிகள் எதிர் கணியமாக அமையும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட மொத்த உள்நாட்டு செலவு கூடிய பெறுமானத்தைக் கொண்டிக்கும் என்பதனையும் தீர்மானித்தோர் பரீட்சார்த்திகளில் 29% சதவீதத்தினர் மட்டுமே ஆகும். எனவே தேறிய ஏற்றுமதிகளின் பெறுமதி நேர் அல்லது எதிர் கணியமாக அமையும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த உள்நாட்டு செலவு என்பவற்றின் பெறுமதிக்கு இடையிலான வேறுபாட்டை கணித ரீதியில் கணிப்பிடும் திறனை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

- 27 ஆம் வினா வர்த்தக வங்கிகளின் பணவாக்கம் தொடர்பான கணிப்பீடுகளுடன் தொடர்புடையது. வங்கிமுறைமையானது தனியொரு வங்கியை மட்டும் கொண்டுள்ள போதும் கடனாக்கம் செய்ய முடியும் என்பதனை விளங்கிக் கொண்டிருந்தோர் 13% இலும் குறைவான மிகக் குறைந்த சதவீதத்தினர் ஆவர். பல வங்கிகளைக் கொண்ட வங்கி முறைமையைப் போன்று தனியொரு வங்கியை மட்டும் கொண்ட வங்கி முறைமைக்கும் கடனாக்கம் செய்யக்கூடிய விதம் தொடர்பாக மாணவவர்களுக்கு விளக்கமளித்தல் முக்கியமானது.

- பேரினப் பொருளாதாரத்தின் நோக்கமொன்றாக விலையுறுதியைப் பேணி முதலீடுகளை அதிகரிப்பதற்கு இறைக்கொள்கை, பணக்கொள்கை என்பவற்றைக் கையாளக்கூடிய விதம் தொடர்பான விளக்கம் 29ஆம் வினாவின் மூலம் பரீட்சிக்கப்படுகிறது. அதன்போது அரச முதலீடுகளை அதிகரிப்பதனால் உருவாகக் கூடிய மெத்தக் கேள்வி அதிகரிப்பு, விலையுறுதியின்மைக்கு காரணமாவதனால் இறைக்கொள்கையையும் பணக்கொள்கையையும் ஒரே நேரத்தில் எதிரெதிராகக் கையாளக்கூடிய ஆற்றலை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

- 31 ஆம் வினா Mv=Pr என்ற நாணயக்கணிய சமன்பாட்டின் கூறுகளுக்கிடையிலான தொடர்பினைப் பகுப்பாய்வு செய்யும் ஆற்றலைப் பரீட்சிக்கிறது. மொத்த வெளியீடுகளின் சதவீத வேறுபாடு நாணய இருப்பின் சதவீத வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு விலைமட்டத்தில் ஏற்படும் மாற்றத்தினையும் பெயரளவு தேசிய உற்பத்தியின் வேறுபாட்டினையும் சரியாக இனங்கண்டுள்ளோர் 14% சதவீதமான பரீட்சார்த்திகளாவர். எனவே பண அளவீட்டு விகித சமன்பாட்டிற்குரிய கூறுகளுக்கிடையிலான தொடர்பினை எண்கணித ரீதியான உதாரணங்கள் மூலம் அழுத்தம் கொடுக்கும் வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறை ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

- 32 ஆம் வினாவின் மூலம் தரப்பட்டவொரு காலப்பகுதியில் நிலவும் விலைகளின் கீழ் கணிக்கப்படுகின்ற பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி வேறுபடுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் தொடர்பான விளக்கம் பரிசீலிக்கப்படுகிறது. அதற்கு 13% சதவீதமளவிலான குறைந்த மாணவர் தொகையினரே சரியான பிரதிபலிப்பினைக் காட்டியுள்ளனர். தரப்பட்டுள்ள தரவுகளுக்கமைய வெளியீட்டின் வீழ்ச்சியில் மொத்தக் கேள்வியின் வீழ்ச்சி பாதிப்பு செலுத்தியுள்ளமையை 87% சதவீதமான மாணவர்கள் தீர்மானிக்கத் தவறியுள்ளமையால் மொத்தக் கேள்விக்கும் பெயரளவு உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான தொடர்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் பாட விடயங்களைக் கற்பிக்க வேண்டும்.

- தனிநபர் வருமானமும் வரிவீதமும் தொடர்புறும் வீதத்தின் அடிப்படையில் வரிகளை வகைப்படுத்துதல் தொடர்பான விளக்கம் 35ஆம் வினாவின் மூலம் பரீட்சிக்கப்படுகிறது. வருமனம, வரி வீதம், வரி வகைகள் என்பற்றின் அடிப்படையில் வரிகளை வகைப்படுத்தும் விதத்தினை சரியாகத் தீர்மானிக்கத் தவறியமை காரணமாக 56% சதவீதமான மாணவர்கள் பிழையான பிரதிபலிப்பினைக் காட்டியிருந்தனர். எனவே வரிவீதம், வருமானம் என்பவற்றினடிப்படையில் வரிகள் வகைப்படுத்தப்படும் விதம் தொடர்பான தெளிவன விளக்கத்தினை மாணவர்களில் விருத்தி செய்யும் வகையில் வகுப்பறைக் கற்றல் -கற்பித்தல் செயன்முறை அபிவித்தி செய்யப்பட வேண்டும்.

★ 34 ஆம் வினாவின் மூலம் மேன்மைப் பொருள் தொடர்பான விளக்கம் பரீட்சிக்கப்படுகிறது. சந்தையினால் மூலம் நிரம்பல் செய்யப்படும் போது சாதாரண நுகர்வு மட்டத்தை விடக் குறைவன நுகர்வு மட்டம் ஒன்று காணப்படுகின்றமையை 87% சதவீதமான மாணவர்கள் தீர்மானிக்கத் தவறியுள்ளனர். எனவே சந்தை தோல்வி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களையும் அதன்போது அரசு தலையீடு செய்கின்ற சந்தர்ப்பங்களையும் கவனத்திற் கொண்டு பொருட்களை வகைப்படுத்தும் ஆற்றலை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

★ 36 ஆம் வினாவின் மூலம் சாதகமான பரிமாற்று வீதத்தைத் தீர்மானிப்பது தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படுகின்றது. அவ்வினாவுக்கு பரீட்சார்த்திகளுள் 22% சதவீதமான குறைந்த எண்ணிக்கையினரே சரியாக விடையளித்துள்ளனர். அமையச் செலவின் அடிப்படையில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்ட பரிமாற்றம் ஒன்று இடம்பெறக்கூடிய விகிதாசார வீச்சு தீர்மானிக்கப்படுகின்ற விதம் தொடர்பான விளக்கத்தினை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

★ 37ஆம் வினா வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள், சென்மதி நிலுவை அட்டவணைக் கணக்குகளில் சரியான முறையில் இரட்டைப் பதிவிடப்படும் விதமும் தொடர்பான விளக்கத்தைப் பரீட்சிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. பரீட்சார்த்திகளுள் 82% சதவீதத்தினர் தவறான பிரதிபலிப்பினைக் காட்டியுள்ளமையிலிருந்து பெரும்பாலான மாணவர்களிடத்தில் இது தொடர்பான திறன்கள் காணப்படவில்லை என்பது தெளிவாகிறது. எனவே தரப்பட்ட வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள், சென்மதி நிலுவை அட்டவணையில் பதிவு செய்யப்பட வேண்டிய விதம் தொடர்பான விளக்கத்தையும் பிரயோக திறன்களையும் மாணவர்களிடையே முன்னேற்ற வேண்டும்.

★ 39 ஆம் வினா வர்த்தக மாற்று விகிதத்தினைக் கணிப்பிடும் விதம் தொடர்பான பிரயோகத் திறன்களை மதிப்பிடுவதில் கவனம் செலுத்தியுள்ளது. அவ்வினாவுக்குப் பரீட்சார்த்திகளில் 32% சதவீதத்தினரே சரியன விடையைத் தெரிவுசெய்துள்ளனர். ஏற்றுமதி விலையும் இறக்குமதி விலையும் மாற்றமடைதல் தொடர்பான தகவல்களிலிருந்து வர்த்தக மாற்று விகிதத்தினைக் கணிப்பிடும் திறன்களை மாணவர்களில் முன்னேற்ற வேண்டும்.

★ முதலீட்டு ஊக்குவிப்பு வழிமுறையாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் பாதிப்புகளைப் பரீட்சிப்பதில் 41ஆம் வினா கவனம் செலுத்தியுள்ளது. பரீட்சார்த்திகளில் 68% சதவீதத்தினர் சரியான விடையைக் கண்டறியத் தவறியமையிலிருந்து அதிகளவான மாணவர்கள் அது தொடர்பான விளக்கத்தினைப் பெற்றிருக்காமை தெளிவாகின்றது. எனவே வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் விளைவுகளையும் கிரயங்களையும் பகுத்தாய்வதற்கேற்ற வகையில் மாணவர்களிடம் அறிவை விரிவுபடுத்த வேண்டும்.

★ 44 ஆம் வினா பொருளாதா வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளான தேறிய முதலீடு, அதனைத் தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. பரீட்சார்த்திகளில் 36% சதவீதத்தினர் மட்டும் சரியான விடையைத் தெரிவுசெய்துள்ளதிலிருந்து உரிய தலைப்பு தொடர்பாக மாணவர்களின் விளக்கத்தினை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது தெளிவாகிறது.

★ 45 ஆம் வினா நிரம்பலாளர்களின் கொள்கைப் பகுதிகள் தொடர்பான விடயங்களை இனங் கண்டு கொள்வதில் கவனம் செலுத்தியுள்ளது. சரியான விடையைத் தெரிவு செய்தோரின் அளவு 38% சதவீதத்தை விடக் குறைவாகக் காணப்படுவதிலிருந்து இது தொடர்பான திறன்கள் பெரும்பாலான மாணவர்கள் மத்தியில் காணப்படாமை வெளிப்படுகிறது. எனவே பேரினப் பொருளாதாரக் கொள்கைகள், அவற்றின் செயற்படு தன்மை தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் அதிகரிக்கும் கற்றல் செயன்முறையில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

★ 46 ஆம் வினா வருமானத் தொகுதிகளுக்கிடையில் வருமானச் சதவீதங்கள் பகிரப்பட்ட வித்தின் அடிப்படையில் வருமானப் பரம்பல் தொடர்பான முடிவுகளைக் கண்டறிதல் தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளது. பரீட்சார்த்திகளில் 64% சதவீதத்தினர் இத்திறனைப் பெற்றிருக்காமை காரணமாக ஒப்பீட்டு வருமானப் பரம்பல் தொடர்பாக பெறுமான அட்டவணைகள், வரைபுகள் ஊடாக அது தொடர்பான அறிவினை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ 48 ஆம் வினா அபிவிருத்திக் கொள்கைகள் தொடர்பான மாணவர்களின் அறிவை அளவிடுவதில் கவனம் செலுத்தியுள்ளது. அபிவிருத்திக்கு மிகத் தேவையான வெளிநாட்டு உதவிகளா, வெளிநாட்டு வர்த்தகமா என்பதனை காரணங்களுடன் தீர்மனிப்பதில் மாணவர்களிடம் காணப்பட்ட விளக்கம் போதாது என்பது பரீட்சார்த்திகளில் 71% சதவீதத்தினர் பிழையான விடையைத் தெரிவு செய்ததிலிருந்து வெளிப்படுகிறது. எனவே அபிவிருத்திக் கொள்கைகளாக வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டு வர்த்தகம் என்பவற்றை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்தல் தொடர்பான மாணவர்களின் விளக்கத்தை விருத்தி செய்ய வேண்டும்.

## 2.2. வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்கள்.

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

உப பிரிவு 'அ' - கட்டமைப்பு வினாக்கள் 05.

உப பிரிவு 'ஆ' - கட்டமைப்பு வினாக்கள் 05.

குறைந்தது ஒரு பகுதியிலிருந்து 02 வினாக்களையேனும் தெரிவு செய்து 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்.

இறுதிப் புள்ளிக் கணிப்பிடல்

வினாப்பத்திரம் I இற்கான புள்ளிகள் = 100

வினாப்பத்திரம் II இற்கான புள்ளிகள் = 100

இறுதிப்புள்ளிகள் $200 \div 2 = 100$

## 2.2.2. வினாப்பத்திரம் II இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

★ வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகள் 2, 3, 4.1, 4.2 ஆகிய வரைபுகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

**பகுதி 'அ'**

**இப்பகுதியிலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.**

**வினா இலக்கம் 1**

1. (i) மூலதனம் மற்றும் மனித மூலதனம் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடென்ன? (04 புள்ளிகள்)

(ii) பணமானது எவ்வழிகளில் சிறப்புத் தேர்ச்சி மற்றும் தொழிற்பிரிப்பு என்பவற்றை ஊக்குவிக்கிறது? (04 புள்ளிகள்)

(iii) சந்தை முறைமையும், கட்டளைப் பொருளாதாரமும் அருமை எனும் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) பொருளாதாரத்தில் வளங்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டுமாயின் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் எவை? (04 புள்ளிகள்)

(v) பொருளாதாரத்தின் சிற்றினப் பொருளியல் மற்றும் பேரினப் பொருளியல் பிரச்சினைகளை விளக்க உற்பத்தி இயல்தகவு வளையியை எவ்வாறு பயன்படுத்தலாம். (04 புள்ளிகள்)

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

1. (i) மூலதனம் என்பது உற்பத்தி செய்யப்பட்டதோர் உற்பத்திக் காரணியாகும். தொழிற்சாலைகள், உபகரணங்கள், மூலப்பொருள் கையிருப்பு போன்றன இதிலடங்கும்.

மனித மூலதனம் என்பது தனிநபர் வேலையாட்கள் கல்வி மற்றும் பயிற்சியின் ஊடாகப் பெற்ற அறிவு, திறன்கள், தனிப்பட்ட மற்றும் சமூக ஆளுமைகளின் ஒட்டுமொத்தமாகும். (03 புள்ளிகள்)

- மனித மூலதனமானது பௌதிக மூலதனத்தை விட குறைந்தளவில் தொட்டுணரத் தக்கதாகும்.
- மனித மூலதனமானது உழைப்பு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டினதும் பண்புகளைக் கொண்டது.
- ஏனைய வடிவிலான மூலதனத்தில் முதலீடு செய்வதைப் போலன்றி மனித மூலதனத்தில் முதலிடுவதானது குறித்த ஒரு நபருடன் இணைக்கப்பட்டதாகும்.

(ஏதாவது ஒரு வேறுபாட்டிற்கு 01 புள்ளி)

(ii)
- வர்த்தகத்தை தொடர்ந்து சிறக்குமியல்பும், தொழிற்பிரிப்பும் கட்டாயம் ஏற்பட வேண்டும். ஒரேயொரு பொருளை மாத்திரம் உற்பத்தி செய்யும் மக்கள் அதில் பெரும்பகுதியை அவர்களுக்கு அவசியமான ஏனைய எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளும் பொருட்டு வர்த்தகம் செய்ய வேண்டியது கட்டாயமாகும். (01 புள்ளி)
- ஆரம்பகால சந்தைப் பொருளாதாரங்கள் பொருள்களை ஏனைய பொருள்களுக்காக நேரடியாக வர்த்தகம் செய்யும் பண்டமாற்று முறையினைப் பயன்படுத்தின. ஆனால் திருப்திகரமான பரிமாற்றத்தை மேற்கொள்ளும் பொருட்டு தேடலை மேற்கொள்வதற்கு ஆகும் செலவினைக் கருத்தில் கொள்ளுமிடத்து அது செலவு கூடிய ஒன்றாகும். விருப்பங்களின் இரட்டைப் பொருத்துகைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலுள்ள சிரமம் காரணமாக பண்டமாற்று முறையில் குறைந்தளவு சிறக்குமியல்பே ஏற்படும். (01 புள்ளி)
- அதன் கடினத்தன்மையை தவிர்க்கும் பொருட்டு பணம் தோற்றம் பெற்றது. ஒரு விவசாயி நெல்லை வைத்திருக்கும் அதேவேளை புடைவையை விரும்புவாராயின் அவர் புடைவையை வைத்திருக்கும். நெல்லை விரும்பும் ஒருவரைத் தேடியலைய வேண்டியதில்லை. நெல்லை வைத்திருப்பவர் நெல்லை விரும்பும் ஒருவரைத் தேடினால் போதுமானது. விவசாயி நெல்லுக்குப் பதிலாகப் பணத்தைப் பெறுவார். பின்னர் புடைவையை விற்க விரும்பும் ஒருவரைத் தேடி புடைவைக்காகப் பணத்தைக் கொடுப்பார். இதன்போது பணமானது பறிமாற்றூடகமாக மாறுகிறது.

- பண்டமாற்று முறையின் கடினத்தன்மையை இல்லாதொழிப்பதன் மூலம் பணமானது வர்த்தகத்திற்கும் சிறக்குமியல்பு ஏற்படவும் பெருமளவு அனுசரணை வழங்குகிறது. பணம் உள்ளதனால் சிறக்குமியல்பு மற்றும் வர்த்தகத்திற்கான சாத்தியங்கள் பெருமளவில் விரிவடைகின்றன. (01 புள்ளி)

(iii) **சந்தை முறைமை :-**

- வளங்கள் தனியார் உரிமையாகக் காணப்படுவதுடன் பொருளாதார நடவடிக்கையை ஒருங்கிணைக்கவும் நெறிப்படுத்தவும் சந்தைகளையும் விலைகளையும் பயன்படுத்துகின்றமை சந்தைப் பொருளாதாரத்தின் பண்பாகும்.
- இம்முறையில் ஒவ்வொரு பங்குபற்றுநரும் தனது சுய நன்மையின் அடிப்படையில் இயங்குவர். ஒவ்வொரு தனிநபரும் வியாபார முயற்சியும் நுகர்வு அல்லது உற்பத்தி பற்றிய தமது சுயமான தீர்மானங்களூடாக திருப்தியினை அல்லது இலாபத்தினை உச்சப்படுத்த் முயல்வர்.
- விருப்பம் மற்றும் ஆற்றலுடைய நபர்களினால் பொருள்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுவதுடன், வளங்களும் நிரம்பல் செய்யப்படும்.
- இதன் விளைவு யாதெனில் ஒவ்வொரு பொருளையும் வளத்தையும் விற்கவும் வாங்கவும் சுயாதீனமாக இயங்கும் நபர்களிடையே போட்டித்தன்மை ஏற்படுவதாகும். எனவே பொருளாதாரத் தீர்மானம் மேற்கொள்ளல் விசாலமாக பரவலடைந்துள்ளது.
- அரசாங்கத்தின் வகிபாகம் தனியார் உடைமைகளைப் பாதுகாப்பதுடன் மட்டுப்படுத்தப்படும். (02 புள்ளிகள்)

**கட்டளை முறைமை :-**

- கட்டளை முறைமையில் வளங்களின் பெருமளவினை அரசாங்கம் உரிமை கொண்டிருப்பதுடன் பொருளாதாரத் தீர்மானம் மேற்கொள்வதானது மத்திய பொருளாதாரத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
- அரசாங்க நெறிப்படுத்தலுக்கமைவாக உற்பத்தியில் ஈடுபடும் சகல வியாபார நிறுவனங்களையும் அரசாங்கம் உரிமை கொண்டிருக்கும்.
- ஒரு மத்திய திட்டமிடல் சபை ஒவ்வொரு தொழில் முயற்சிக்குமான உற்பத்தி இலக்குகளை நிர்ணயித்து ஒவ்வொரு முயற்சிக்கும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய வளங்களின் அளவினையும் குறித்துரைக்கும். இதன்படி அம்முயற்சி தனது உற்பத்தி இலக்குகளை அடைய முடியும்.
- வெளியீட்டில் நுகர்வுப் பொருள்கள் மற்றும் மூலதனப் பொருள்களின் அளவுகள் மத்தியில் (திட்டமிடலில்) நிர்ணயிக்கப்படும். அத்துடன் கைத்தொழில்கள் மத்தியில் மூலதனப் பொருள்களின் ஒதுக்கீடானது மத்திய திட்டமிடல் சபையின் நீண்டகால முன்னுரிமைகளின் அடிப்படையில் இடம்பெறும். (02 புள்ளிகள்)

**மாற்றீடான விடை :**

**சந்தை முறைமை :-**

- மூன்று அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளும் (எதனை, எவ்வாறு, யாருக்காக) விலைப்பொறிமுறையினூடாக தீர்க்கப்படும். இலாபம் பெறக்கூடியதாக உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருள்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படும் அதேவேளை நட்டத்தை எதிர்கொள்ளும் பொருள்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்பட மாட்டா. பொருள் சந்தையிலும் காரணிச் சந்தையிலும் இருந்து வரும் விலை சமிக்ஞைகளின் அடிப்படையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.
- சந்தை முறையொன்றில் உற்பத்தியாளர்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழினுட்பம் மற்றும் தாம் பயன்படுத்தும் வளங்களின் விலை என்பவற்றின் அடிப்படையில் மிகவும் வினைத்திறன் வாய்ந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவர்.
- தனிநபர் வருமானங்கள் தனிநபர் உரிமை கொண்டுள்ள வளங்களின் அளவினாலும் அவ்வளங்களின் விலைகளினாலும் நிர்ணயிக்கப்படும். காரணி விலைகள் காரணிச் சந்தையில் நிலவும் கேள்வி நிரம்பல் இடைத்தொடர்புகளினால் நிர்ணயிக்கப்படும். (02 புள்ளிகள்)

**கட்டளை முறைமை :-**

- கட்டளைப் பொருளாதாரமொன்றில் வள ஒதுக்கீடானது மத்திய திட்டமிடல் முகவரகத்தினால் விடுக்கப்படும் கட்டளைக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். இத்தகைய ஒரு சூழ்நிலையில் திட்டமிடல் அதிகாரிகள் பொருள்களின் விலைகளை நிர்ணயம் செய்து அவ்வரசாங்கக் கட்டுப்பாட்டு விலைகளில் தனிநபர்கள் வாங்க விரும்புவனவற்றை கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படும்.
- உற்பத்தி மேற்கொள்ளப்படும் முறை மத்திய திட்டமிடல் சபையினால் தெரிவு செய்யப்படும் பொருள்களின் விநியோகம் மற்றும் வருமானப் பங்கீடு என்பன பெருமளவுக்கு மத்திய திட்டமிடல் மூலம் நிர்ணயிக்கப்படும். அரசாங்கம் கூலி வீதங்களையும் பொருள்கள் சேவைகளின் விலைகளையும் தீர்மானிக்கும்.

(iv) - இதன் பொருட்டு இரு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(அ) உற்பத்தி வினைத்திறன்

(ஆ) ஒதுக்கீட்டு வினைத்திறன்

**உற்பத்தி வினைத்திறன்**

- ஏதேனும் பொருள்கள் சேவைகளின் சேர்க்கையினை மிகவும் குறைந்த செலவில் உற்பத்தி செய்வதே உற்பத்தி வினைத்திறனாகும். (ஓரலகு உள்ளீட்டிற்கு உயர்ந்தபட்ச வெளியீட்டைப் பெறல் அல்லது ஓரலகு வெளியீட்டைப் பெற மிகக் குறைந்தளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தல்) (01 புள்ளி)
- இதனை அடைய வேண்டுமாயின்,
  - (அ) நிறைதொழில் மட்டம் (பூரண வேலைவாய்ப்பு)
  - (ஆ) பூரண வெளியீட்டு மட்டம் (முழு உற்பத்தி) என்பன பெறப்பட வேண்டியது கட்டாயமாகும். (01 புள்ளி)

**ஒதுக்கீட்டு வினைத்திறன்**

- ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பது சமூகத்தால் பெரிதும் விரும்பப்படும் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யும் பொருட்டு வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதை குறிக்கும். (01 புள்ளி)
- ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்வதில் ஏற்படும் எல்லைச் செலவு அப்பொருளின் விலைக்கு சமப்படும் போது இந்நிலமை அடையப்பெறும்.
  (P = MC) (01 புள்ளி)

(v) சிற்றினப் பொருளியலானது தனித்தனி அலகுகளை ஆராயும் அதேவேளை பேரினப் பொருளியல் பிரச்சினைகள் பொருளாதாரத்தின் கூட்டுமொத்தங்களுடன் தொடர்புபட்டதாகும்.

சிற்றினப் பொருளியல் பிரயோகம்

1. அருமைப் பிரச்சினை
2. பொருள்களின் பல்வேறு சேர்க்கைகளைத் தெரிவு செய்தல்
3. அமையச் செலவும் தெரிவும்
4. தொழினுட்ப மாற்றத்தின் விளைவுகள் (02 புள்ளிகள்)

பேரினப் பொருளியல் பிரயோகம்

1. பொருளாதார வளர்ச்சி
2. நிறைதொழில் மட்டம் மற்றும் குறைதொழில் மட்டம்
3. பொருளாதாரப் பின்னடைவும் வீழ்ச்சிகளும்
4. பொருளாதாரத் தடைகளின் வீழ்ச்சிகள் (02 புள்ளிகள்)

- வளங்களை பூரணமாகப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படத்தக்க இரு வெளியீடுகளின் சேர்க்கைகள்
- பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலையின்மை என்பன பேரினப் பொருளியல் வெளிப்பாடுகளாகும். அதேவேளை அமையச் செலவு மற்றும் அருமை என்பன சிற்றின ரீதியிலான பிரயோகங்களாகும். சில விடயங்களை ஒன்றில் முழுப்பொருளாதரம் தொடர்பிலோ அல்லது தனியானதொரு நிறுவனம் தொடர்பிலோ காட்ட முடியும்.



அமையச் செலவும் தெரிவும்



அருமை



உணவு உற்பத்தியில் தொழினுட்ப வளர்ச்சி



பொருளாதார வளர்ச்சி

.

விடைகளுக்கு வரைபடம் அவசியமில்லை.

1 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்




01 ஆம் வினாவிற்கு பரீட்சார்த்திகளில் 97% சதவீதத்தினர் விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.
அதில்,

0 - 5 புள்ளி ஆயிடையில் 54%
6 - 10 புள்ளி ஆயிடையில் 31%
11 - 15 புள்ளி ஆயிடையில் 12%
16 - 20 புள்ளி ஆயிடையில் 3%

என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 05 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இலகுதன்மை குறைந்த பிரிவு (ii) ஆகவுள்ளதுடன் அதன் இலகுதன்மை 10% ஆகும். அதேபோன்று பிரிவு (iii) இலகுவான பிரிவாக காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 47% ஆகும்.

- ⋆ பிரிவு (i) இன் இலகுதன்மை 36% வீதமாகும். மூலதனம், மனித மூலதனம் என்பவற்றைச் சரியாக வரைவிலக்கணப்படுத்த முடியாமை காரணமக அடைவு மட்டத்தில் குறைபாடு காணப்படுகிறது. அதே போன்று சில மாணவர்கள் இரண்டு எண்ணக்கருக்களுள் ஒன்றினை மட்டும் வரைவிலக்கணப்படுத்தி இருப்பதும் வினாவின் இலகுதன்மை குறைய ஏதுவான காரணியாகும். எனவே இரு விடயங்களுக்கிடையிலான வேறுபாட்டைக் கேட்கும்போது இரண்டு எண்ணக்கருக்களையும் வரைவிலக்கணப்படுத்துவதற்கும் அதனுடன் மட்டுமே நின்று விடாது அதற்கு மேலதிகமான வேறுபாடுகளைக் குறிப்பிடுவதற்குமான விளக்கத்தையும் திறனையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

- ⋆ பிரிவு (ii) இன் இலகுதன்மை 10% சதவீதத்துக்கும் குறைந்ததாகும். இது சிறப்புத் தேர்ச்சி, தொழிற்பிரிப்பு, பணப்பயன்பாடு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைப் பகுப்பாய்வு செய்யும் ஆற்றலைப் பரீட்சிப்பதில் கவனம் செலுத்தியவொரு வினாவாகும். மாணவர்களில் சிறப்புத் தேர்ச்சி, தொழிற்பிரிப்பு, பணப் பயன்பாடு என்பவற்றை விளக்கும் திறமை கணப்பட்ட போதிலும் அவற்றுக்கிடையிலன தொடர்பினைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான திறன் காணப்படவில்லை. எனவே வினாவின் கடினத்தன்மை 90%சவீதமாகக் காணப்படுவதுடன் அவ்வாறு காணப்படுதல் திருப்திகரமற்ற ஒரு நிலையாகும். விடைகளை விளக்கும்போது தொழிற்பிரிப்பு, சிறப்புத்தன்மை என்பவற்றுடன் வர்த்தகம் இணைந்து காணப்படுவதனையும் பண்டமாற்று முறைமையில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்குப் பணப்பயன்பாடு உதவுகின்றமையையும் அதனால் தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி என்பவற்றில் மனிதர்கள் தொடர்புபட முடிந்தமையையும் விளக்கும் ஆற்றல், ஆக்கத்திறன் என்பவற்றை மாணவர்களிடத்தில் அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

- ⋆ முதலாவது வினாவில் உயர்வான இலகுதன்மையைக் கொண்ட பிரிவு (iii) சந்தை முறைமை, கட்டளைப் பொருளாதாரம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்கும் திறனைப் பரீட்சிப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. இதன் இலகுதன்மை 47% ஆவதுடன் இது கடந்தகால வினாப்பத்திரங்களிலும் அடிக்கடி கேட்கப்பட்ட பாட விடயங்களுடன் இணைந்து காணப்படுகிறது. இருப்பினும் 53%சதவீதமான கடினத்தன்மை இன்னும் காணப்படுவது திருப்திகரமற்ற நிலைமை என்பதனால், பொருளாதாரக் கட்டமைப்புகளின் வேறுபாடுகளை சரியாக பகுப்பாய்வு செய்யும் ஆற்றலை மாணவர்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

★ இங்கு பிரிவு (iv) பொருளாதாரமொன்றின் அருமையான வளங்களை, வினைத்திறனாக உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள் கேட்க முற்பட்டதுடன் அதன் இலகுதன்மை 36% ஆகும். அதற்காக உற்பத்தியின் வினைதிறன், வள ஒதுக்கீட்டின் வினைதிறன் ஆகிய இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் உற்பத்தியில் வினைதிறன் அடையப் பெறுவதற்கு மேலும் இரண்டு தேவைப்பாடுகளான நிறைதொழில் மட்டம், பூரண வெளியீட்டு மட்டம் ஆகிய விடயங்கள் அடையப்பட வேண்டும் என்பதனையும் பெரும்பாலான மாணவர்கள் குறிப்பிடத் தவறியுள்ளனர். எனவே பாட விடயங்களுடன் தொடர்புடைய விடயங்கள் வெளிப்படும் வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறை முன்னேற்றப்பட வேண்டும்.

★ பிரிவு (v) பொருளியலின் பிரதான இரு தோற்றப்பாடுகளான சிற்றினப் பொருளியல், பேரினப் பொருளியல் என்பவற்றுடன் இணைந்து காணப்படுகின்ற எண்ணக்கருக்கள், அவற்றை உற்பத்தி இயல்தகவு வளையியைக் கொண்டு விளக்கும் திறனை பரீட்சிக்க முற்பட்ட ஒரு வினாவாகும். இதன் இலகுதன்மை 18% ஆகும். அதுவொரு திருப்திகரமான ஒரு மட்டமாகக் காணப்படாமைக்குக் காரணம் இவ்வினாவின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட எண்ணக்கருக்கள் அவற்றை எடுத்துக் காட்டுவதற்காக உற்பத்தி இயல்தகவு வளையியைப் பயன்படுத்தும் முறை பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்படுவதனாலாகும். எனவே இவ்வாறான இடர்பாடுகளில் கவனம் செலுத்தி மாணவர்களைப் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அடைவினை உயர்த்திக் கொள்ளலாம்.

**வினா இலக்கம் 2**

**2.** (i) சந்தை விலைகளின் சமிக்ஞை வழங்கும் தொழிற்பாட்டையும் பங்கீடு செய்யும் தொழிற்பாட்டையும் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) கைத்தொழில் உற்பத்தியொன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கும் விலை தவிர்ந்த நான்கு காரணிகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) குறித்த பொருளொன்றின் சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் அட்டவணை பற்றிய சில தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன. (04 புள்ளிகள்)

| விலை (ரூபா.) | கேள்வித்தொகை ($Q_d$) | நிரம்பல்தொகை ($Q_s$) |
|---|---|---|
| 4 | 84 | 12 |
| 8 | 68 | 44 |

கேள்வி, நிரம்பல் வளையிகள் நேர்கோடுகள் எனக்கருதி, சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றின் சமன்பாடுகளைப் பெறுக.

(iv) கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளைப் பயன்படுத்தி, சமநிலை விலை மற்றும் தொகை என்பவற்றைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) அரசாங்கம் அலகொன்றிற்கு ரூபா. 3 வீதம் அலகு வரியொன்றை விதிக்குமாயின், வரியின் பின்பு உற்பத்தியாளர் பெறும் விலையினையும், அரசாங்கத்தின் வரி வருவாயையும் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

சந்தை முறைமையொன்றில் நுகர்வோர், உற்பத்தியாளர் மற்றும் வள உரிமையாளர்கள் எப்பொருளை எந்தளவு வாங்குவதா இல்லையா என்பதை தீர்மானிக்கும் பொருட்டு அவசியமான தகவல்களை சார்பு விலைகள் வழங்குகின்றன. விலைகள் பிழையான சமிக்ஞைகளை வழங்கினாலோ அல்லது பிழையான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும் தகவல்களை வழங்கினாலோ சந்தைகள் வினைத்திறனின்றி இயங்கும். இது சந்தைத் தோல்விகளுக்கு இட்டுச் செல்லும். (02 புள்ளிகள்)

- வரையறுக்கப்பட்ட வளங்களையும், பொருள்கள் மற்றும் சேவைகளையும் கொள்வனவு செய்ய விரும்பும் கொள்வனவுச் சக்தியுள்ளவர்களுக்கு பங்கீடு செய்யும் சந்தையின் வழிமுறையே

விலையாகும். பொருள் ஒன்றின் விலை உயர்வாகக் காணப்படும்போது மக்கள் அதனைக் குறைந்தளவே வாங்கக் கூடிய சக்தி உடையவர்களாகவும் குறைந்தளவே விரும்புபவர்களாகவும் இருப்பர். மறுபுறம் விலை குறையும்போது அதிகளவானோர் அதனைக் கொள்வனவு செய்யக் கூடிய ஆற்றல் உள்ளவர்களாகவும் விருப்பமுடையவர்களாகவும் இருப்பர்.

- நுகர்வோரும் நிறுவனங்களும் விலைச் சமிக்ஞைகளுக்கு உரிய துலங்கலை ஏற்படுத்தும்போது அருமையான வளங்கள் மாற்றீடான போட்டி உபயோகங்கள் இடையே ஒதுக்கீடு செய்யப்படும். விலைகள் ஒதுக்கீட்டுப் பொறிமுறையாகத் தொழிற்படுகின்றன. (02 புள்ளிகள்)

(ii)
- உற்பத்தியை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்ட வளங்களின் விலைகள் / உற்பத்திக் காரணிகளின் விலைகள்
- தொழினுட்பம்
- வரிகளும் மானியங்களும்
- உற்பத்தி செய்யப்பட்ட தொடர்புடைய பொருள்களின் விலைகள் / எதிர்பார்க்கைகள்
- நிரம்பலாளர்களின் எண்ணிக்கை (தலா 01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

(iii)

| கேள்விச் சமன்பாடு | நிரம்பல் சமன்பாடு |
|---|---|
| $-Qd = a - bP$ | $Qs = a + bP$ |
| $Qd = 100 - 4P$ | $Qs = -20 + 8P$ |

(ஒவ்வொன்றிற்கும் இரு புள்ளிகள் வீம் மொத்தம் 04 புள்ளிகள்)

(iv) சமநிலை விலையும் தொகையும்

$Qd = Qs$

$100 - 4Pb = -20 + 8Ps$

$120 = 12P$

$10 = P$ (02 புள்ளிகள்)

$Q_d = 100 - 4(10)$

$= 60$

(v) வரி அறவிடப்பட்ட பின் உற்பத்தியாளர் பெற்ற விலையும் அரசின் இழப்பும்

$Qd = Qs$

$100 - 4Pb = -20 + 8Ps$

$100 - 4Pb = -20 + 8(Pb - t)$

$100 - 4Pb = -20 + 8(Pb - 3)$

$100 - 4Pb = -20 + 8Pb - 24$

$100 - 4Pb = -44 + 8Pb$

$100 - 44 = 8Pb + 4Pb$

$144 = 12Pb$

$12 = Pb$

$Ps = Pb - t = 12 - 34Pb$

$Ps = 12 - 3 = 9$ (02 புள்ளிகள்)

(அரசாங்கத்தின் வரிவருவாய் $3 \times 52 =$ ரூபா. 156 (02 புள்ளிகள்)

2 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்




02 ஆம் வினாவிற்குப் பரீட்சார்த்திகளில் 89% சதவீதத்தினர் விடையளித்துள்ளனர். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும். அதில்,

0 - 5 புள்ளி ஆயிடையில் 39%
6 - 10 புள்ளி ஆயிடையில் 20%
11 - 15 புள்ளி ஆயிடையில் 23%
16 - 20 புள்ளி ஆயிடையில் 18%

என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 05 பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் (v) ஆம் பிரிவு குறைந்த இலகுதன்மையைக் கொண்டுள்ளதுடன் அதன் இலகுதன்மை 32% ஆகும். கூடிய இலகுதன்மையான 65% சதவீதத்தினை (iii) ஆம் பிரிவு கொண்டுள்ளது. (ii)ஆம், (iv) ஆம் பிரிவுகளின் இலகுதன்மை முறையே 55% உம் 62% உம் ஆகும்.

- (i) ஆம் பிரிவின் இலகுதன்மை 41% ஆகும். சந்தை விலைகளின் ஊடாக நிறைவேற்றப்படுகின்ற பணிகள் பற்றி வினவிய இவ்வினாவுக்கு எதிர்பாரக்கப்பட்ட விடையில் சமிக்ஞை வழங்குதல், பங்கீடு செய்தல் ஆகிய பணிகளை வெவ்வேறாக விவரிக்கத் தவறியமை காணக்கூடியதாக இருந்தது. எனவே சந்தை விலைகளின் ஊடாக நிறைவேற்றப்படுகின்ற மூன்று பணிகளான, சமிக்ஞை வழங்குதல், பங்கீடு செய்தல், தூண்டல்களை வழங்குதல் போன்றவற்றை உதாரணங்களுடன் விவரிக்கும் ஆற்றலை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- (ii) ஆம் பிரிவின் மூலம் பண்டமொன்றில் நிரம்பல் என்பதற்குப் பதிலாக கைத்தொழில் உற்பத்தி ஒன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கின்ற காரணிகள் கேட்கப்பட்டுள்ளன. சில மாணவர்கள் பொதுவாக நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளை விடையாக எழுதியிருந்ததுடன் விலை அல்லாத ஏனைய காரணிகள் கேட்கப்பட்டிருந்தபோதும் விலையையும் உள்ளடக்கி விடைகளை எழுதியிருந்தனர். பொருளின் இயல்பின் அடிப்படையில் நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் வெளிப்படும் வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைத்துக் கொள்ளல் முக்கியமானது. எவ்வாறெனினும் இதன் இலகுதன்மை 55% ஆகும்.

- (iii) ஆம் பிரிவில் தரப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கேள்விச் சமன்பாடு, நிரம்பல் சமன்பாடு ஆகியவற்றைக் கட்டியெழுப்பிக் கொள்ளல் எதிர்பார்க்கப்பட்டது. இரண்டாம் வினாவின் கூடிய இலகுதன்மை கொண்ட பிரிவு இதுவாகும். இதன் இலகுதன்மை 65% ஆகும். அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு சமன்பாடுகளைக் கட்டியெழுப்புவதும் அதனூடாக வரைபுகளை வரைதல், கணிப்பிடுதல் என்பவற்றில் மாணவர்கள் அதிக திறமையைக் காட்டுவதாகத் தெரிகிறது.

★ (iv) ஆம் பிரிவு (iii) ஆம் பிரிவுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. அதுவும் கணித்தலுடன் தொடர்புடையதாகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 62% ஆகும். சமன்பாடுகள் ஊடாகத் தேவையான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு மேலும் பழக்கப்படுத்துவதன் மூலம் மாணவர்கள் இலகுவாக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பினை வழங்கலாம்.

★ (v) ஆம் பிரிவு, இவ்வினாவில் இலகுதன்மை குறைவான ஒரு பிரிவாகும். அதன் இலகுதன்மை 32% ஆகும். கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளை கட்டியெழுப்பிக் கொள்ள முடியுமாயினும் அவற்றிற்கு வரிகளை உள்ளடக்கிக் கொள்வதில் இடர்பாடு காணப்பட்டமை தெரிகிறது. சிக்கலான கணிதச் செய்கை அல்லாத இவ்வாறான பயிற்சிகளில் மாணவர்களை மென்மேலும் பயிற்றுவித்தல் அவசியமாகும்.

**வினா இலக்கம் 3**

**3.** (i) குறைந்து செல்லும் விளைவு விதியும், அளவுத்திட்ட விளைவு விதியும் நிறுவனமொன்றின் உற்பத்திச் செலவுகளை எவ்வாறு பாதிக்கும் என விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) நிறுவனமொன்றின் எல்லைச் செலவு வளையிக்கும் அந்நிறுவனம் உள்ளடங்கும் கைத்தொழிலின் நிரம்பல் வளையிக்கும் இடையில் ஏதேனும் ஒரு தொடர்பு காணப்படுகிறதா என்பதைக் கலந்துரையாடுக. (04 புள்ளிகள்)

(iii) நிறைபோட்டிக் கைத்தொழில் ஒன்று கீழ்நோக்கிச் சரியும் கேள்வி வளையியை எதிர்நோக்கும் அதேவேளை நிறைபோட்டியின் கீழ் இயங்கும் நிறுவனமொன்று கிடையச்சுக்குச் சமாந்தரமான கேள்வி வளையியை எதிர்கொள்வது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) குறுங்காலத்தில் இயங்கும் நிறுவனமொன்றின் மொத்த வருவாய் ரூபா. 100 மில்லியனாகவும் மொத்தச் செலவு ரூபா. 120 மில்லியனாகவும் மொத்த நிலையான செலவு ரூபா. 40 மில்லியனாகவும் உள்ளது. இந்நிறுவனம் தொடர்ந்தும் தொழிலில் நீடித்திருக்க வேண்டுமா? ஏன்? (04 புள்ளிகள்)

(v) எல்லாச் சந்தை அமைப்புகளிலும் இலாப உச்சப்படுத்துதலுக்கு எல்லை வருவாய் எல்லைச் செலவுக்கு சமப்படுவது ஏன் அத்தியாவசியமானது? தொழிலானது நிறைபோட்டித் தன்மைவாய்ந்ததாக உள்ளபோது எல்லை வருவாய் = எல்லை செலவு (MR = MC) என்ற நிபந்தனையில் எல்லை வருவாய்க்குப் (MR) பதிலாக ஏன் விலை (P) பிரதியீடு செய்யப்படலாமென வளக்குக. (04 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

3. (i) (i) - நிறுவனம் பயன்படுத்தும் தொழினுட்பம் அதன் செலவுகளை நிர்ணயிக்கும்.

- குறைந்து செல்லும் எல்லை விளைவுகள் விதியின் படி நிலையான வளங்களுடன் மாறும் வளங்களின் அலகுகளை படிப்படியாக சேர்க்கும் போது எல்லை உற்பத்தியும் சராசரி உற்பத்தியும் அதிகரிக்கும். அத்துடன் எல்லைச் செலவும் சாராசரி செலவும் வீழ்ச்சியடையும்.

  பின்னர் எல்லை உற்பத்தியின் உச்சப் புள்ளியில் செலவு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படும். மாறும் உள்ளீட்டை மேலும் அதிகரிக்கும் போது எல்லை உற்பத்தி வீழ்ச்சியடையும் அதேவேளை எல்லைச் செலவு அதிகரிக்கும். ஆனால் சராசரி உற்பத்தி தொடர்ந்து அதிகரிக்கும். அத்துடன் சராசரி மாறுஞ் செலவு தொடர்ந்து வீழ்ச்சியடையும். பின்னர் சராசரி உற்பத்தியின் உச்சப்புள்ளியில் சராசரி மாறுஞ் செலவு அதன் இழிவுப் புள்ளியை அடையும். மாறும் உள்ளீட்டை மேலும் அதிகரிக்கும்போது சராசரி உற்பத்தி குறைவடையும். அத்துடன் சராசரி மாறுஞ் செலவு அதிகரிக்கும். (02 புள்ளிகள்)

- நீண்ட காலத்தில் உற்பத்தியானது அளவுத்திட்ட விளைவு விதிக்கு உட்பட்டதாகும். நீண்டகால சராசரிச் செலவு வளையியின் U வடிவத்திற்குக் காரணம் அளவுத்திட்டச் சிக்கனங்களும் சிக்கனமிலிகளுமாகும்.

- வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பு அலகுச் செலவில் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்வதாயும் எல்லா வளங்களின் தொகைகளும் மாறும் தன்மையுடையதாகவும் உள்ளபோது அளவுத்திட்டச் சிக்கனமிலிகள் ஏற்படும்.

- வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பு அலகுச் செலவில் மாற்றங்களை ஏற்படுத்தாததாகவும் எல்லா வளங்களின் தொகைகளும் மாறும் தன்மையுடையதாகவும் உள்ளபோது நிலையான அளவுத்திட்ட விளைவுகள் ஏற்படும். (02 புள்ளிகள்)

(ii) - ஒரு நிறைபோட்டி நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்தும் அல்லது நட்டத்தை இழிவுபடுத்தும் தொகையினை நிரம்பல் செய்யும். எல்லை வருவாய்களை எல்லைச் செலவுக்கு சமப்படுத்துவதன் மூலம் இது மேற்கொள்ளப்படும்.

எனவே நிறுவனத்தின் நிரம்பல் வளையியானது அதன் சராசரி மாறும் செலவின் இழிவுப் புள்ளிக்கு மேற்புறமுள்ள எல்லைச் செலவு வளையிக்குச் சமமாகும். (02 புள்ளிகள்)

- கைத்தொழிலின் நிரம்பல் வளையியானது நிறுவனங்களின் எண்ணிக்கையும், ஒவ்வொரு நிறுவனத்திலுமுள்ள பொறித்தொகுதிகளின் அளவுகளும் மாறா நிலையில் ஒவ்வொரு விலையிலும் கைத்தொழில் நிரம்பல் செய்யும் நிரம்பல் தொகைகளைக் காட்டுகிறது. தரப்பட்ட ஒரு விலையில் கைத்தொழிலின் நிரம்பல் தொகையானது அவ்விலையில் கைத்தொழிலிலுள்ள நிறுவனங்களின் நிரம்பல் தொகைகளின் கூட்டுத்தொகைக்கு சமனாகும். எனவே தனிப்பட்ட நிறுவனங்களின் சராசரி மாறுஞ் செலவு வளையிகளின் இழிவுப் புள்ளிக்கு மேற்புறமுள்ள எல்லைச் செலவு வளையிகளின் கிடையச்சுக் கூட்டுத்தொகையின் மூலம் கைத்தொழிலின் நிரம்பல் வளையியைப் பெறலாம்.



நிறுவனத்தின் நிரம்பல் வளையி



தொழிலின் நிரம்பல் வளையி

(iii) - நிறைபோட்டிச் சந்தையில் ஒரு நிறுவனம் விலை ஏற்போனாகும். உற்பத்தி செய்யப்படும் பொருள் ஓரினத்தன்மை வாய்ந்ததாகும். குறித்த பொருளின் மொத்த வெளியீட்டில் ஒரு மிகச் சிறியளவையே நிறுவனம் உற்பத்தி உற்பத்தி செய்கிறது. கொள்வனவாளர்கள் ஏனைய நிறுவனங்களின் விலைகள் குறித்து பூரண அறிவுடையவர்களாவார். இதன் காரணமாகவே ஒரு நிறைபோட்டி நிறுவனம் விலை ஏற்போனாகத் தொழிற்பாடுகிறது.

- விலையை ஏற்கும் ஒரு நிறுவனத்தின் கேள்விக் கோடானது தரப்பட்ட சந்தை விலையில் கிடையச்சுக்குச் சமாந்தரமான ஒரு நேர்கோடாக இருக்கும். கிடையான கேள்வி வளையி பூரண நெகிழ்வுள்ளதாகும். சந்தை விலையில் நிறுவனமானது எந்தத் தொகையினையும் விற்பனை செய்யக்கூடியதாக இருக்கும். (02 புள்ளிகள்)

- கைத்தொழிலின் கேள்வி வளையியானது கீழ் நோக்கிய சரிவுடையதாக இருக்கும். ஆனால் பூரண நெகிழ்வுடையதல்ல. தனி நிறுவனமொன்றின் உற்பத்தியானது கைத்தொழிலில் உள்ள ஏனைய எந்த ஒரு நிறுவனத்தின் உற்பத்திக்குப் பூரண பதிலீடாகும். எனவே கேள்வியானது பூரண நெகிழ்வுள்ளதாகும். ஆனால் கீழ்நோக்கிய சரிவுடைய கேள்வி வளையியின் நெகிழ்ச்சியானது குறித்த உற்பத்தியானது ஏனைய பொருள்கள் சேவைகளுக்கு பதிலீடாக உள்ள தன்மையின் அடிப்படையில் தங்கியுள்ளது. (02 புள்ளிகள்)

(iv) - குறுங்காலத்தில் நிறுவனமானது தொடர்ந்து இயங்காமல் பொறித்தொகுதியை மூடிவிடத் தீர்மானிக்குமாயின் மொத்த நட்டமானது மொத்த நிலையான செலவுகளின் தொகைக்கு (ரூபா. 40 மில்லியன்) சமமாகும்.

நிறுவனம் பொறித் தொகுதியைத் தொடர்ந்து இயக்குமாயின் அதனால் ஏற்படும் நட்டம் மொத்தம் மொத்த வருவாய்க்கும் (ரூபா. 100 மில்லியன்) மொத்த செலவுக்கும் (ரூபா. 120 மில்லியன்) இடையிலான வேறுபாடாகிய ரூபா. 20 மில்லியனாகும். எனவே குறுங்காலத்தில் பொறித்தொகுதியை மூடிவிடாமல் தொடர்ந்து இயங்கச் செய்வதன் மூலம் ஏற்படும் மொத்த நட்டத்தை இழிவுபடுத்தலாம். (04 புள்ளிகள்)

மாற்றீடான விடை :

- இங்கு குறுங்காலத்தில் நிறுவனம் நட்டமடைகின்ற போதிலும் (120-100 = 20 மில்லியன் நட்டம்) மொத்த மாறும் செலவையும் (80) நிலையான செலவில் ஒரு பகுதியையும் (20) ஈடு செய்யக்கூடிய அளவிற்கு வருமானம் கிடைப்பதனால் அது தொடர்ந்து தொழிலில் ஈடுபடும். மாறும் செலவை ஈடுசெய்யும் வருமானம் கிடைத்தால் நிறுவனம் தொழிலில் ஈடுபடும். மாறும் செலவைக் கூட ஈடுசெய்ய முடியாவிட்டால் அது சந்தையை விட்டு வெளியேறும்.

(v) - எல்லை வருவாய் எல்லைச் செலவை விட அதிகமாயின் $(MR > MC)$ மேலதிக ஓரலகினை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் மேலதிக வருவாய் அவ்வலகினை உற்பத்தி செய்ய ஏற்பட்ட மேலதிகச் செலவினை விஞ்சியதாக இருக்கும். எனவே நிறுவனம் எல்லை அலகொன்றின் மீது ஒரு பொருளியல் இலாபத்தினை உழைக்கின்றது. எனவே வெளியீடு அதிகரிக்குமாயின் அதன் பொருளியல் இலாபம் அதிகரிக்கிறது.

- எல்லை வருவாய் எல்லைச் செலவுக்கு சமப்படும் போது $(MR = MC)$ பொருளியல் இலாபம் உச்சப்படுத்தப்படுகிறது. (02 புள்ளிகள்)

- $(MR = MC)$ என்னும் விதியினை நிறைபோட்டி நிறுவனமொன்றிற்கு பிரயோகிக்கும் போது வசதி கருதி அதனைச் சற்று வித்தியாசமான முறையில் குறிப்பிட முடியும். நிறைபோட்டி நிறுவனம் நிலவுகின்ற சந்தை விலையில் அது தெரிவு செய்யும். அந்த தொகையையும் விற்பனை செய்யலாம். அது பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையினை எதிர்நோக்குகின்றது. இதன் காரணமாக பொருளின் விலையும் எல்லை வருவாயும் ஒன்றுக்கொன்று சமனாகும். அதாவது விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு மேலதிக அலகும் மொத்த வருவாயில் விலைக்கு சமமானதொரு அதிகரிப்பை ஏற்படுத்தும். எனவே நிறைபோட்டியின் கீழ் நாம் $(R = MC)$ என்னும் விதியிலே எல்லை வருவாய்க்குப் பதிலாக விலையினை பிரதியீடு செய்யலாம். (02 புள்ளிகள்)

மாற்றீடான விடை

- புள்ளி விபர உதாரணங்களைப் பயன்படுத்தி அல்லது வரைபடம் மூலம் எல்லை வருமானமும் எல்லைச் செலவும் சமப்படும் நிலையினை விளக்கியிருத்தலும் சரியானது. (02 புள்ளிகள்)

- நிறைபோட்டி நிறுவன விலையானது சந்தையில் கொடுக்கப்பட்டதாக இருப்பதனால் $MR = AR$ ஆகும். அத்துடன் எந்த ஒரு நிறுவனத்திலும் $P = AR$ ஆகும். எனவே தான் நிறைபோட்டியில் $P = MR$ ஆகும். இதனால் நிறைபோட்டியில் $P = MC$ ஆகும். (02 புள்ளிகள்)

3 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்




பரீட்சார்த்திகளில் 49% சதவீதத்தினர் 03 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளனர் (வரைபு 2). இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.
அதில்,

0 - 5 புள்ளி ஆயிடையில் 43%
6 - 10 புள்ளி ஆயிடையில் 27%
11 - 15 புள்ளி ஆயிடையில் 22%
16 - 20 புள்ளி ஆயிடையில் 8%

என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 05 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இலகுதன்மை குறைவான பிரிவு (ii) ஆவதுடன் அதன் இலகுதன்மை 24% ஆகும். இலகுதன்மை கூடிய பிரிவு (iv) ஆவதுடன் அதன் இலகுதன்மை 53% ஆகும்.

- (i) ஆம் பிரிவின் இலகுதன்மை 39% ஆகும். குறைந்து செல்லும் விளைவு விதி, அளவுத்திட்ட விளைவு விதி என்பன உற்பத்திச் செலவில் பாதிப்பினைச் செலுத்தும் விதம் இவ்வினாவின் மூலம் கேட்கப்பட்டுள்ளது. உற்பத்திக் கோட்பாட்டில் குறுங்காலத்தையும் நீண்ட காலத்தையும் சரியாக இனங்கண்டு கொள்ளத் தவறியமையும் வெளியீடு, செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பை இனங்கண்டுகொள்ளத் தவறியமையும் தெரிகிறது. விசேடமாக வெளியீடு, செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பு, விளைவு வளையி, செலவு வளையி என்பவற்றைப் பயன்படுத்தி அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என எதிர்வு கூறலாம்.

- (ii) ஆம் பிரிவு, இவ்வினாவில் குறைந்த இலகுதன்மையைக் காட்டும் பிரிவாகும். அதன் இலகுதன்மை 24% ஆகும். நிறுவனம் ஒன்றின் எல்லைச் செலவு, தொழிலின் நிரம்பல் வளையி என்பன பற்றிக் கேட்கப்பட்டுள்ள இவ்வினாவை மாணவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளத் தவறியுள்ளமை தெரிகிறது. நிறுவனம், தொழில் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை இனங்கண்டு கொண்டாலும் நிறுவனத்தின் நிரம்பல் வளையி, மாறும் கிரயம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை இனங்காணத் தவறியுள்ளனர். அதேபோன்று நிறுவனமொன்றின் குறைந்த சராசரி மாறும் கிரயத்துக்கு மேலாக அமைந்துள்ள எல்லைச் செலவு வளையி நிரம்பல் வளையிக்கு சமனாகுமென்று தொழிலிலுள்ள எல்லா நிறுவனங்களின் நிரம்பல் வளையிகளின் நிலைக்குத்துக்களின் மொத்தத்தின் மூலம் கைத்தொழிலின் நிரம்பல் வளையி கட்டியெழுப்பப்படுவதும் உறுதிப்படுத்தப்படும் வகையில் விளக்கத்தினை வழங்குதல் முக்கியமாகும்.

- (iii) ஆம் பிரிவின் இலகுதன்மை 45% ஆகும். நிறைபோட்டிச் சந்தை ஒன்றின் நிறுவனத்தின் கேள்வி வளையி, கைத்தொழிலின் கேள்வி வளையி தொடர்பான அறிவினை அளவிடும் ஒரு வினாவாகும். நிறுவனமொன்றின் கேள்வி வளையியின் வடிவம், அதற்கான காரணம் என்பவற்றை அறிந்திருந்தாலும் தொழிலின் கேள்வி வளையியையும் அதற்கான காரணங்களையும் தெளிவாக அறிந்திராமை கடினத்தன்மைக்குக் காரணமாய் தெரிகிறது. மேலே (ii)ஆம் பிரிவைப் போன்று இங்கும் நிறுவனத்துக்கும்/ தொழில் சந்தைக்கும் இடையிலான தொடர்பினை பல்வேறு துறைகளினூடாக முன்வைத்துக் கற்பிப்பதனூடாக இக்குறைபாடுகளை குறைத்துக் கொள்ளலாம்.

★ (iv) ஆம் பிரிவு, இங்கு கூடிய இலகுதன்மையைக் கொண்ட பிரிவாகும். இதன் இலகுதன்மை 53% ஆகும். கணித்தலுடன் தொடர்புடைய ஒரு விடை எதிர்பார்க்கப்படுகிறது. வினாவில் ஒப்பீட்டளவில் வெற்றிகரமாக விடையளிக்கப்பெற்ற பிரிவு இதுவாகும். இலாபம், நட்டம், கிரயம், வருமானம் என்பன தொடர்பான கணித்தல்களில் மாணவர்களைப் பழக்கப்படுத்துவதன் மூலம் பல்வேறு குறைபாடுகளை மேலும் தவிர்த்துக் கொள்ளலாம்.

★ (v) ஆம் பிரிவின் இலகுதன்மை 44% ஆகும். இலாபத்தை உச்சப்படுத்துவதற்காக எல்லை வருவாய், எல்லைச் செலவு என்பன ஒன்றுக்கொன்று ஏன் சமப்பட வேண்டும் என்றும் நிறைபோட்டி நிறுவனமொன்றில் $MC = P$ ஆவது ஏன் என்றும் இவ்வினா மூலம் ஆராய்ந்து ஆராயப்படுகிறது. பெரும்பாலும் இவ்வாறான வினாக்களின் ஆரம்பப் பகுதிக்கு விடையளிக்கும் மாணவன் அத்துடன் விடையை நிறுத்திக்கொள்வதைக் காணக்கூடியதாக உள்ளது. எஞ்சிய பகுதியின் மீது கவனம் செலுத்தப்படுவதில்லை. அவ்வளவு கடினமத் தன்மை கொண்டிராத இப்பிரிவுக்கு குறைந்தளவான புள்ளிகள் பெறுவதற்கு இதுவொரு காரணமாகும். வினாக்களுக்கு விடையளிக்கும் பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்களிடம் காணப்படும் இவ்வாறான குறைபாடுகளைக் களைவதற்குப் பணியாற்ற முடியும்.

**வினா இலக்கம் 4**

**4.** (i) கையிருப்பு மாற்றங்கள் (Changes in inventory) என்பதனால் நீர் கருதுவதென்ன? கையிருப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள் முதலீட்டுச் செலவினத்தின் ஒரு கூறாக உள்ளடக்கப்படுவதேன்? (04 புள்ளிகள்)

(ii) அரசாங்கத்தின் வட்டிச் செலுத்தல்கள் தனியார் வருமானத்தின் (personal income) ஒரு கூறாகக் கருதவப்படும் அதேவேளை தேசிய வருமானத்தின் ஒரு கூறாகக் கருதப்படாததேன்? (04 புள்ளிகள்)

(iii) “தனது மொத்தத் தேசிய வருமானத்தை விடக்கூடுதலாக செலவு செய்யும் ஒரு நாடு அதன் வர்த்தக நிலுவையின் ஒரு குறை நிலையினைக் கட்டாயம் கொண்டிருக்கும்?”
இக்கூற்றின் மீது கருத்துரைக்குக. (04 புள்ளிகள்)

(iv) பொருளாதாரமொன்றின் பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன. (இலக்கங்கள் மில்லியன் ரூபாயில்)

| | | |
|---|---|---|
| தேசிய வருமானம் (Y) | = | 5 200 |
| செலவிடத்தக்க வருமானம் ($Y_d$) | = | 4 400 |
| நுகர்வு (C) | = | 4 100 |
| பாதீட்டுக் குறைநிலை (BD) | = | 150 |
| வர்த்தக நிலுவைக் குறைநிலை | = | 110 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி
(அ) அரச கொள்வனவுகளின் பெறுமதி (G)
(ஆ) சேமிப்பு (S)
(இ) முதலீடு (I) என்பவற்றைக் கணிப்பீடுக. (04 புள்ளிகள்)

(v) “மறைந்திருக்கும் பொருளாதாரம் (underground economy)” என்றால் என்ன? அதன் அளவினை எவ்வாறு குறைக்கலாம்? (04 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

**4.** (i) - கையிருப்புக்கள் (அ) உற்பத்திக்காக பயன்படுத்தும் பொருட்டு நிறுவனம் வைத்துள்ள பொருள் கையிருப்புக்கள் (ஆ) உற்பத்திச் செயன்முறையில் அரைகுறையாகச் செய்து முடிக்கப்பட்டுள்ள பொருள் கையிருப்புக்கள் (இ) விற்பனைக்காகத் தயாராக வைக்கப்பட்டுள்ள இன்னும் விற்பனை செய்யப்படாதுள்ள பொருள்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

- கையிருப்பு மாற்றங்கள் என்பது வருட ஆரம்பத்தில் காணப்பட்ட கையிருப்புக்களின் சந்தைப் பெறுமதிக்கும் வருட இறுதியில் அவற்றின் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாகும்.
- கையிருப்பு மாற்றங்கள் திட்டமிடப்பட்டதாகவோ அன்றேல் திட்டமிடப்படாததாகவோ இருக்கலாம். வெளியீட்டின் கையிருப்புக்கள் உற்பத்தி அல்லது விற்பனை வீதத்தில் ஏற்படும் தற்காலிக தளம்பல்களுக்கு மத்தியிலும் நிறுவனங்கள் தமக்கு கிடைக்கும் கொள்வனவுக் கட்டளைகளைப் பூர்த்தி செய்ய உதவுகின்றன. (02 புள்ளிகள்)

- வருட இறுதியில் காணப்படும் கையிருப்புக்கள் வருட ஆரம்பத்தில் இருந்ததை விட அதிகமாயின் கையிருப்புத் திரட்சி ஏற்பட்டுள்ளதாக அல்லது கையிருப்புக்களில் நேர்கணிய முதலீடு செய்யப்பட்டுள்ளதாக கூறுவோம். அது ஒரு நிகழ்கால முதலீடாக கருதப்படும். காரணம் அது உற்பத்தி செய்யப்பட்ட (அவை அரைகுறையாக உற்பத்தி செய்யப்பட்டாலும் கூட) ஆனால் நிகழ்கால நுகர்வுக்கு பயன்படுத்தப்படாத பொருள்களைக் குறிப்பதனாலாகும்.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிகழ்கால மொத்த வெளியீட்டினை அளவிடப் பயன்படுகிறது. எனவே இவ்வருடம் உற்பத்தி செய்யப்பட்ட ஆனால் இவ்வருடம் விற்பனை செய்யப்படாத எந்த ஒரு பொருளையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்க முயற்சித்தல் வேண்டும்.

- மொத்த உள்நாட்டு உற்பத்தியானது மொத்த உற்பத்தியின் சரியான ஒரு அளவையாக இருக்க வேண்டுமாயின் அது குறித்த வருடத்தில் கையிருப்புகளில் ஏற்பட்ட ஏதேனும் ஒரு அதிகரிப்பின் சந்தைப் பெறுமதியை உள்ளடக்க வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான செலவீட்டு அணுகு முறையில் கையிருப்பு மாற்றங்கள் முதலீட்டுச் செலவீட்டின் ஒரு கூறாக உள்ளடக்கப்படுகின்றன. (02 புள்ளிகள்)

(ii) - தேசிய கணக்கீட்டு நோக்கத்திற்காக அரசாங்கக் கடன்கள் மீதான வட்டிச் செலுத்தல்கள் ஒரு மாற்றல் செலுத்தலாகவே கருதப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாற்றல் செலுத்தல்கள் நீங்கலாக பொருள்கள் சேவைகள் மீதான செலவீடுகள் மாத்திரமே உள்ளடக்கப்படும். (02 புள்ளிகள்)

- இது கடந்தகால அரசாங்க செயற்றிட்டங்களுக்கு செலவிடும் பொருட்டு பெற்ற கடன்கள் மீதான ஒரு விளைவாகும். அது நிகழ்கால அரசாங்க பொருள்கள் சேவைகள் மீதான செலவீடன்று. எனவே மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீடுகளில் வட்டிச் செலுத்தல்கள் நீக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் அரசிடமிருந்து பெற்ற வட்டி வருமானங்கள் தனிநபர் வருமான கணிப்பீட்டில் உள்ளடக்கப்படும். (02 புள்ளிகள்)

(iii) - தேசிய வருமானம் வரைவிலக்கணப்படுத்தப்படுவது $Y = E\ (= C + I + G + NX)$

- நுகர்வு, முதலீடு மற்றும் அரசாங்க கொள்வனவுகள் மீதான செலவீடுகள் தேசிய வருமானத்தை விட உயர்வாக இருப்பின் அதன்போது தேறிய ஏற்றுமதிகள் எதிர்கணியமாகும்.
- $Y < (C + I + G)$, ஆயின் வர்த்தக நிலுவை $(X - M)$ எதிர்கணியமாகும். (02 புள்ளிகள்)

(iv) (அ) அரசாங்க கொள்வனவு (G):

வரிகள் $(T) = Y - Yd = 5\,200 - 4\,400 = 800$

பாதீட்டுக் குறைநிலை $(G - T) = 150$

$G - T = 150$

$G - 800 = 150$

எனவே, $G = 150 + 800$

$= 950$

(ஆ) சேமிப்பு (S):

சேமிப்பு = செலவிடத்தக்க வருமானம் (Yd) – தனியார் நுகர்வு (C)

$S = Yd - C$

$S = 4400 - 4100$

$= 300$

(இ) முதலீடு (I):

$Y = C + I + G + NX$

$5\,200 = 4\,100 + I + 950 + (-100)$

$I = 5\,200 - 4940 = 260$

- மறைந்திருக்கும் பொருளாதாரம் உத்தியோகபூர்வ இனங்காணலையும் அளவிடலையும் தவிர்க்கும் பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். இந்நடவடிக்கைகள் அடிப்படையில் ஒன்றில் உள்ளார்ந்த அடிப்படையில் சட்டரீதியற்றதாகவோ அல்லது வரிகளை தவிர்த்தல், அதிகாரிகளால் இணங்காணப்படாமலிருத்தல் அல்லது வேறு காரணங்களுக்காக அறிக்கையிடப்படாதவையாகவோ இருக்கலாம் (01 புள்ளி)

- சட்டரீதியற்ற நடவடிக்கைகளுக்கு உதாரணமாக சட்டவிரோத போதைப் பொருட் கடத்தல், கள்ளக் கணக்கு காட்டுதல், கணிகையர் தொழில் என்பவற்றைக் கூறலாம்.

- அறிக்கையிடப்படாத நடவடிக்கைகளுக்கு உதாரணங்களாக உணவு விடுதிகள், மதுபான நிலையங்கள், பல்வேறு சில்லறை நிறுவனங்களின் உரிமையாளர்கள் அல்லது முகாமையாளர்கள் அல்லது முகாமையாளர்கள் பற்றுச்சீட்டுக்களை முறையாக அறிக்கையிடாமை தற்காலிக அல்லது பகுதிநேர வருமானங்கள், ஹோட்டல் சிப்பந்திகள் போன்றோர் உழைக்கும் சன்மானங்கள் - குறிப்பாக சமுர்த்தி போன்ற நன்மைகளை இழக்க நேரிடும் என்ற காரணத்தினால் அறிக்கையிடப்படாத வருமானங்கள் என்பவற்றைக் கூறலாம்.
  - வரி வீதங்களைக் குறைத்தல்
  - வரி முறையினை சமத்துவம் வாய்ந்ததாக மாற்றுதல்
  - சட்டத்தை நடைமுறைப்படுத்த அதிக வளங்களை பயன்படுத்தல்.
  - மறைந்திருக்கும் பொருளாதார நடவடிக்கைகளில் பங்குபற்றுவோர் மீது விதிக்கப்படும் தண்டனைகளை அதிகரித்தல்
  - நல்லாட்சியை உறுதிப்படுத்தல்.

(ஒவ்வொன்றும் 01 புள்ளி வீதம் ஏதேனும் 2 காரணிகள்)

**4 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




4 ஆம் வினாவினை 36% மாணவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இவ்வினாவுக்கான புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளி ஆயிடையில் 59%
06 - 10 புள்ளி ஆயிடையில் 26%
11 - 15 புள்ளி ஆயிடையில் 12%
16 - 20 புள்ளி ஆயிடையில் 3%
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 7 பிரிவுகள், உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. இலகுதன்மை குறைவான பிரிவுகள் (i), (ii) என்பவற்றின் இலகுதன்மை 20% சதவீதப்படியாகும். இலகுதன்மை கூடிய உபபிரிவு (iv) (ஆ) ஆவதுடன் அதன் இலகுதன்மை 66% ஆகும்.

- (i) ஆம் பிரிவு முதலீட்டுச் செலவின் ஒரு பிரிவான கையிருப்பு மாற்றல்களை வரைவிலக்கணப்படுத்துவதையும் அதன் கூறுகள் தொடர்ரான அறிவைப் பரீட்சிக்கும் ஒரு வினாவாகும். இதன் இலகுதன்மை 20% ஆகும். கையிருப்பு மாற்றம் என்பது உற்பத்தி நிறுவனம் ஒன்றின் இறுதிக் கையிருப்பு, ஆரம்பக் கையிருப்பு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு என்றும் அதன்கீழ் மூலப்பொருள், அறைகுறை முடிவுப் பொருள், முடிவுப் பொருள் ஆகிய அனைத்துக் கையிருப்புகளும் உள்ளடங்குவதாகவும் குறிப்பிடத்தவறியுள்ளனர். அதே போன்று மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதிக்கு அனைத்து விளைதிறனான உற்பத்திகளின் பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் குறித்த வருடத்துள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படாத கையிருப்புகள் காணப்படல்.மொத்த உள்ளநாட்டு உற்பத்தியின் மெய்ப்பெறுமதி குறைவதறகுக் காரணமாவதனால் கையிருப்பு மாற்றங்கள் முதலீட்டுச் செலவின் ஒரு பிரிவாகக் கருதப்பட வேண்டும் என்பதனையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.
- (ii) ஆம் பிரிவினதும் இலகுதன்மை 20% ஆகும். அரச கடன்களுக்குச் செலுத்தப்படும் வட்டி ஒரு மாற்றல் கொடுப்பனவு என்பதனை பெரும்பாலான மாணவர்கள் விளங்கிக் கொண்டிருக்கவில்லை. அதேபோன்று அரசின் வட்டிச் செலுத்தல்கள் குறித்த வருடத்தின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒரு செலவாகக் காணப்படாமையினால் உற்பத்தியின் பெறுமதியை மதிப்பிடும் போது தவிர்க்கப்பட வேண்டும் என்பதனை விளக்குதல் முக்கியமாகும். இருப்பினும் தனியார் வருமானக் கணிப்பீட்டின் போது அது அதில் உள்ளடக்கப்படல் வேண்டும் என்பதனையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.
- (iii)ஆம் பிரிவு 21% இலகுதன்மையைக் கொண்ட ஒரு வினாவாகும். ஒரு நாடு தனது தேசிய வருமானத்துக்கு மேலதிகமக செலவு செய்யுமாயின் அவ்வாறு அதிகரித்த அளவு வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் உள்ளடக்கியுள்ள வர்த்தகக் கணக்கு மீதிக்குச் சமனாகும் என்பதனை சமநிலை தேசிய வருமானக் குறிகாட்டிகள் ஊடாக அளக்கும் ஆற்றல் இப்பிரிவில் எதிர்பார்க்கப்பட்டது. தேசிய வருமான சமநிலை பகுப்பாய்வின் போது வர்த்தக நிலுவை தேறிய ஏற்றுமதிகளுக்குச் சமனாகும் என்பதனையும் வருமானத்தை விட கூடுதலாக செலவு செய்யும் போது தேறிய ஏற்றுமதிகள் எதிர்கணிய பெறுமானத்தைப் பெற வேண்டும் என்பதையும் பெரும்பாலான மாணவர்கள் உறுதிப்படுத்தத் தவறியுள்ளனர்.

★ (iv)ஆம் பிரிவு தேசிய வருமானம் தொடர்பாகத் தரப்பட்ட தரவுகளிலிருந்து தேவையான விடைகளைக் கணிக்கப்படும் ஆற்றலைப் பரீட்சிப்பதாகும். இது 3 உபபிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு உபபிரிவின் இலகுதன்மையில் வேறுபாடுகள் காணப்பட்டன.

(அ) உபபிரிவின் இலகுதன்மை 44% ஆகும். தரப்பட்ட தரவுகளிலிருந்து வரியின் பெறுமதியையும் வரவு-செலவுத் திட்ட பற்றக்குறையைப் பயன்படுத்தி அரசகொள்வனவுகளை கணிப்பிடும் ஆற்றலைப் பரீட்சிப்பதுடன் அங்கு 56%கடினத்தன்மை காணப்பட்டது.

(ஆ) உபபிரிவின் இலகுதன்மை 66% என்றவொரு கூடிய சதவீதமாகும். பெரும்பாலானோர் செலவிடத்தக்க வருமானம் , நுகர்வு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டிலிருந்து சேமிப்பினைக் கணிப்பிட்டுள்ளனர்.

(இ) உபபிரிவின் இலகுதன்மை 29%ஆகும். தேசிய வருமானத்தின் சமநிலைக்கான நிபந்தனைகளைப் பயன்படுத்தி ஒரு கூறின் பெறுமதியைத் துணியும் திறன் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அத்தேர்ச்சி பெரும்பாலான மாணவர்களில் காணப்படாமையினால் 71% கடினத்தன்மை வெளிப்பட்டது. எனவே தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி சமநிலைத் தேசிய வருமானத்துடன் இணைந்த பல்வேறு எண்ணக்கருக்களைக் கணிப்பிடும் திறனை மேம்படுத்தல் வேண்டும்.

★ (v) ஆம் பிரிவின் இலகுதன்மை 45%ஆகும். விசேடமாக ‘மறைந்திருக்கும பொருளாதாரம்’ என்ற எண்ணக்கருவை சரியக வரைவிலக்கணப்படுத்தும் ஆற்றுலும் அதனுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளை உதாரணங்களுடன் காட்டும் ஆற்றலும் அதற்காக மனிதர்களில் காணப்படும் சிந்தனைகள், நடைமுறை நிலைமைகள் பாதிப்புச் செலுத்துதனை அழுத்தம் கொடுத்தல் முக்கயமாகும். அதே போன்று அந்நிலைமைகளை இழிவளவாக்கிக் கொள்ள அல்லது கட்டுப்படுத்த அரசினால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கத்தினை வழங்குதல் வேண்டும்.

**வினா இலக்கம் 5**

**5.** (i) “முதலீட்டுப் பெருக்கி” என்பதன் கருத்தைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) “பணவீக்க இடைவெளியையும் (inflationary gap)” “சுருக்க இடைவெளியையும் (recessionary gap)” வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) வருமானமட்ட நிர்ணயம் பற்றிய எளிமையான வருமான-செலவீட்டு மாதிரி, பொருளாதாரமானது ஒன்றில் பணவீக்கம் அல்லது வேலையின்மை கொண்ட நிலையிலோ அல்லது இவையிரண்டும் அற்ற நிலையிலோ சமநிலையடையலாம் என்பதைக் காட்டுகிறது. பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மூடிய பொருளாதாரமொன்றில் தரப்பட்ட காலப்பகுதியொன்றில் முதலீடு 100 ஆகவும் அரச கொள்வனவுகள் 75 ஆகவும், தேறிய வரிகள் 100 ஆகவும், நுகர்வு $C = 25 + 0.8Yd$ என்னும் சார்பினாலும் தரப்படுவதாகக் கொள்க.

இங்கு $Y_d$ செலவிடத்தக்க வருமானம் ஆகும்

(அ) அரசாங்க செலவீட்டுப் பெருக்கி மற்றும் வரிப்பெருக்கி என்பவற்றின் பெறுமானங்களைக் கணிப்பிடுக.

(ஆ) இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் மட்டம் 1000 ஆகக் கொள்க. நிறைதொழில் மட்ட வெளியீட்டை அடைய அரசாங்க செலவீடு எந்தளவால் அதிகரிக்கப்பட வேண்டும்? மாறாக வரி அறவீட்டை எந்தளவால் குறைத்தால் மட்டத்தை அடையப் போதுமானதாக இருக்கும்? (04 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

**5.** (i) - முதலீடானது வெளியீட்டின் மீது பெருக்கி விளைவினைக் கொண்டுள்ளது. முதலீடு மாற்றமடையும் போது வெளியீடானது முதலில் சமமான அளவினால் அதிகரிக்கும். ஆனால் மூலதனப் பொருள் உற்பத்திக் கைத்தொழில் ஈடுபட்டுள்ள வருமானம் பெறுவோரின் வருமானங்கள் அதிகரிப்பதனால் அது மேலதிகமாக இரண்டாம் நிலை நுகர்வுச் செலவு அதிகரிப்பினை ஏற்படுத்தும். இத்தகைய வியப்புக்குரிய விளைவே பெருக்கி விளைவென அழைக்கப்படுகிறது. (02 புள்ளிகள்)

- முதலீட்டுப் பெருக்கியானது ஆரம்பத்தில் திட்டமிட்ட முதலீட்டில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் அதன் காரணமாக தேசிய வருமானத்தில் ஏற்பட்ட மாற்றித்திற்கும் இடையிலான விகிதமென வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

$$\text{முதலீட்டுப் பெருக்கி (K)} = \frac{\text{மெய் மொ. உ. உ. மாற்றம்}}{\text{முதலீட்டில் ஏற்பட்ட ஆரம்ப மாற்றம்}}$$

$$= \frac{\Delta Y}{\Delta I}$$

(01 புள்ளி)

- முதலீட்டுப் பெருக்கியின் அளவு எல்லை நுகர்வு நாட்டத்தின் (MPC) அளவில் தங்கியுள்ளது. முதலீட்டுப் பெருக்கியை எல்லைச் சேமிப்பு நாட்டத்தின் (MPs) அடிப்படையிலும் காட்டலாம். முதலீட்டுப் பெருக்கிக்கான சூத்திரம் $K = 1/1-MPC$ அல்லது $K = 1/MPS$ (01 புள்ளி)

(ii) - பணவீக்க இடைவெளி என்பது நிறைதொழில் மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அந்நிறைதொழில் மட்டத்தை அடையத் தேவையான அளவை விட பொருளாதாரத்தின் மொத்தச் செலவீடுகள் கூடுதலாக உள்ள அளவினால் காட்டப்படும். (நிறைதொழில் மட்ட வெளியீட்டை விட மொத்த கேள்வி மட்டம் குறைவாக இருத்தல்)
(01 புள்ளி)

- பணச்சுருக்க இடைவெளி என்பது நிறைதொழில்மட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதனை அடையத்தேவையான அளவை விட பொருளாதாரத்தின் மொத்தச் செலவீடுகள் எந்தளவினால் குறைவாக உள்ளது என்பதைக் காட்டும். (நிறைதொழில் மட்ட வெளியீட்டை விட மொத்த கேள்வி மட்டம் குறைவாக இருத்தல்) (01 புள்ளி)

- பணவீக்க இடைவெளியின் காரணமாக (மிகைச் செலவினங்கள்) வெளியீடுகளின் விலைகள் உயரும். வியாபார முயற்சிகள் மிகைச் செலவினங்களுக்கு ஏற்ப தமது வெளியீட்டை விரிவாக்கம் செய்ய முடியாத காரணத்தால் கேள்வித் தூண்டல் பணவீக்கம் ஏற்படும். உயர்ந்த விலைமட்டம் காரணமாக பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும். ஆனால் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்காது. (01 புள்ளி)

- பணச்சுருக்க இடைவெளியின் காரணமாக (செலவினப் பற்றாக்குறை) அது பொருளாதாரத்தை சுருங்கச் செய்வதனால் பொருளாதாரத்தில் வேலையின்மையும் மெய் வெளியீட்டில் வீச்சியும் ஏற்படும். (01 புள்ளி)



(iii) - தேசிய வருமானம் அதிகரிக்கும் போக்கோ அல்லது குறைவடையும் போக்கோ அற்றதோர் நிலையில் சமநிலையில் உள்ளதாகக் கூறப்படும். சமநிலையின் போதுள்ள தேசிய வருமானத்தின் பெறுமதி சமநிலைத் தேசிய வருமானம் எனப்படும். சமநிலை ஏற்பட தேவையான நிபந்தனைகளை இருவடிவங்களாகக் காட்டலாம்.

(அ) விரும்பத்தக்க செலவீடுகள் (Desired expenditures) உண்மை வெளியீட்டிற்கு (Actual output) சமப்படல் $Y = E$ (வருமான செலவீட்டு முறை)

(ஆ) வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களுக்கு சமப்படல் (வெளிப்பாய்ச்சல் - உட்பாய்ச்சல் முறை) இச்சமநிலை நிபந்தனை பூர்த்தி செய்யப்படும் போது பொருளதாரம் பின்வருமாறு பணவீக்கத்துடனோ அல்லது வேலையின்மையுடனோ அல்லது இவையிரண்டும் அற்ற நிலையிலோ சமநிலையில் இருக்கலாம்




(iv) (அ) - அரசாங்க செலவீட்டுப் பெருக்கி : $K_G = 1/(1-MPC)$ (01 புள்ளி)

- $K_G = 1 / (1-0.8) = 1 / 0.2 = 5$ (01 புள்ளி)

- வரிப்பெருக்கி : $K_T = MPC / (1 - MPC)$ (01 புள்ளி)

- $K_T = 0.8 / (1 - 0.8) = 0.8 / 0.2 = 4$ (01 புள்ளி)

(ஆ) - தற்போதைய சமநிலை வருமான மட்டம் : $Y = C + I + G$

- $Y = 25 + 0.8(Y - 100) + 100 + 75$

- $Y = 25 + 0.8Y - 80) + 100 + 175$

- $Y = 0.8Y + 120$

- $Y - 0.8Y = 120$

- $0.2Y = 120$

- $Y = 600$

- வெளியீட்டு இடைவெளி = நிறைதொழில் வருமான மட்டம் – தற்போதைய வருமான மட்டம்

= 1000 – 600

= 400

- நிறைதொழில் மட்டத்தை அடையத்தேவையான அரசாங்க செலவீடு :

  வெளியீட்டு இடைவெளி / அரச செலவீட்டுப் பெருக்கி ($K_G$)

  = 400 / 5

  = 80

- நிறைதொழில் மட்டத்தை அடையத்தேவையான வரிக்குறைப்பு :

  வெளியீட்டு இடைவெளி / வரிப்பெருக்கி ($K_T$)

  = 400 / 4

  = 100

**5 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




இவ்வினாப்பத்திரத்தில் உபபிரிவு ‘அ’விலுள்ள வினாக்கள் குறைந்த எண்ணிக்கையானோர் தெரிவு செய்துள்ள வினா 05 ஆம் வினாவாகும் (வரைபு 2). அதன் சதவீதம் 23% ஆகும். இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளி ஆயிடையில் 46%
06 - 10 புள்ளி ஆஆயிடையில் 27%
11 - 15 புள்ளி ஆஆயிடையில் 22%
16 - 20 புள்ளி ஆஆயிடையில் 5%

என்றவாறு வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 4 பகுதிகள் காணப்படுவதுடன் (iv) ஆம் பகுதி (அ), (ஆ) ஆகிய இரண்டு உபபகுதிகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவில் கூடிய இலகுதன்மை (iv) (அ) உபபகுதிக்கு உரித்தாவதுடன் அதன் இலகுதன்மை 67% ஆகும். குறைந்த இலகுதன்மையை (ii) பகுதி கொண்டுள்ளதுடன் அதன் இலகுதன்மை 18% ஆகும்.

⋆ (i) ஆம் பகுதியின் இலகுதன்மை 37% ஆகும். முதலீட்டுச் செலவுக்கு வெளியீட்டின் அடிப்படையில் பெருக்கப்பட்ட பெறுபேறுகளை உருவாக்கும் ஆற்றல் காணப்படுகின்றமையையும் பல்வேறு செலவுச் சுற்றோட்டங்களினூடாக அது நடைபெறுகின்றமையையும் அறிந்திருத்தல் மொத்த உற்பத்தியினதும் முதலீட்டுச் செலவின் வேறுபாட்டினதும் விகிதாசாரத்தினூடாக முதலீட்டுப் பெருக்கியை கணிப்பிடும் ஆற்றலை கண்டறிவதுடன் தொடர்புடைய வினாவாகும். அதற்கு மேலதிகமக எல்லை சேமிப்பு நாட்டம், எல்லை வெளிப்பாய்ச்சல் விகதம் அளவின் அடிப்படையில் பெருக்கியின் அளவு தீர்மானிக்கப்படுதனை எதிர்வுகூறும் திறன் இன்மை குறைந்த அடைவுக்குக் காரணமாகி உள்ளதனால் அது தொடர்பான ஆற்றல் விருத்தியடையும் வகையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.

பகுதி II இன் இலகுதன்மை 18% ஆகும். அது 5 ஆம் வினாவில் கூடிய கடினத்தன்மையைக் கொண்ட ஒரு பகுதியாகும். தேசிய வருமானத்தில் நிறைதொழில் மட்டம் மொத்தச் செலவீடுகள் (கேள்வி) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு பணவீக்க, பணசுருக்க இடைவெளி உருவாக்கக் காரணமாகும் என்பதனை விளக்குவதற்கும் தேசிய வருமான சமநிலையை எடுத்துக் காட்டும் வருமானம் = செலவு (Y = E) என்பதனை வரைபடம் ஒன்றின் மூலம் விளக்கும் திறனை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iii) பகுதியின் இலகுதன்மை 28% ஆகும். சமநிலைத் தேசிய வருமானம் நிர்ணயிக்கப்படும் வருமனம் = செலவு Y = E உட்பாய்ச்சல்கள் = வெளிப்பாய்ச்சல்கள் (W = G) ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில் கேட்கப்பட்ட ஒரு வினவகும். இந்நிபந்தனைகள் நிறைவு செய்யப்படும்போது தீர்மானிக்கப்படுகின்ற வருமான மட்டத்தில் பொருளாதரம் சமநிலையை அடைந்தாலும் அம்மட்டமானது நிறைதொழில் மட்டத்தைவிட அதிகமெனின் பணவீக்கமும் நிறைதொழில் மட்டத்தை விட குறைவெனில் வேலையின்மையும் காணப்படுவதாகும். மொத்தக் கேள்வி உண்மை வெளியீட்டிற்கு சமப்படும்போது பணவீக்கமோ அல்லது வேலையிண்மையோ உருவாகாது. எனபதனையும் (y = E) வரைபடத்தின் ஊடாக விளககும் திறனை விருத்தி செய்தல் வேண்டும்.

(iv) ஆம் பகுதி (அ), (ஆ) ஆகிய இரண்டு உபபகுதிகளை கொண்டது. (அ) பகுதியின் இலகுதன்மை 67% ஆகும். பேரினப் பொருளாதார சமநிலைகளுக்குரிய தரவுகளின் அடிப்படையில் அரசாங்க செலவீட்டு பெருக்கி, வரிப்பெருக்கி ஆகியவற்றை கணிப்பிடும் திறனை பரீட்சிக்க எதிர்பார்த்த ஒரு வினாவாகும். பெரும்பாலான மாணவர்களிடத்தில் அத்திறன் காணப்பட்டதுடன் மேலும் அவ்வாற்றல் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஆ) பகுதியின் இலகுதன்மை 43% ஆகும். நடைமுறையில் உள்ள வெளியீட்டு மட்டமொன்றிலிருந்து நிறைதொழில் மட்டத்தை அடைந்து கொள்வதற்கு அரச கொள்வனவுகளை எவ்வளவு அதிகரிக்க வேண்டும், எந்த அளவால் வரி அளவீடு குறைக்கப்படல் வேண்டும் ஆகிய இரு மாற்று வழிகளை கணிப்பிடும் திறனை அளவீடு செய்வதில் கவனம் செலுத்திய ஒரு வினாவாகும். அதற்காக வெளியீட்டு இடைவெளி அரசாங்க கொள்வனவு பெருக்கி வரி பெருக்கி

## உப பிரிவு ‘ஆ’

**வினா இலக்கம் 6**

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க.)

**6.** (i) “உயர்வலுப்பணம்” என்பதனால் கருதப்படுவதென்ன? மத்தியவங்கியினால் எவ்வாறு உயர்வலுப்பணம் உருவாக்கபடலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) பொருளாதாரமொன்றின் பண நிரம்பலை நிர்ணயிக்குங் காரணிகள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) இலங்கையின் நிதி முறைமையினுள் உள்ளடங்கும் நிறுவனங்களின் பிரதான வகைகள் (categories) யாவை? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் (ஆ) ரூபா. 1200 மில்லியன் எனவும் மொத்த வங்கி வைப்புகள் (D) ரூபா. 800 பில்லியன் எனவும், தேவைப்படும் ஒதுக்கு - வைப்பு வீதம் 10% எனவும் வங்கிகள் மிகை ஒதுக்குகளைப் பேணவில்லை எனவுங் கொள்க.

(அ) இப்பொருளாதாரத்தின் பணப் பெருக்கியின் பெறுமானம் யாது?

(ஆ) மத்தியவங்கியானது ரூபா. 3 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை வணிக வங்கிகளிடமிருந்து கொள்வனவு செய்யுமாயின், அதன் காரணமாக பண நிரம்பல் மாற்றமடையக் கூடிய உச்ச அளவு யாது?

(iv) “நாணயக் கணியக் கோட்பாடு” பற்றிய சுருக்கமான விளக்கம் ஒன்றை முன்வைக்குக. அதன் எடுகோள்களை அடையாளங் காண்க. (04 புள்ளிகள்)

## எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

**6.** (i) - உயர்வலுப் பணமானது ஒதுக்குப்பணம் அல்லது பணஅடித்தளம் எனவும் அழைக்கப்படும். இதனை அடிப்படையாகக் கொண்டே மிகப் பெரிய அளவிலான பணச் சொத்துக் கையிருப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. இது நாட்டின் பண நிரம்பலைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். பணநிரம்பலானது எப்போதும் உயர்வலுப் பணத்தின் பெருக்கமாகவே காணப்படும். $M = mH$, இங்கு M என்பது பணநிரம்பல் m பணப்பெருக்கி, H என்பது உயர்வலுப்பணம்.

(01 புள்ளி)

உயர்வலுப் பணமானது

(அ)பொதுமக்களிடமும் வணிகங்களிடமும் உள்ள நாணயம்.

(ஆ) வணிக வங்கிகள் மத்திய வங்கியில் வைத்துள்ள வைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

(01 புள்ளி)

- மத்திய வங்கியிலிருந்து உயர்வலுப்பணத்தை நாட்டின் பொருளாதாரத்துடன் தொடர்புபடுத்தும் இரு வழிவகைகள் உள்ளன.
  முதலாவது மத்திய வங்கி அரசாங்கத்திற்கு / வணிக வங்கிகளுக்கு கடன் வழங்குவதன் மூலம் உள்நாட்டுச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்.

- மத்திய வங்கியிடமிருந்து கடன் பெறுவதானது மத்திய வங்கிப் பெட்டகங்களிலிருந்து தாள் மற்றும் குற்றி நாணயங்கள் வெளியேற்றத்தை ஏற்படுத்தும். அவற்றை அரசாங்கம் தனது செலவினங்களை நிதிப்படுத்தப் பயன்படுத்தும் போது அவை பொதுமக்களினதும் வங்கி முறைமையினதும் சொத்துக்களாக மாற்றமடையும்.

- அவ்வாறே வணிக வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து கடன்பெறும் போது அல்லது தமது சொத்துக் கட்டமைப்பிலுள்ள திறைசேரி உண்டியல்கள் போன்ற உள்நாட்டுச் சொத்துக்களை மத்திய வங்கிக்கு விற்பனை செய்யும் போது உயர்வலுப் பணம் விரிவடையும். (01 புள்ளி)

  இரண்டாவது வழிவகையாக மத்தியவங்கி அந்நியச் செலாவணிச் சந்தையில் மேற்கொள்ளும் பரிமாற்றங்கள் அமைகின்றன. மத்தியவங்கியானது அந்நியச் செலாவணியை அரசாங்கத்திடமிருந்தோ அல்லது வணிக வங்கியிடமிருந்து கொள்வனவு செய்யும் போது அதற்குப் பதிலாக உள்நாட்டு நாணயத்தை விற்பனை செய்யும் இது உயர்வலுப் பண விரிவாக்கத்தை ஏற்படுத்தும்.

(ii) பண நிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள்

(அ) உயர் வலுப்பணத்தை பாதிக்கும் காரணிகள்

- மத்தியவங்கி அரசாங்கத்திற்குக் கடன் வழங்கல்
- மத்தியவங்கி வணிக வங்கிகளுக்கு கடன் வழங்கல்
- வணிக வங்கிகளுடனான மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்
- மத்திய வங்கி அந்நியச் செலாவணியைக் கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல் (வெளிநாட்டுச் சொத்துக்கள்)
- மத்தியவங்கியின் ஏனைய தேறிய சொத்துக்கள்
- மத்திய வங்கியின் இலாபங்கள் அரசாங்கத்திற்கு மாற்றப்படல்.

(ஆ) பணப்பெருக்கியின் பருமனில் பாதிப்பை ஏற்படுத்துங் காரணிகள்

- பரிமாற்றத்திற்காக பொதுமக்கள் பணத்தைப் பயன்படுத்துவதற்கான விருப்பம் (நாணய - வைப்புப் பங்கீடு)
- சட்டரீதியான ஒதுக்கு வீதம்
- மிகை ஒதுக்குக்குகள் (02 புள்ளிகள்)

(iii) - வங்கித் துறை

- வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்
- சிறப்பியல்பு வாய்ந்த நிதி நிறுவனங்கள்
- ஒப்பந்த அடிப்படயிலான சேமிப்பு நிறுவனங்கள்

(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)

(iv) (அ) பணப்பெருக்கி

- பணநிரம்பல் (M) = நாணயம் (CU) + வைப்புகள் (D)

$CU = M - D = 1200 - 800 = 400$

வங்கிகள் மிகை ஒதுக்குகளைப் பேணவில்லையாயின்

ஒதுக்குச் சொத்துக்கள் (R) $= (0.1)D = (0.1)800 = 80$ அத்துடன்

உயர்வலுப்பணம் (H) $= CU + R = 400 + 80 = 480$

பணப்பெருக்கி : $M/H = m + R = 1200 / 480 = 2.5$ (02 புள்ளிகள்)

(ஆ) மத்தியவங்கி வணிக வங்கிகளிடமிருந்து ரூபா. 3 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாயின் அதன் விளைவாக பணநிரம்பலில ஏற்படும் உச்ச அதிகரிப்பு ரூபா. 7.5 பில்லியனாகும். ஏனெனில் $\Delta M = m(\Delta H) = 2.5\ (3) =$ ரூபா. 7.5 பில்லியனாகும். (02 புள்ளிகள்)

(v) நாணயக் கணியக் கோட்பாடானது பொதுவிலை மட்டமானது பணத்தின் அளவுடன் நேர்கணிய ரீதியில் தொடர்புபட்டுள்ளதென எதிர்வு கூறுகிறது. (நேர்விகிதசம ரீதியான தொடர்பு) அதாவது பணத்தின் அளவில் ஏற்படும் மாற்றங்கள் விலை மட்டத்தில் அயேளவிலான (நுற்றுவீத) மாற்றத்தை ஏற்படுத்தும். உதாரணமாக பணத்தின் அளவு இரட்டிக்குமாயின் அது விலைமட்ட இரட்டிப்புக்கு இட்டுச் செல்லும்.

- நாணயக்கணியக் கோட்பாடானது பணநிரம்பலில் ஏற்படும் மாற்றங்களை விலைமட்ட மாற்றங்களுடன் தொடர்புபடுத்துவதற்கு பரிமாற்றம் சமன்பாட்டைக் கையாள்கிறது.

பரிமாற்றச் சமன்பாடு பின்வருமாறு எழுதப்படலாம்.
$MV = PT$

இது ஒரு சமன்பாடாகக் குறிப்பிட்ட போதிலும் உண்மையில் அது ஒரு வரைவிலக்கணம் சார்ந்த சமன்பாடாகும். அதாவது எவ்வாறு மாறிகள் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறதோ அதன் உண்மைத் தன்மையின் மீது உருவாக்கப்பட்டதோ சமன்பாடாகும்.
எவ்வாறாயினும் இச்சமன்பாடானது அதில் உள்ளடங்கப்பட்டுள்ள மாறிகள் தொடர்பான சில எடுகோள்களைப் பிரயோகிப்பதன் மூலம் விலைநிர்ணயம் பற்றிய ஒ கோட்பாடாக (நாணயக் கணியக்கோட்பாடு) மாற்றியமைக்கப்படலாம்.

இதன்போது இரு எடுகோல்கள் கையாளப்படும்.
ை. பணச் சுற்றோட்ட வேகம் (ஏ) சார்பளவில் நிலையானதாகும்.
ஐஐ. பொருளாதாரம் நிறைதொழில் மட்டத்தில் உள்ளதனால் வெளியீட்டின் பௌதிக ரீதியிலான பருமன் (லு அல்லது வு) நிலையானதாகும்.

பரிமாற்றச் சமன்பாட்டின் ஏ மற்றும் லு அல்லது வு ஆகிய மாறிகள் நிலையாக உள்ளபோது ஆ மற்றும் ீ ஆகிய மாறிகளிடையே நேர் விகிதமமானதும் நேர்க்கணியமானதுமான தொடர்பு காணப்படும். (ஒவ்வொரு எடுகோளுக்கும்)

### 6 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்




பரீட்சார்த்திகளில் 9% சதவீதத்தினர் இவ்வினாவுக்கு விடை அளித்துள்ளனர். (வரைபு 2). இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளி ஆயிடையில் 58%
06 - 10 புள்ளி ஆயிடையில் 28%
11 - 15 புள்ளி ஆயிடையில் 12%
16 - 20 புள்ளி ஆயிடையில் 2%
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 05 பகுதிகளை கொண்டுள்ளதுடன் (iv) பகுதியின் இரு உபபிரிவுகளாக் கொண்டுள்ளது. பகுதி (v) இலகுதன்மை அதிகமாக காணப்பட்ட போதிலும் அது 38% இற்கு வரையறுக்கப்பட்டுள்ளது. இலகுதன்மை குறைந்த உபபகுதி (iv) (அ) ஆவதுடன் அதன் இலகுத்னமை 10% மட்டுமே. (ஆ) உபபகுதி அடுத்த குறைந்த இலகுதன்மையைக் கொண்ட உபபகுதியாகும். அதன் இலகுதன்மை 15% ஆகும். ஏனைய மூன்று பகுதிகளினதும் இலகுதன்மை 28%-35% என்ற ஆயிடையில்

பிரிவு (i) உயர்வலுப்பணம் என்றால் என்ன என்பது பற்றியும் மத்திய வங்கியினால் உயர்வலு பணம் உருவாக்கப்படும் விதம் என்பன பற்றிய மாணவர்களின் அறிவு இதன்மூலம் பரீட்சிக்கப்படுகிறது. இப்பகுதியின் இலகுதன்மை 30% ஆகும். மாணவர்கள் உயர்வலுப் பணத்தின் உள்ளடக்கங்களை குறிப்பிட்ட போதிலும் மத்திய வங்கி உயர்வலுப்பணத்தை உருவாக்குதல் என்பதில் மாணவர் ஆரம்ப அனுபவமின்மையை வெளிக்காட்டியுள்ளனர். உயர்வலுப்பணம் உருவாக்கப்படல் மத்திய வங்கியின் செயற்பாடுகள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு தெளிவுபடுத்தும் வகையில் கற்றல் கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைத்துக் கொள்ளல் முக்கியமானதாகும்.

பிரிவு II இன் இலகுதன்மை 28% ஆகும். பொருளாதாரமொன்றின் பண நிரம்பலை நிர்ணயிக்கும் கரணிகள் தொடர்பான அடிப்படை அறிவைப பரீட்சிக்கும் ஒரு வினவாகும். பண நிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகள் தொடர்பன அடிப்படை அறிவைக்கொண்டு இதற்கு விடையளிக்கலாம். இருப்பினும் இலகுதன்மை இந்தளவுக் குறையக் காரணம் போதுமானளவு பாட விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தாமையாக இருக்கலாம்.

பகுதி (iii)
இவ்வினாவில் ஒப்பீட்டு ரீதியில் இலகுதன்மை கூடியவொரு பகுதியாகும். இதன் இலகுதன்மை 35% ஆகும். இதற்கு முன்னரும் இதுபோன்றதொரு வினா கேட்கப்பட்டிருந்தமையால் கடந்தகால வினாப்பத்திரங்களை பரீட்சித்ததன் காரணமாக வெற்றிகரமான விடைகள எழுதுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிகிறது.

பகுதி (iv) ஆம் பிரிவின் (அ), (ஆ) ஆகிய இரு உபபகுதிகளைக் கொண்டுள்ளது. 6 ஆம் வினாவில் குறைந்த இலகுதன்மையைக் கொண்டது இவ்விரு உபபகுதிகளாகும்.

வினவில் தரப்பட்டுள்ள தகவல்களுக்குச் சமனான தகவல்களிலிருந்து பணவாக்கம் தொடர்பாக மாணவர்கள் பழக்கப்பட்டிருந்த போதிலும் பணப்பெருக்கியைக் கணிப்பதில் ஆரம்ப அனுபவமின்மையைக் காண்பிக்கின்றனர்.

புதிய வைப்புக்கள் வங்கிகளுக்கு உட்பாய்ச்சப்படுத்துவதுடன் பணநிரம்பல் பரவலடையும் விதம் தொடர்பாக மாணவர்களிடம் போதுமான அறிவு காணப்பட்ட போதிலும் திறைசேறி உண்டியல்களை வணிக வங்கிகள் கொளவனவு செய்தவதனால் பண நிரம்பல் பரவலடைவதில் ஏற்படுத்தும் பாதிப்பு தொடர்பாக மாணவர்களின் அறிவு போதாமை தெரிகிறது. எனவே மத்திய வங்கிக்கும் வணிகவங்கிகளுக்குமிடையி ல் திறைசேறி உண்டியல்களின் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுவது பண நிரம்பலில் ஏற்படுத்துமு் தாக்கம் தொடர்பாக மாணவரின் அறிவு உறுதிப்படுத்தப்படும வகையில் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்படல் முக்கியமனதாகும்.

பகுதி (v)
இவ்வினாவில் கூடிய இலகுதன்மையைக கொண்ட பிரிவு இதுவாகும். இதன் இலகுதன்மை 38% ஆகும். சிக்கலான பிரச்சினைகளைக் கொண்டிராத இப்பகுதிக்கு அடிப்படை அறிவைக் கொண்டு விடையளிக்கலாம். மாணவர்கள் போதுமனளவு பாட விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தாமை வெளிப்படுகிறது. பயிற்சிகளில் மாணவர்கள் ஈடுபடும் வகையில் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ளல் வேண்டும்.

**வினா இலக்கம் 7**

**7.** (i) வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதில் சந்தைகள் ஏன் தோல்வியடையலாம்? (04 புள்ளிகள்)

(i) பொருத்தமான வரைபடத்தின் உதவியுடன் இலங்கையின் சாலைகளில் சமூகரீதியில் விரும்பத்தக்க எண்ணிக்கையை விட மிக அதிகமான மோட்டார் வாகனங்கள் காணப்படுவது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) சந்தைப் பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் வகிபாகம் (role) தவிர்க்க முடியாததாக இருப்பதேன்? (04 புள்ளிகள்)

(iv) சிறந்த வரிமுறையொன்றின் விரும்பத்தக்க பண்புகளைக் கூறுக. (04 புள்ளிகள்)

(iii) இறைக்கொள்கையானது வருமானச் சமமின்மையை நீக்கக் கூடிய வழிவகைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

**7.** (i) சந்தைத் தோல்விக்கான காரணங்கள்

- சந்தைச் சக்தி நிலவுகின்றமை
- பொதுப்பொருள்கள் வாங்கப்படாமை
- சமூகநலப் பொருட்களை குறைவாக வழங்குதல்
- உற்பத்தி மற்றும் நுகர்வில் வெளிவாரிகள் நிலவுகின்றமை
- பொதுவழங்கள் மிகைப்பயன்பாட்டுக்குட்படுகின்றமை.
- நிறைவில் போட்டி காணப்படுகின்றமை
- காரணி அசைவின்மை
- தொலைந்துபோன சந்தைகள்
- சமமற்ற வருமானப் பங்கீடு

(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் நான்கு காரணங்களுக்கு 04 புள்ளிகள்)

(ii) இது நுகர்வில் எதிர்கணிய வெளிவாரியைக் குறிப்பதாகும். பொது நெடுஞ்சாலைகளை அடிக்கடி பயன்படுத்தும் மோட்டார் வாகன சாரதிகள் நுகர்வில் எதிர்கணிய செலவாகக் கருதப்படும். போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்துகின்றனர். இது ஒரு வெளிவாரிச் செலவாகையால் தனியார் வாகனச் சொந்தக்காரர்கள் தமது நுகர்வுத் தீர்மானங்களை (வாகனத்தைச் செலுத்தும்) எடுக்கும்போது இதனைக் கருத்திற்கொள்ளமாட்டார்கள். தனியார் நன்மைகளை மட்டும் கருத்திறகொண்டு வெளிவாரிச் செலவுகளை கருத்திற் கொள்ளாமல் எடுக்கப்படும் நுகர்வுத் தீரு்மானங்கள் சமூகத்தால் விரும்பப்படாத ஒரு நுகர்வுமட்டத்திற்கு (மிகை நுகர்வுக்கு) இட்டுச் செல்லும். (01 புள்ளி)







(iii) அரசாங்கத்தின் வகிபாகம்

- உயிர்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்க அதிகார பலத்தை உபயோகிக்கும் தனியுரிமைச் சக்தியைப் பிரயோகித்தல் மற்றும் சொத்துரிமையை நிலைநாட்டல்
- சந்தைத் தோல்விக்கான பல்வேறு காரணங்களையும் இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதன் மூலம் பொருளாதார வினைத்திறனை முன்னேற்றல்
- மனிதனால் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களை மதிப்பீடு செய்யும் சாத்தியம் மற்றும் அவற்றின் விளைவுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பவற்றை உள்ளடக்கியதாக சூழற்பாதுகாப்பினை ஏற்படுத்தல்.
- ஏற்றுக்கொள்ளப்பட்டதோர் நியம அளவில் சமத்துவத்தை அடைதல்
- பொருளாதார வளர்ச்சி வீதத்தில் செல்வாக்குச் செலுத்தல்
- வருமான மற்றும் விலைமட்டத் தளம்பல்களுக்கு எதிராக பொருளாதா உறுதிப்பாட்டை ஏற்படுத்தல்.

(ஒரு காரணத்திற்கு 01 புள்ளி வீதம் நான்கு காரணிகளுக்கு 04 புள்ளிகள்)

(iv) சிறந்த வழிமுறையொன்றின் விரும்பத்தக்க பண்புகள்:

- சமத்துவம் நியாயத்துவம்
- நிச்சயத்தன்மை
- இலகுத்தன்மை

- சிக்கனத்தன்மை
- நெகிழ்த்தன்மை
- எளிமைத்தன்மை (ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)

(v) - விருத்திமுறை வரி முறைமையைக் கையாளல்
- சமூக பாதுகாப்பு வலைபின்னலை ஏற்படுத்தல்
- கல்வி, சுகாதாரம், வீடமைப்பு மீதான செலவீடுகளை அதிகரித்தல்
- வரி தவிர்ப்பு மற்றும் ஏய்ப்பு என்பவற்றிற்கான வாய்ப்புக்களை குறைத்தல்.
- வரியவர்களுக்குச் சார்பான வளர்ச்சித் தந்திரோபாயங்களை நடைமுறைக்கிடல்.

**7 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




இவ்வினாப்பத்திரத்தில் உபபிரிவு ‘ஆ’விலுள்ள வினாக்களுள் அதிகமானோர் தெரிவு செய்துள்ள வினா இதுவாகும். அதன் சதவீதம் 85% ஆகும். (வரைபு 02) இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளி ஆயிடையில் 40%
06 - 10 புள்ளி ஆயிடையில் 27%
11 - 15 புள்ளி ஆயிடையில் 22%
16 - 20 புள்ளி ஆயிடையில் 11%
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 5 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் (iv) ஆம் பிரிவு மிக இலகுவான வினாவாகக் காணப்படுகிறது. அதன் இலகுதன்மை 62% ஆகும். குறைந்த இலகுதன்மையைக் கொண்ட பிரிவு (ii) ஆவதுடன் அதன் இலகுதன்மை 62% ஆகும். (i), (iii), (v) ஆகிய பிரிவுகளின் இலகுதன்மை முறையே 45%, 42%, 32% ஆகும்.

பிரிவு (i)இன் இலகுதன்மை 45% ஆகும். வளங்களை வினைத்திறனக ஒதுக்கீடு செய்வதில் சந்தைகள் தோல்வியடையக் கூடிய விதம் தொடர்பான மாணவர்களின் அறிவைப் பரீட்சிப்பது இதன் நோக்கமாகும். இதுவொரு சிக்கலான வினாவன்று. பாட விடயங்கள் தொடர்பான சாதாரண அறிவைக் கொண்டு விடையளிக்கலாம். மாணவர்களில் சுயகற்றல் திறனை மேம்படுத்தல் வேண்டும்.

ii ஆம் பிரிவின் இலகுதன்மை 28% ஆகும் இது இவ்வினாவில் குறைவான இலகுதன்மையைக் கொண்ட ஒரு பிரிவாகும். இவ்வினாவில் கோட்பாட்டு ரீதியான அறிவு செயற்பாட்டு ரீதியில் கேட்கப்பட்டுள்ளது. கோட்பாட்டு ரீதியான அறிவினூடாக நடைமுறை நிலைமையை விளக்குவதில் மாணவர்கள் இடர்ப்பட்டமை காரணமாக இப்பிரிவின் இலகுதன்மை குறைந்தமைக்கான காரணமாகக் குறிப்பிடலாம். கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும்போது கோட்பாட்டு ரீதியன அறிவை இயலுமன அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடைமுறை நிலைமைகளுடன் பொருந்தச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கெள்வதினூடே இக்குறைபட்டினைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

iii ஆம் பிரிவின் இலகுதன்மை 42% ஆகும். இது சிக்கலான பிரச்சினைகளைக் கொண்ட வினாவன்று. முறையாக கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு மாணவர் தனது ஞாபகத்தைக் கொண்டு இவ்வினாவுக்கு விடையளிக்க முடியும். இவ்வாறான விடயங்கள் அடிக்கடி பரீட்சிக்கப்படும் விதத்தில் வகுப்பறைச் செயற்பாடுகளை திட்டமிடுவதனால் மாணவரில் இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்கும் திறனை மேம்படுத்தலாம்.

iv ஆம் பிரிவு இவ்வினாவில் இலகுதன்மை கூடியவொரு வினாவாகும். அதன் இலகுதன்மை 62% ஆகும். பாட விடயங்கள் தொடர்பான அடிப்படை அறிவைக் கொண்டு விடையளிக்கக் கூடிய மிக எளிமையான வினவாகக் காணப்பட்டபோதிலும் அதிகளவான மாணவர்கள் முழுமையான விடையை எழுதத் தவறியுள்ளமையிலிருந்து பாட விடயங்கள் தொடர்பான தேடல் போதுமானதன்று என்பது தெரிகிறது. அடிக்கடி அறிவு இற்றைப்படுத்தப்படும் வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறை ஒழுங்கமைத்துக் கொள்ளல் வேண்டும்.

v ஆம் பிரிவு ஒப்பீட்டளவில் இலகுதன்மை குறைவானதொரு பிரிவாகும். அதன் இலகுதன்மை 33% ஆகும். இறைக்கொள்கை மூலம் வருமானச் சமமின்மையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடிய விதம் தொடர்பாக மாணவரின் அறிவை அளவிட்டுப் பார்க்கும் ஒரு வினாவாகும். இப்பிரிவிற்கு ஞாபக சக்திகள் கொண்டு விடையளிக்க முடியும். இறைக்கொள்கை என்பதனை சரியாக இனங்கண்டு கொண்டிராமை இடர்பாடுகளுக்குக் காரணமெனத் தெரிகிறது. இறைக்கொள்கையும் அதனைப் பயன்படுத்தக் கூடிய விதமும் மின் நன்றாக உறுதிப்படுத்தப்படும் வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.

**வினா இலக்கம் 8**

**8.** (i) இலக்கங்களிலான உதாரணங்கள் தந்து உற்பத்தியில் முழு நன்மை மற்றும் ஒப்பீட்டு நன்மை என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தின் போக்குகளைத் தீர்மாக்கவல்ல பொருளியற் காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) சர்வதேச வர்த்தகத்தின் மீதான தடைகளைக் குறைப்பதற்கான உலகளாவிய மற்றும் பிராந்திய ரீதியிலான அணுகுமுறைகளை ஒப்பிட்டு, வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iv) நெகிழ்தன்மை வாய்ந்த நாணயமாற்று முறைமையொன்றின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் எவை?

(v) இலங்கையின் ஏற்றுமதிச் செலவுகள் மற்றும் இறக்குமதி வருவாய்களின் அண்மைக் காலப் போக்குகளைப் பரிசீலிக்குக. இலங்கையின் பாரிய வர்த்தகப் பற்றாக்குறை நிலைக்கு பங்களிப்புச் செய்துள்ள காரணிகள் எவை? (04 புள்ளிகள்)

(i) - இலக்கங்களிலான் உதாரணம் :

| பொருள் | அமெரிக்கா | இந்தியா |
|---|---|---|
| கோதுமை | 8 | 4 |
| புடைவை | 4 | 3 |

- இரு நாடுகள் காணப்படும் நிலையில் பொருளொன்றின் உற்பத்தியில் (உதாரணமாக கோதுமை) முதலாவது நாடு இரண்டாவது நாட்டை விட அதிகளவு வெளியீட்டை தரப்பட்டளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய முடியுமாயின் குறித்த முதலாவது நாடு குறித்த பொருளுற்பத்தியில் இரண்டாவது நாட்டை விட முழு நன்மையினைக் கொண்டுள்ளதெனலாம். தரப்பட்டுள்ள உதாரணத்தின்படி ஐக்கிய அமெரிக்கா கோதுமை மற்றும் புடைவை ஆகிய இரண்டின் உற்பத்தியிலும் முழு நன்மையினை (உயர்ந்த உற்பத்தித் திறனை)க் கொண்டுள்ளது. ஊழியரொருவர் இந்தியாவை விட அமெரிக்காவில் இருபொருள்களிலும் அதிக அளவினை உற்பத்தி செய்ய முடியும். (02 புள்ளிகள்)

- பொருளொன்றின் உற்பத்தியில் குறித்த ஒரு நாடு மற்றைய நாட்டை விடக் குறைவான அமையச் செலவினைக் கொண்டிருக்குமாயின் அந்நாடு குறித்த பொருள் தொடர்பில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்கும்.

- தரப்பட்ட உதாரணத்தில் ஐக்கிய அமெரிக்கா கோதுமை உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் ஓரலகு கோதுமையை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு 1.∴2 புடைவை அலகுகளாகும். இந்தியாவில் இதற்கான அமையச் செலவு 3.∴4 புடைவை அலகுகளாகும். (02 புள்ளிகள்)

(ii) காரணி கிடைப்பனவுத்தன்மை
- உற்பத்தித் திறன் வேறுபாடு
- அளவுத்திட்ட சிக்கனங்கள்
- தொழினுட்ப மாற்றங்களும் புத்தாக்கங்களும்
- இடஅமைவு
- உற்பத்தி பொருளின் வாழ்க்கை மட்டம்
- நுகர்வோர் விருப்பத் தேர்வுகள்
- அரசாங்கக் கொள்கைகள்

(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளி வீதம் நான்கு காரணிகளுக்கு 04 புள்ளிகள்)

(ii) - இரண்டாம் உலகப்போரின் பின்னர் சர்வதேச வர்த்தகத்தின் மீதான தடைகள் குறிப்பிடத்தக்களவில் குறைக்கப்பட்டுள்ளன. இத்தடைகளைக் குறைப்பதில் நாடுகள் இரு அணுகுமுறைகளைக் கையாண்டுள்ளன.

(அ) உலகளாவிய அடிப்படையில் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை நடாத்தல்

(ஆ) பிராந்திய அடிப்படையிலான வர்த்தகக் கூட்டுகளை உருவாக்குதல்.

- இரண்டாம் உலகப் போரிலிருந்து எட்டு சுற்று சர்வதேச வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் GATTE (வர்த்தகம் மற்றும் தீர்வைகள் மீதான பொது ஒப்பந்தம்) ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1986ல் ஆரம்பிக்கப்பட்ட இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளைப் போலன்றி விரிவானதாகவும் பொருள் வர்த்தகம் மற்றுமு் சேவைகள் வர்த்தகத்தையும் உள்ளடக்கியிருந்தது. அத்தோடு வர்த்தகத்துடன் தொடர்புடைய புலமைச் சொத்துரிமையையும் வர்த்தகத்துடன் தொடர்புடைய முதலீடுகளையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வொப்பந்தத்தின் கீழ் தீர்வைகள் பலவும் தீர்வையல்லாத் தடைகள் பலவும் நீக்கப்படும் அல்லது குறைக்கப்படும் ஏற்பாடுகள் இருந்தன.

- இணக்கப்பாட்டை எய்துவதற்கு வருடங்கள் பல செல்லக்கூடிய உலக மட்டத்திலான ஒப்பந்தங்களுடன் ஒப்பிடுகையில், பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்களை உருவாக்குவது சார்பில் இலகுவானதாகும்.

- சமமான கரிசனைகளைக் கொண்டுள்ள சமமான கலாசாரங்களையுடைய சிறிய குழுவினரான அயல் நாடுகள் குறித்த பிராந்தியத்தில் சந்தைகளைத் திறந்துவிட இனங்குவதானது சர்வதேச வர்த்தக நிறுவனம் போன்ற மிகப்பரந்த ஒரு அமைப்பில் ஒரு உடன்பாட்டை அடைவதை விட இலகுவானதாகும்.

- அவை வர்த்தக சட்டதிட்டங்களை உருவாக்குவதில் புதிய அணுகுமுறைகளை முன்வைவக்க முடிவதோடு உலகளாவிய மட்டத்தில் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான படிக்கற்களாகவும் இயங்க முடியும்.

- பிராந்திய ஒப்பந்தங்கள் பிராந்தியத்திற்கு வெளியிலுள்ள நாடுகள் பிராந்தியத்திற்கு உள்ளேயுள்ள நாடுகளுடன் மேற்கொள்ளும் வர்த்தகத்தைக் கடினமாக்குவதுடன் சந்தைகள் மேலும் திறந்துவிடப்படுவதைப் பாதிக்கக்கூடும். இது ஒட்டுமொத்தமாக எல்லா நாடுகளினதும்

வளர்ச்சி சாத்தியங்களை மட்டுப்படுத்தும். அது மட்டுமன்றி பலதுறைகளையும் பல தரப்பினரையும் உள்ளடக்கிய பரந்த அடிப்படையிலான பல்தரப்பு உடன்படிக்கைகள் வரையறுக்கப்பட்ட இரு தரப்பு அல்லது பிராந்திய ஒப்பந்தங்களை விட பரஸ்பர நன்மைகளை அதிகளவு ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளன.

(04 புள்ளிகள்)

(iv) நன்மைகள்

- பூரண மிதக்கவிடப்பட்ட நாணய மாற்றுவீத முறைமையின் கீழ் சென்மதி நிலுவைக்கான தானியங்கி சீராக்கப் பொறிமுறையொன்று காணப்படுவதனால் உள்ளகப் பொருளாதாரக் குறிக்கோள்களை எய்தும் பொருட்டு அதிகாரிகள் சுதந்திரமாக உள்நாட்டு கொள்கைகளை நடைமுறைப்படுத்தலாம். பணக்கொள்கையானது வெளியகச் செல்வாக்குகளிலிருந்து முற்றிலும் சுதந்திரமாக இயங்கும்.
- நாடு பாரியளவிலான வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை பேணவேண்டிய தேவையில்லை. ஒதுக்குகளைப் பேணும் நோக்கில் முடக்கி வைக்கப்பட்ட வளங்களை மிகவும் உற்பத்தித் திறனுள்ள வகையில் பயன்படுத்தலாம்.
- நாணய மாற்றுவீத மிகைமதிப்போ குறைமதிப்போ இருக்காது. தன்னிச்கையாக உறுதிப்பாடு ஏற்படுத்தப்படும்.
- வெளியக சமநிலையானது தன்னிச்சையாக ஏற்படுத்தப்படும். அதாவது சென்மதி நிலுவை தானாகவே சரிசெய்யப்படும்.
- வள ஒதுக்கீடு வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்படும்.
- பொருளாதார முகாமைத்துவம் மிக இலகுவாகும்.

(தலா 01 புள்ளி வீதம் இரு காரணிகளுக்கு 02 புள்ளிகள்)

தீமைகள்

- நிச்சயமற்ற தன்மை காணப்படுவதனால் வர்த்தகம், நேரடி முதலீட்டு நடவடிக்கைகள் என்பன பாதிக்கப்படலாம்.
- நாணய மாற்றுவீதம தளம்பல் காரணமாக உள்நாட்டில் பணவீக்கத் தாக்கம் ஏற்படலாம்.
- அரசின் இறைக்கொள்கை, நாணயக் கொள்கை என்பன திறமையற்றதாக மாறலாம்.
- உத்தேச நோக்க நடவடிக்கைகள் இடம்பெறும். இதனால் அந்நியச் செலாவணிச் சந்தை நிலையற்றதாக மாறும்.
- போட்டி உபயோகங்கள் மத்தியில் உலக வளங்களை வினைத்திறனுள்ள விதத்தில் ஒதுக்கீடு செய்ய வேண்டுமாயின் சரியாக மதிப்பிடப்பட்ட நாணய மாற்றுவீதங்கள் நிலவுகின்றமை அவசியமாகும்.

(தலா 01 புள்ளி வீதம் இரு காரணிகளுக்கு 02 புள்ளிகள்)

(v)

| ஆண்டு | இறக்குமதிச் செலவு மில்லியன் $ | ஏற்றுமதி வருவாய் மில்லியன் $ |
|---|---|---|
| 2008 | 14,091 | 8,111 |
| 2009 | 10,207 | 7,085 |
| 2010 | 13,451 | 8,626 |
| 2011 | 20,296 | 10,559 |
| 2012 | 19,183 | 9,773 |

குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்குரிய சரியான தரவுகளுக்கு :

இறக்குமதி - 01 புள்ளி; ஏற்றுமதி 01புள்ளி

வர்த்தக நிலுவையில் பாரிய பற்றாக்குறை நிலவுவதற்கு சில காரணங்கள் உள்ளன.

- ஏற்றுமதி வருவாய்களின் மந்தகதியிலான வளர்ச்சியும் இறக்குமதிச் செலவினங்களின் துரித அதிகரிப்பும்: 2011 ஆம் ஆண்டில் இறக்குமதிச் செலவினங்கள் முன்னைய ஆண்டை விட 51மு

த்தினால் மட்டுமே அதிகரித்தன.

- பிரதானமாக உலகப் பொருளாதார பின்னடைவு காரணமாக இலங்கையின் ஏற்றுமதிகளில் ஒரு தளர்வு தென்படுகிறது.
- உட்கட்டமைப்புகள் மீதான அதிகளவிலான பொது முதலீட்டுத் திட்டங்களால் முதலீட்டுப் பொருள்களின் இறக்குமதிப் பருமன் அதிகரித்தமை இறக்குமதிச் செலவினங்கள் துரிதமாக அதிகரித்தமைக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும்.

**8 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




இவ்வினாவைத் தெரிவு செய்தோர் 44% சதவீதத்தினர். ஆவர். (வரைபு 02). இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளி ஆயிடையில் 54%
06 - 10 புள்ளி ஆயிடையில் 28%
11 - 15 புள்ளி ஆயிடையில் 13%
16 - 20 புள்ளி ஆயிடையில் 2%
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 5 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் (i) மிக இலகுவானதாய் அமைந்துள்ளது. அதன் இலகுதன்மை 57% ஆகும். இலகுதன்மை குறைவான பிரிவு (v) ஆவதுடன் அதன் இலகுதன்மை 13% ஆகும். (iii) ஆம் பிரிவும் 17% மான குறைவான இலகுதன்மையைக் கொண்டுள்ளது,

- ⋆ i ஆம் பிரிவின் இலகுதன்மை 57% ஆகும். இப்பிரிவின் மூலம் எண்சார்ந்த உதாரணங்களை குறிப்பிட்டு உற்பத்தியில் முழு நன்மை மற்றும் ஒப்பீட்டு நன்மை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை பகுப்பாய்வு செய்யும் திறன் பரீட்சிக்கப்படுகிறது. அத்திறனை மதிப்பிடும்போது வழங்கப்படுகின்ற புள்ளிகளில் 43% சதவீதத்தினை மாணவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்பது வெளிப்படுகிறது. விசேடமாக இலக்கங்களை உதாரணங்கள் ஊடாக உற்பத்தியில் முழு நன்மை, ஒப்பீட்டு நன்மை என்பவற்றை பகுப்பாய்வு செய்யும் திறன் மாணவர்களில் விருத்தியடையும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைத்துக் கொள்ளல் வேண்டும்.

- ⋆ நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தின் போக்குகளை தீர்மானிப்பதற்கு ஏதுவாகக் கூடிய காரணிகளை ஆராயும் ii ஆம் பிரிவின் இலகுதன்மை 35% ஆகும். இங்கு முழு நன்மை, ஒப்பீட்டு நன்மை தீர்மானிக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளின் அடிப்படையில் வர்த்தகத்தின் போக்குகள் தீர்மானிக்கப்படும் விதம் ஆராயப்படுகிறது. இருப்பினும் அக்காரணிகளை விவரிப்பதற்கு மாணவரில் காணப்படும் அறிவு போதாமை அதற்குரிய புள்ளிகளில் 65% இழக்கப்பட்டமையிலிருந்து தெளிவாகிறது.

★ (iii) ஆம் பிரிவில் சர்வதேச வர்த்தகத்தின் மீதான தடைகளை நீக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற உலகளாவிய, பிராந்திய ரீதியிலான அணுகுமுறைகளை ஒப்பிட்டு அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிட்டு திறன் பரீட்சிக்கப்டுகிறது. இப்பிரிவின் இலகுதன்மை 17% ஆகும். அதனூடாக கூடுதலான மாணவர்களுக்கு உரிய தலைப்பு தொடர்பான போதுமானதான அறிவும் தெளிவும் இல்லாமை வெளிப்படுகிறது. எனவே வர்த்தகத்தின் மீதான தடைகளை நீக்குவதற்கு உலகளாவிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் எடுக்கப்பட்ட பிரயத்தனை விவரிப்பதற்கும் ஒப்பிடுவதற்கும் தேவையான அறிவையும் தெளிவையும் மேம்படுத்தக் கூடிய வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும்.

★ (iv) ஆம் பிரிவினூடாக நெகிழ்தன்மை வாய்ந்த நாணயமாற்று முறையின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் தொடர்பாகக் கேட்கப்பட்டுள்ளது. இவ்வினாவுக்கான மாணவர்களின் பிரதிபலிப்புக்கமைய 29% குறைந்தளவிலான இலகுதன்மை திருப்திகரமானதன்று. அதிகளவான மாணவர்கள் அது தொடர்பான போதுமானளவு அறிவையும் விளக்கத்தையும் பெற்றிருக்கவில்லை. எனவே நாணயமாற்று முறைகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பகுப்பாய்வு செய்வதில் மாணவர்களில் காணப்படும் ஆற்றலும் விளக்கமும் மேம்பாடடையும் விதத்தில் கற்பித்தல் செயன்முறையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

★ v ஆம் பிரிவின் மூலம் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களினதும் இறக்குமதிச் செலவுகளினதும் அண்மைக்காலப் போக்குகள் இலங்கை எதிர்கொள்ளும் பாரிய பாதகமான வர்த்தக நிலுவைக்கு ஏதுவான காரணிகள் என்பன பற்றிக் கேட்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் இலகுதன்மை 13% ஆகும். பெரும்பாலான மாணவர்கள் அதன் ஆரம்பப் பகுதியில் இலங்கையில் இறக்குமதி, ஏற்றுமதிப் பெறுமதிகளின் அண்மைக்காலப் போக்குகளை முன்வைக்கத் தவறியமை காரணமாக உருவாக்கியுள்ளது. எனவே இலங்கையின் வர்த்தகக் கணக்கின் குறைநிலை மாற்றமடைந்த விதமும் அதில் பாதிப்புச் செலுத்திய காரணங்கள் வெளிப்படும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயன்முறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

**வினா இலக்கம் 9**

**9.** (i) பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான வேறுபாட்டினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(ii) நாடொன்றின் உற்பத்தித் திறன் மட்டத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணிகளைக் கூறுக. (04 புள்ளிகள்)

(iii) “தேசிய மட்டத்தில் இலங்கையின் மானுட அபிவிருத்தி தொடர்பான அடைவுகள் சிலாகிக்கத் தக்கவையாயினும் இது தொடர்பில் மாகாணங்களுக்கிடையிலும் துறைகளுக்கிடையிலும் ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன.” விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) இலங்கையின் குடித்தொகை நிலைமாற்றத்தின் (demograp)பிரதான அம்சங்களை இனங்காண்க. அவற்றின் பிரதான பொருளாதார விளைவுகள் யாவை? (05 புள்ளிகள்)

(i) பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவில் (சாத்திய வெளியீட்டில்) ஏற்படும் நிலைத்திருக்கத்தக்க அதிகரிப்பாகும்.

- பொருளாதார அபிவிருத்தியுடன் ஒப்பிடுகையில் பொருளாதார வளர்ச்சியானது ஒரு குறுகிய எண்ணக்கருவாகும். அது ஒரு நாட்டின் மெய்த்தேசிய உற்பத்தி மட்டத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பாகும். இவ்வதிகரிப்பு வளங்களின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு, வளங்களின் தரத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, தொழினுட்ப முன்னேற்றம் போன்ற காரணிகளால் ஏற்படலாம். நாடொன்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பை அளவிடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அளவிட முடியும்.

- அபிவிருத்தி என்பது ஒரு பண்புசார் நியம எண்ணக்கருவாகும். வாழ்க்கைத் தர அதிகரிப்பு, சுயமரியாதைக்குரிய தேவைகளின் முன்னேற்றம். அடக்குமுறைகளிலிருந்து சுதந்திரம் பெறல், பரந்த அடிப்படையிலான தெரிவுகளைக் கொண்டிருத்தல் போன்ற பல்வேறு விடயங்களையும் அது கருத்திற் கொள்கிறது, ஒரு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைய உயர்ந்த வருமானங்கள் அவசியமாகும். ஆனால் வாழ்க்கைத் தரமானது வருமானத்தை விட மேலும் பல அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

- உண்மையான அபிவிருத்தியினை பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் சான்றுகளை அடிப்படையாக வைத்து காட்டலாமேயன்றி அதில் உள்ளடங்கும் ஒரு சில விடயங்களை மட்டும் வைத்து காட்ட முடியாது. அபிவிருத்தியை போதுமான அளவில் அளவிட பல குறிகாட்டியைப் பயன்படுத்த வேண்டும். அவற்றை தனி ஒரு குறிகாட்டிக்குள் உள்ளடக்கிக் காட்ட வேண்டிய அவசியமில்லை.

- பொருளாதார வளர்ச்சியானது இயற்கை வளங்களின் அழிவினைக் கருத்திற் கொள்ளவதில்லை. இயற்கை வளங்கள் அருகி விடுவதால் சூழல் மாசடைதல், நெரிசல், மற்றும் நோய்கள்
- அபிவிருத்தியானது நிலைபேறுடைய தன்மை குறித்துக் கவனம் செலுத்துகிறது. நிலைபேறுடைய தன்மை என்பது நிகழ்கால விருப்பங்களை ஏதிர்கால விருப்பங்களை விட்டுக்கொடுக்காத வகையில் பூர்த்தி செய்வதைக் குறிக்கும்.

- பொருளாதார வளர்ச்சியானது அபிவிருத்திக்கு அத்தியாவசியமான நிபந்தனையாகும். ஆனால் போதுமான நிபந்தனையன்று.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம் மூன்று காரணிகளுக்கு 05 புள்ளிகள்)

(ii) உற்பத்தித் திறனை நிர்ணயிக்கும் காரணிகள்
- உழைப்பின் தரம், கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் அனுபவம்.
- தொழினுட்பம்
- புத்தாக்கங்கள், ஆய்வும் அபிவிருத்தியும்
- மூலதனத்தின் மீதான முதலீடு
- இயற்கை வளங்கள்
- கட்கட்டமைப்பு
- சட்டதிட்டங்கள்
- மனப்பாங்குகள்

(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் ஏதேனும் 5 காரணிகளுக்கு 05 புள்ளிகள்)

(iii) எட்டு சார்க் நாடுகள் மத்தியில் இலங்கை மிகவுயர்ந்த மானுட அபிவிருத்தி மட்டத்தைக் கொண்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் மானுட அபிவிருத்தி அறிக்கையின் படி இலங்கை 2012 ஆம் ஆண்டில் 0.715 என்னும் மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணைப் பெற்று 187 நாடுகள் மத்தியில் 92 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கை 2015 ஆண்டு முடிவுத் திகதிக்கு வெகு முன்பதாக வறுமை குறித்த புத்தாயிரண்டு இலக்கினை அடைந்துள்ளது. தேசிய வறுமைக் கோட்டின் அடிப்படையில் வறுமையின் தாக்கம் 1990/91 காலப்பகுதியில் 26.1% இலிருந்து 2009/10 காலப்பகுதியில் 11.8% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

- தேசிய மட்டத்தில் இவ்வாறான அடைவுகளை எய்திருப்பினும் துறைகள், மாவட்டங்கள் மற்றும் மாகணாங்களுக்கிடையில் கணிசமான அளவு ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. தேசிய மட்டத்தில் வறுமை தனிந்துள்ள போதிலும் வறுமையில் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் சில மாவட்டங்களில் - குறிப்பாக யுத்தத்தத்தால் பாதிக்கப்பட்ட அல்லது பெருந்தோட்ட மக்களை பெருமளவு கொண்டுள்ளவற்றில் இன்னும் நிலவுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமையானது 2006, 2007 காலப்பகுதியில் 10.7% இலிருந்து 2009/2010 காலப்பகுதியில் 20.3% ஆக அதிகரித்துள்ளது. அம்பாறை மாவட்டத்தின் வறுமை 2006/07 காலப்பகுதியில் 10.9% இலிருந்து 2009/2010 காலப்பகுதியில் 11.8% ஆக அதிகரித்துள்ளது.
- வழமை போலவே மேல் மாகாணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 44% பங்களிப்பைச் செய்துள்ளது. மறுதலையாக வட மாகாணம் 4மூ பங்களிப்பை மாத்திரமே கொண்டுள்ளது. வடமத்திய மாகாணத்திற்கு அடுத்தபடியாக ஊவா மாகாணத்தின் பங்களிப்பு 5% என்னும் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது.

- உட்கட்டமைப்பு வசதிகளிலும் கணிசமானளவு ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. பெருந்தோட்டத் துறையில் 23% வீட்டுத்துறையினர் மின்சார வசிதியின்றியும் 40% வீட்டுத்துறையினர் பாதுகாப்பான குடிநீர் வசதியின்றியும் உள்ளனர்.

- உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வி வசிதிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் பெருந்தோட்டத்துறையிலே பெருமளவு ஏற்றத்தாழ்வுகள் நிழவுகின்றன. இத்துறையிலுள்ள சிறார்களில் 54% மட்டுமே இரண்டாம் நிலைக் கல்வியில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இச்சதவீதம் நகர்ப்புறத்துறையில் 86% ஆகவும் கிராமியத் துறையில் 81% ஆகவும் உள்ளமை ஒப்பிட்டு நோக்கத்தக்கதாகும்.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம் மூன்று காரணிகளுக்கு 05 புள்ளிகள்)

(iv) உயர்ந்த பிறப்பு மற்றும் இறப்பு வீதங்களைக் கொண்ட விரும்பத்தகாத குறைந்த சனத்தொகை வளர்ச்சியிலிருந்து குறைந்த பிறப்பு மற்றும் இறப்பு வீதங்களைக் கொண்ட விரும்பத்தக்க குறைந்த சனத்தொகை வளர்ச்சி நிலைக்கு மாற்றம் நிகழ்ந்துள்ளது.

- சனத்தொகையின் வயதுக்கட்டமைப்பானது ஒரு பிரமிட் வடிவத்திலிருந்து உருளை வடிவுக்கு மாற்றமடைந்துள்ளது. இது சிறுவர் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் முதியோர் சனத்தொகையில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையைக் காட்டுகிறது.

- சனத்தொகையில் 60 வயது மற்றும அதற்கு மேற்பட்டோர் சதவீதம் தற்போது 11% ஆகவுள்ளது. 2020 இல் 29% ஆகவும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

- தொழிற்படையின் பிரதான பகுதியாகிய 25-54 வயதுப் பிரிவுச் சனத்தொகையில் ஓர் வீழ்ச்சிப் போக்கு நிலவுகிறது.

- உயர்ந்த ஆயுள் எதிர்பார்க்கையைக் கொண்டுள்ள காரணத்தால் பின்னைய வயதுகளில் ஆண்களை விட பெண்கள் அதிககாலம் வாழ்வர். முதிய வயதுப் பிரிவினரின் ஆண், பெண் சதவீதத்தை நோக்கும் போது இது தெளிவாகிறது. முதிய வயதுகளில் விதவைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்பதை இது காட்டுகிறது.

(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் இரு பண்புகளுக்கு மொத்தம் 02 புள்ளிகள்)

- சனத்தொகை நிலைமாற்றத்தின் முக்கிய சில பொருளாதார விளைவுகள் உள்ளன. தொழில் தருநர்கள் மீதான ஓய்வூதிய நன்மைகளின் சுமை மிக அதிகமாக இருக்கும். அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினங்களில் ஏற்படும் அதிகரிப்பு பொது முதலீட்டிற்கான நிதிகளை ஒதுக்கீடு செய்வதில் பிரதான தடையாக உள்ளது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மீது பாதகமான ஒரு விளைவினைக் கொண்டிருக்கலாம்.

- அரசாங்கம் முதிய வயதுச் சனத்தொகையைப் பராமரிக்க அதிக செலவுகளைத் தாங்கவேண்டி ஏற்படும். (சுகாதார சேவைகள் போன்றன)

- முதிய சனத்தொகை தமது நுகர்வுப் பாய்ச்சல்களை பேண கடந்த கால சேமிப்புக்களை பயன்படுத்த முயற்சிப்பதனால் நாட்டின் உள்நாட்டு சேமிப்புக்கள் மோசமானதாக பாதிக்கப்படலாம்.

- தங்கி வாழ்வோர் விகிதாசாரம் உயர்வதனால் தொழில் புரியும் சனத்தொகையின் வருமானங்கள் மீது மேலதிக சுமையை ஏற்படுத்தும். இதுவும் கூட பொருளாதாரத்தின் சேமிப்பு மட்டம் குறைவடையப் பங்களிப்பு செய்யும்.

- கருவள வீதத்தில் (பிறப்பு) ஏற்படும் வீழ்ச்சியானது தொழிற்பாடையில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்தும். இது தொழிற்படையை மோசமாகப் பாதிக்கும்.

- 15 வயதுக்குக் குறைந்த சனத்தொகையினளவு வீழ்ச்சியடைவதனால் கல்வி மீதான பௌதீக உட்கட்டமைப்புக்கள் தேவைப்படமாட்டா. இத்தகைய வளங்களை கல்வியின் தரத்தை மேம்படுத்த பயன்படுத்தலாம்.

(ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் மூன்று விளைவுகளுக்கு மொத்தம் 03 புள்ளிகள்)

## 9 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்




இவ்வினாவைத் தெரிவு செய்தோர் 44% சதவீதத்தினர். ஆவர். (வரைபு 02). இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளி ஆயிடையில் 75%
06 - 10 புள்ளி ஆயிடையில் 18%
11 - 15 புள்ளி ஆயிடையில் 6%
16 - 20 புள்ளி ஆயிடையில் 1%
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 4 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் (i) மிக இலகுவானதாய் அமைந்துள்ளது. அதன் இலகுதன்மை 27% ஆகும். இலகுதன்மை குறைவான பிரிவு (iv) ஆவதுடன் அதன் இலகுதன்மை 13% ஆகும். முழுமையாக நோக்கும் போது இது குறைந்த இலகுதன்மையைக் கொண்ட ஒரு வினாவாகும்.

★ (i) ஆம் பிரிவின் இலகுதன்மை 27% ஆகும். இவ்வினாவின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான வேறுபாட்டை நுனுக்கமாகப் பகுப்பாய்வு செய்யும் ஆற்றல் பற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவிற்கான மாணவர்களின் பிரதிபலிப்புக்கமைய 73% சதவீதமான கடினத்தன்மை காணப்படுகின்றமை குறித்த தலைப்பு தொடர்பாக மாணவர்களின் அறிவும் தெளிவும் போதுமானதன்று என்பது வெளிப்படுகின்றது. எனவே பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி, அபிவிருத்தி ஆகிய எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாடு, தொடர்பு என்பவற்றை நுணுக்கமாக பகுப்பாய்வு செய்வதற்கான திறனை மாணவரில் விருத்தி செய்ய வேண்டும்.

★ (ii) ஆம் பிரிவு ஒரு நாட்டின் உற்பத்தி திறன் மட்டத்தை தீர்மானிக்கும் பிரதான காரணிகள் யாவை என்பதை கேட்கின்றது. இப்பிரிவின் இலகுதன்மை 20% ஆகும் . உற்பத்தித் திறனை தீர்மானிக்கின்ற காரணிகள் தொடர்பாக புதிய போக்குகளின் ஊடாக விடயங்களை முன்வைக்கும் ஆற்றலின்மை காரணமாக பெரும்பாலான மாணவர்களுக்கு இவ்வினா கடினமானதாய் அமைந்துள்ளது. உற்பத்தித் திறனைத் தீர்மானிக்கும் காரணிகளை இற்றைப்படுத்தப்பட்ட விதத்தில் வெளிப்படுத்துவதற்கு மாணவர்களின் அறிவு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

★ (iii) ஆம் பிரிவு இலங்கை மானிட அபிவிருத்தித் தொடர்பாகப் பெற்றுள்ள அடைவு மட்டத்தை தேசிய, பிராந்திய ரீதியிலும் துறைகளுக்கிடையிலும் ஒப்பிடுவதற்கும் விளக்கமளிப்பதற்குமான மாணவர்களின் அறிவையும் விளக்கத்தையும் பரீட்சிப்பதற்கானவொரு வினாவாகும். இப்பிரிவுக்கான மாணவர்களின் பிரதிபலிப்புக்கமைய இலகுதன்மை 16% ஆகும். இதிலிருந்து பெரும்பாலான மாணவர்கள் குறித்த தலைப்புடன் தொடர்புடைய தகவல்கள், எண் சார்ந்த தரவுகள் தொடர்பாக போதுமான அளவு அறிவையும் விளக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படுகின்றது. எனவே கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் போது மாணவர்களில் அத்திறனை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

★ (iv) ஆம் பிரிவு இலங்கையின் குடித்தொகை நிலைமாற்றத்தின் பிரதான அம்சங்களை விவரிப்பதுடன் தொடர்புடையதாகும். அப்பிரிவுக்கு மாணவர்கள் காட்டிய பிரதிபலிப்புக்கமைய இலகுதன்மை 13% ஆகும். பெரும்பாலான மாணவர்களின் சரியாக விடையளிக்காமைக்குக் காரணம் இலங்கையின் குடித்தொகை நிலைமாற்றம் தொடர்பாக தகவல்களை மாணவர்கள் இற்றைப்படுத்திக் கொண்டிராமை ஆகும். எனவே இலங்கையின் குடித்தொகை நிலைமாற்றம் தொடர்பான தகவல்கள் பற்றிய காலத்துக்ககுக் காலம் ஏற்படும் மாற்றங்கள் பற்றியதாக கற்றல்-கற்பித்தல் செயன்முறையை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

**வினா இலக்கம் 10**

**10.** (i) இலங்கையின் சேமிப்பு-முதலீட்டு இடைவெளியின் அண்மைக்காலப் போக்குகளைப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

(ii) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் 4000 டொலர் தனக்குரிய வருமானத்தை அடைவதை இலக்காகக் கொண்டுள்ள இலங்கையின் பொருளாதாரத்தில் தற்போது காணப்படும் எதிர்க்கணிய சேமிப்பு முதலீட்டு இடைவெளி ஏற்படுத்தவல்ல தாக்க விளைவுகள் எவை? (04 புள்ளிகள்)

(iii) இலங்கையை ஆசியாவின் முக்கியமான சுற்றுலாமையாக மாற்றுவதில் இலங்கையின் சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் சவால்கள் எவை? (04 புள்ளிகள்)

(iv) வறிய நாடுகள் நீண்டகால ரீதியானதும் உறுதியானதுமான பொருளாதார வளர்ச்சியை எய்துவதில் இலங்கையின் சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் சவால்கள் எவை? (04 புள்ளிகள்)

(i) - சேமிப்பு முதலீட்டு இடைவெளியின் போக்கு

| ஆண்டு | சேமிப்பு | | முதலீடு | உள்நாட்டு சேமிப்பு |
|---|---|---|---|---|
| | உள்நாட்டு | தேசிய | | முதலீட்டு இடைவெளி |
| 2010 | 19.3 | 25.4 | 27.6 | – 8.3 |
| 2011 | 15.4 | 22.0 | 30.0 | – 14.6 |
| 2014 | 17.0 | 24.0 | 30.6 | – 13.7 |

(ii) உயர் பொருளாதார வளர்ச்சியை அடையும் பொருட்டு இலங்கை நடுத்தர காலப்பகுதியிலிருந்து நீண்டகாலப் பகுதிக்கு தேசிய சேமிப்பு மற்றும் முதலீட்டு மட்டங்களை மேம்படுத்த வேண்டும். 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் பொருளாதாரம் ருளு கூ 4000 க்கு மேற்பட்ட தலைக்குரிய வருமான மட்டத்தை அடையுமென எதிர்பார்க்கப்படும் நிலையில் மொத்த முதலீடானது மொத்த

உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நிகழ்கால மட்டமாகிய 30மூ வீதத்திலிருந்து 33மூ இற்கு மேலாக அதகரிக்க வேண்டும்.

- தற்போது இலங்கையில் சேமிப்பு முதலீட்டு இடைவெளி எதிர்கணியமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 7-8 ஆகக் காணப்படுகிறது. (2012 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்புக்கள் 24% ஆகவும் முதலீடு 30.6% ஆகவும் இருந்தன.)
  எதிர்கணிய சேமிப்பு முதலீட்டு இடைவெளியானது நாட்டின் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் ஓர் குறை நிலையினால் பிரதிபலிக்கப்படும். நடைமுறைக் கணக்கு மீதியினை நிதிப்படுத்தலானது வெளிநாட்டுக் கடன்களில் அதிகரிப்பினையோ அத்துடன் அல்லது வெளிநாட்டு சொத்துக்களில் ஒரு வீழ்ச்சியினையோ ஏற்படுத்தும்.

- வெளிநாட்டு நிதியிடலின் பாரிய உட்பாய்ச்சலானது உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி அதிகரிப்புக்கு இட்டுச் சென்று அதன மூலம் வெளிநாட்டு போட்டித்தன்மையை குறைவடையச் செய்யலாமென்ற போதிலும் அது சேமிப்பு முதலீட்டு இடைவெளியினை பகுதியளவில் இட்டு நிரப்பக் கூடும்.

- வெளிநாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகளில் ஏற்படும் அதிகரிப்பு அரசாங்கப் பாதீட்டில் ஒரு மேலதிக சுமையினை ஏற்படுத்தலாம். அத்துடன் 5 வீத பாதீட்டுக் குறைநிலையை அடையும் இறைக கொள்கை இலக்கினை அடைவதை சிரமானதாக்கும்.

- அரச துறை எதிர்நோக்கும் வளங்கள் வரையறுக்கப்பட்ட நிலையில் முதலீட்டை அதன் தற்போதைய மட்டாமாகிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 30 வீதத்திலிருந்து 33 வீதமாக அதிகரிப்பதானது அரச துறையினால் மேற்கொள்ளப்படுவது சாத்தியமாகாதிருக்கலாம். எனவே நாட்டில் முதலீட்டு வாய்ப்பான சூழலை உருவாக்குவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும்.

(ஒவ்வொன்றும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 06 புள்ளிகள்)

(iii) எதிர்வரும் வருடங்களில் இலங்கையின் சுற்றுலாத் துறை பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்கினை வகிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை 2016 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை எதிர்பார்க்கிறது. இத்துறையினை அபிவிருத்தி செய்வதில் இலங்கை பல்வேறு சவால்களை எதிர்நோக்குகிறது.

- நாட்டில் சுற்றுலாத்துறைக்கு உகந்த ஒரு சூழலை உருவாக்க வேண்டும். இலங்கை மேற்குலக நாடுகளில் தனது தோற்றப்பாட்டினை (image) விருத்தி செய்ய வேண்டும். ஒரு பிரதான சுற்றுலா இடமாக திகழ எதிர்பார்க்கும் ஒரு நாட்டிற்கு அந்நாடு பற்றிய உலகளாலிய அபிப்பிராயம் மிகவும் முக்கியமாகும்.

- சந்தையினால் இயக்கிச் செல்லப்படும், தெளிவான சுற்றுலாத் தந்திரோபாயமானது உடனடித் தேவையாக உள்ளது. இத்தந்திரோபாயம் சந்தை விரிவாக்கத்தை ஏற்படுத்துவதாயும் பரந்தடிப்படையில் பரவலாக்கப்பட்ட வகையில் முக்கிய சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டும் அமைய வேண்டும். தற்போதுள்ள அணுகுமுறையானது நிரம்பலால் வழநடத்தப்படுவதாக உள்ளதுடன் கேள்விப் பக்க போக்குகளுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்காததாகவும் உள்ளது.

- தற்போதுள்ள அறைகளின் இயலளவு எதிர்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதுமானதன்று. கிடைக்கப்பெறும் புள்ளிவிபரங்களுக்கமைய ஒரு சுற்றுலாப் பயணியின் சராசரி தங்கியிருக்கும் காலம் ஆறு இரவுகளாயின், இரண்டரை மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய 40 000 அறைகள் தேவைப்படும். முறைசார்ந்த மற்றும் முறை சாராத் துறைகளை உள்ளடக்கிய அளைகளின் தற்போதைய மொத்த எண்ணிக்கை 22 000 ஆகும். எனவே இன்னும் 18 000 அறைகள் நாட்டிற்கு தேவைப்படுகின்றன.

- 18000 அறைகளைக் கட்டுவதற்குக் குறைந்த பட்சம் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும். இதன் பொருட்டு புதிய முதாலீட்டாளர்களைக் கவர்வது அவசியமாகும்.

- சாத்தியமான பரந்த வகையினரான சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வண்ணம் சுற்றுலா மையங்களை சென்றடையக் கூடிய வகையில் உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்ய கணிசமானளவு அரசாங்க முதலீடு அவசியமாகும். அதாவது நெடுஞ்சாலைகள் புகையிரதப்பாதை என்பவற்றை அபிவிருத்தி செய்தல், விமான ஓடுபாதைகளை விருத்திசெய்தல் போன்றன.

- குறுங்காலத்தில் உயர் தகுதிகளைக் கொண்ட நல்ல வாடிக்கையாளர் சேவை மனப்பாங்குடைய பயிற்றப்பட்ட மனிதவளத்தை உருவாக்க வேண்டிய உடனடித் தேவை உள்ளது.

(05 புள்ளிகள்)

(iv) அண்மைக் காலத்தில் “ஆட்சி” மற்றும் “நல்லாட்சி” ஆகிய சொற்பதங்கள் அபிவிருத்தி இலக்கியத்தில் அதிகளவில் பேசப்பட்டு வருகின்றன. தீய ஆட்சியானது நமது சமூகங்களில் எல்லாத் தீமைகளும் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்றாக அதிகளவில் நம்பப்படுகிறது.

- பிரதான உதவி வழங்குநர்களும், சர்வதேச நிதி நிறுவனங்களும் நாடொன்றுக்கான நமது உதவிகளையும், கடன்களையும் ஒரு நல்லாட்சியை ஏற்படுத்தவல்ல சீர்திருத்தங்களை மேற்கொள்வதை உறுதி செய்வதன் பேரிலேயே வழங்குகின்றன.

- ஆட்சி என்பது தீர்மானமெடுக்கும் நடைமுறையினையும் அத்தீர்மானங்களை அமுல்படுத்தும் அல்லது அமுல்படுத்தாது விடும் நடைமுறையினையும் கருதும். ஆட்சி என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் பிரயோகிக்கலாம். உதாணரமாக, தாபனங்களின் ஆட்சி (உழசிழசயவந பழஎநசயெஉந) சர்வதேச ஆட்சி (படழடியட பழஎநசயயெஉந)இ தேசிய ஆட்சி (யெவழையெட பழடிநசயெஉந) மற்றும் உள்ளூராட்சி போன்றன.

நல்லாட்சி என்பது பின்வரும் எட்டு பிரதான பண்புகளைக் கொண்டதாகும்.

- பங்குபற்றும் தன்மை
- இனக்கப்பாட்டை அடிப்படையாகக் கொண்டமை
- பொறுப்புக் கூறுந் தன்மை
- வெளிப்படைத் தன்மை
- துலங்கல் உடைமைத் தன்மை
- வினைத்திறன் கொண்டிருக்கும் தன்மை
- ஒப்புரவு (சமத்துவத்) தன்மை
- அனைத்தையும் உள்ளடக்கும் தன்மை
- சட்டதிட்டங்களைப் பின்பற்றுந்தன்மை என்பனவே அவையாகும்.

- அது ஊழல் மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதையும் சிறுபான்மை இனங்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படுவதையும் சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படும் நிலையிலுள்ளவர்களின் குரல்கள் தீர்மானம் மேற்கொள்ளும் போது கருத்திற் கொள்ளப்படுவதையும் உறுதி செய்கிறது,

- நல்லாட்சி பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு முன் நிபந்தனையாகும். நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் அந்நாடுகளில் நிலவும் ஆட்சியின் தரம் ஒரு முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது. பொது நிதியியல் முகாமைத்துவம் என்பது நல்லாட்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மிகத்தெளிவான பரப்பாகும். இறை உறுதிப்பாடு அல்லது பாதீட்டுக் குறைநிலையை சாதகமான ஒரு மட்டத்திற்கு குறைப்பது ஒரு குறைவிருத்தி நாட்டிற்கு முக்கியமாகும். ஏனெனில் இது பணவீக்கத்தைத் தவிர்ப்பதற்கும், முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தித் தேவைகளுக்காகவும் சமூக நலன்புரிச் செலவினங்களுக்காகவும் வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் முக்கியமானதாகும்.
- பொது நிதியியலுக்கு அப்பால் மோசமான ஆட்சியினால் பாதிக்கப்படக்கூடிய வேறு பொருளாதார நடவடிக்கைகளும் உள்ளன. வெளிநாட்டு முதலீடு அவற்றில் ஒன்றாகும். வெளிநாட்டு முதலீடு முக்கியமாகத் தேவைப்படும் துறைகளில் வெளிநாட்டு முதலீட்டை அனுமதிப்பதற்கு இலஞ்சம் கோரும் அதிகாரிகளினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதைரியமடைந்து வெளியேறுவர்.
- சட்டத்தை நடைமுறைப்படுத்தல், சொத்துரிமைகளைப் பாதுகாத்தல், பிரசைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன பொருளாதார அபிவிருத்தியின் மீது அதிகமுக்கியத்துவம் கொண்டவையாகும்.

(ஒரு காரணத்திற்கு 02 புள்ளி வீதம் மொத்தம் 05 புள்ளிகள்.)

**10 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்**




இவ்வினாத்தாளில் குறைந்த எண்ணிக்கையானோர் தெரிவு செய்துள்ள வினா 10ஆம் வினாவாகும். அது 16 ஆகும். (வரைபு 02). இவ்வினாவுக்குரிய புள்ளிகள் 20 ஆகும்.

இதில் 00 - 05 புள்ளி ஆயிடையில் 88%
06 - 10 புள்ளி ஆயிடையில் 9%
11 - 15 புள்ளி ஆயிடையில் 2%
16 - 20 புள்ளி ஆயிடையில் 1%
என்றவாறு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 4 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் (ii) ஆம் பிரிவு மிகக் கடினமானதாக அமைந்துள்ளது. அதன் இலகுதன்மை 8% ஆகும். இலகுதன்மை கூடியது (iii) பிரிவாகும். அதன் இலகுதன்மை 31% ஆகும். i ஆம், iv ஆம் பிரிவுகளும் குறைந்த இலகுதன்மையைக் கொண்டுள்ளதுடன் அவற்றின் இலகுதன்மை 9% சதவீதப்படியாகும். முழுமையாகப் பார்க்கும்போது இதுவொரு குறைந்த இலகு தன்மையைக் கொண்ட வினாவாகும்.

⋆ (i) ஆம் பிரிவின் இலகுதன்மை 9% சதவீதமளவிலான குறைந்த பெறுமானமாகும். பல்வேறு வருடங்களின் தரவுகளை ஞாபகத்திற் கொண்டிராமை காரணமாக இலகுதன்மை குறைந்துள்ளதாகக் கொள்ளலாம். எண்சார்ந்த தரவுகளுடன் தொடர்புடைய தகவல்கள் வினவும் வினாக்களை மாணவர்கள் குறைந்தளவிலேயே தெரிவுசெய்கின்றனர் என்பது தெரிகிறது. குறைந்த எண்ணிக்கையானோரே இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர்.

⋆ (ii) ஆம் பிரிவு இவ்வினாவில் குறைந்த இலகுதன்மைகளைக் காட்டுகிறது. அதன் இலகுதன்மை 8% ஆகும். தற்போது காணப்படுகின்ற சேமிப்பு-முதலீட்டு இடைவெளி ஏற்படுத்தவல்ல தாக்க விளைவு-கள் தொடர்பாக மாணவரின் பகுப்பாய்வு ஆற்றல் ஆராயப்படுகிறது. இருப்பினும் மாணவர்கள் விடையளிக்கத் தவறியுள்ளமையைக் காட்டுகிறது. மாணவர்கள் பகுப்பாய்வு சிந்தனைக்கு பழக்கப்படும் வகையில் கற்றல்-கற்பித்தல் செயன்முறை ஒழுங்கமைக்கப்படல் வேண்டுமெனத் தெரிகிறது.

⋆ (iii) ஆம் பிரிவு இவ்வினாவில் உயர்வான இலகுதன்மை கொண்டவொரு பிரிவாகும். அதன் இலகுதன்மை 31% ஆகும். சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்துக்காக அரசின் தலையீடு காரணமாக மாணவர்கள் அது தொடர்பாக ஓரளவு விளக்கம் பெற்றிருக்கின்றமையைக் காட்டுகிறது. தகவல்களைத் தேடுதல் தொடர்பில் மாணவர்கள் ஊக்குவிப்பதனூடாக இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்கும் ஆற்றலை விருத்தி செய்ய முடியும்.

⋆ (iv) ஆம் பிரிவின் இலகுதன்மை 9% ஆகும். நல்லாட்சி, நிர்வாகமயமாக்கம் போன்ற புதிய எண்ணக்கருக்கள் தொடர்பாக மாணவரின் அறிவு போதாமை காரணமாக இலகுதன்மை குறைந்துள்ளதாகக் கருதலாம். மேலதிக வாசிப்பில் ஈடுபடும் வகையில் வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைத்துக் கொள்வதனூடே இவ்வாறான வினாக்களுக்கு வெற்றிகரமாக மாணவர்களை விடையளிக்கச் செய்யலாம்.

### 2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

இம்மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட தகவல்களை ஒழுங்குபடுத்தியதன் மூலம் வினாப்பத்திரம் II இன் ஒவ்வொரு வினாவும் தெரிவு செய்யப்பட்ட சதவீதமும் இலகுதன்மையும் காட்டப்படும். பின்வரும் வரைபும் அட்டவணையும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.




| வினா இலக்கம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தெரிவு செய்தோர் வீதம் | 97 | | 49 | 36 | 23 | 69 | 85 | 44 | 44 | 16 |
| இலகுதன்மை | 29 | | 41 | 35 | 39 | 26 | 42 | 30 | 19 | 14 |

இவ் வினாப்பத்திரம் II அ, ஆ ஆகிய இரண்டு உபபிரிவுகளைக் கொண்டது. 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் 'அ' உபபிரிவுக்கும் 6 தொடக்கம் 10 வரையான வினாக்கள் 'ஆ' உபபிரிவுக்கும் உரியன. பரீட்சார்த்திகள் அ, ஆ ஆகிய உபபகுதிகளிலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

உப பிரிவு 'அ' விலுள்ள வினாக்களுள் 1, 2 ஆம் வினாக்கள் கூடுதலாகத் தெரிவு செய்துள்ளதுடன் உபபிரிவு 'ஆ' விலுள்ள வினாக்களுள் 6, 7 ஆம் வினாக்கள் கூடுதலான பரீட்சார்த்திகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை தெரிவு செய்யப்பட்ட சதவீதம் முறையே 97%, 89%, 69%, 85% என்றவாறாகும். அவர்களுக்கு அடுத்தபடியில் கூடுதலானோரால் தெரிவு செய்யப்பட்டது 3 ஆம் வினாவாகும். எஞ்சிய ஆறு வினாக்களுள் கூடுதலானோர் தெரிவுசெய்யப்பட்ட அவ்வினாவுக்கு பரீட்சார்த்திகளுள் சரிபாதிக்குக் கிட்டிய எண்ணிக்கையானோர் விடையளித்துள்ளனர். பாடத்திட்டத்தில் இவ்வினாக்களுக்கு அடிப்படையாக அமைந்த தலைப்புகளும் பாட விடயங்களும் கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் கூடிய கவனத்துக்குட்பட்டதும் மாணவர் மத்தியில் மிகப் பிரபல்யமானவையும் ஆகும். எனவே அவ்வினாக்களின் இலகுதன்மை ஒப்பீட்டளவில் கூடிய பெறுமானத்தைப் பெற வேண்டும். வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட சதவீதங்களின் இறங்குவரிசை ஒழுங்கில் முதலில் அமையும் வினாக்களாக முறையே 1, 2, 7, 6, 3 ஆகும். இருப்பினும் இலகுதன்மை அவ்வொழுங்கில் முதலில் அமையும் ஒழுங்கில் 2, 7, 3, 5, 4 ஆகும். 1 ஆம் 6 ஆம் வினாக்கள் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் அவற்றுக்கு அளிக்கப்பட்ட விடைகள் அவ்வளவு திருப்திகரமானதாய் அமையாமையையும் கூடுதலாகப் புள்ளிகளைப் பெறத் தவறியுள்ளமையையும் இத்தகவல்களிலிருந்து வெளிப்படுகிறது. எனவே மாணவர்களின் கூடிய கவனத்துக்குட்படுகின்ற இவைபோன்ற வினாக்களுக்கு கூடியளவான புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கற்றல்-கற்பித்தல் செயன்முறையின்போது மாணவர்களுக்கு வழிகாட்டல் மாணவர்களின் மிக வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெறுவதற்கு வழிகாட்டலாக அமையும்.

கூடிய இலகுதன்மையைக் கொண்டு 02 ஆம் வினாவின் இலகுதன்மை 51% சதவீதத்துக்கு வரையறுக்கப்பட்டிருப்பது பொருளியல் பாடத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்ப்போரின் கவனத்திற்கு உட்பட ணேடிய ஒரு விடயமாகும். சுய முயற்சியுடன் வினாவொன்று விடையளிக்கும் ஒருவருக்கு சாதாரணமாக வினாவுக்குரிய மொத்தப் புள்ளிகளில் கூடிய சதவீதமொன்றை பெற்றுக்கொள்ள முடியுமான விதத்தில் தனது விடையை சரியான பாட விடயங்களினூ டாக ஒழுங்கமைத்து முன்வைப்பதற்கு வழிகாட்டப்பட வேண்டும்.

குறைந்தளவானோர் 10 ஆம் வினாவைத் தெரிவு செய்துள்ளதுடன் அதன் இலகுதன்மையும் 14% சதவீதமளவான குறைந்த பெறுமானத்தைக் கொண்டுள்ளது. அதற்கு அடிப்படையாய் அமைந்த பாட விடயங்கள் தொடர்பில் வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் போதுமானளவு கவனம் செலுத்தப்படாமை தெரிகிறது.
வினாப்பத்திரம் II இன் ஒவ்வொரு வினாவையும் நோக்குமிடத்து இலகுவான வினாவின் இலகுதன்மையும் கூட 51%சதவீதமாகக் காணப்படுவதும் 2, 3, 7 ஆம் வினாக்கள் தவிர ஏனைய ஏழு வினாக்களினதும் இலகுதன்மை 40%சதவீதத்தை விடக் குறைந்து காணப்படுவதும் இப்பாடத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரதம் கவனத்திற்குற்பட வேண்டியவொரு விடயமாகும். அதேபோன்று வினாபத்திரம் II முழுமையாக இலகுதன்மையும் 33% சதவீதமாகக் காணப்படுகிறது. இத்தகவல்களிலிருந்து கற்றல்-கற்பித்தல் செயன்முறையானது மாணவர்களை தாமாகத் தேடியறியும் பரீட்கைளில் ஈடுபடுத்தலும் குறித்த நோக்கத்தைக் கொண்ட பின்னூட்டல் செயற்பாடுகளை காலம் தாழ்த்தாது மேற்கொள்ளப்பட வேண்டியதும் முக்கிய தேவையாகும் என்பது புலனாகிறது.

# பகுதி III

## 3.0 விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1. விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்**

* வினாப்பத்திரத்திலுள்ள பிரதான அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து எத்தனை வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும், எந்த வினா கட்டாயமானது, எவ்வளவு காலம் வழங்கப்பட்டுள்ளது, எவ்வளவு புள்ளிகள் கிடைக்கப்பெறும் என்பன தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். வினாக்களை நன்கு வாசித்து சரியாக விளங்கி வினாக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஒரே வினா இரு பிரிவுகளைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்விரு பிரிவுகளுக்கும் விடையளிப்பதில் கசனம் செலுத்தல் வேண்டும்.

* வினாப் பத்திரம் I இன் வினாக்களுக:கு விடையளிக்கும்போது மிகச் சரியான விடையை மட்டுமே தெரிவுசெய்ய வேண்டும். அத்தோடு தெளிவான ஒரு புள்ளடியினை மாத்திரம் விடைத்தாளில் இடுதல் வேண்டும்.

* வினாப்பத்திரம் II இன் (அ) மற்றும் (ஆ) பகுதிகளின் வினாக்களுக்கு விடையளிக்கும்போது எல்லா பிரதான வினாக்களையும் புதிய தாளில் எழுதத் தொடங்க வேண்டும்.

* விடைகள் சரியானதும் தெளிவானதுமான கையெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.

* பரீட்சார்த்திகள் விடைத்தாளின் எல்லாப் பக்கங்களிலும் உரிய இடங்களில் தமது சுட்டெண்ணை எழுதுதல் வேண்டும்.

* வினா இலக்கம், உபபிரிவுகளின் இலக்கங்கள் சரியாக எழுதப்பட வேண்டும்.

* சரியான சுருக்க விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் விரிவாக விடையளிப்பதை தவிர்ப்பதோடு, விரிவாக விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் சுருக்கமாக விடையளித்தலையும் தவிர்த்தல் வேண்டும்.

* வினாவில் கேட்கப்பட்டுள்ளவாறு விடைகள் தர்க்கரீதியாகவும், பகுப்பாய்வு முறையிலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

* விடையெழுதும்போது சிவப்பு, பச்சை நிற மை பேனாக்களை பாவித்தலைத் தவிர்க்கவும்.

* விடைக்குரிய புள்ளிகளின் அளவு, காலம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகளுக்கேற்ப நேர முகாமைத்துவத்தை பின்பற்றுதல் வேண்டும்.

## விசேட அறிவுறுத்தல்கள்

* பொருளியல் பாடத்தில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
  உதாரணம் - நுகர்வு

* தேவையான இடங்களில் புள்ளிவிபர ரீதியான அட்டவணைகள், வரைபுகள், சமன்பாடுகள் மூலமாக விடைகள் விளக்கமளிக்கப்பட வேண்டும். வரைபுகளை சரியான அளவுத்திட்டத்திற்கேற்ப வரைவதிலும் அச்சுகளைச் சரியாகப் பெயரிடுவதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

* கணித்தல்களின்போது ஒவ்வொரு படிமுறையையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் சரியான அலகுகளைக் குறிப்பிடல் வேண்டும்.

* தேவையான இடங்களில் சரியான குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

* உரிய வரைபடங்களை வரையும்போது கோடுகளைச் சரியாகப் பெயரிடவும் அதன் பெயர்ச்சிகளின் திசைகளை சரியாகக் குறிப்பிட வேண்டும்.

## 3.2. கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்

* எண்ணக்கருக்கள் தொடர்பான சரியானதும் நிச்சயமானதுமான அறிவு இருக்க வேண்டியதுடன், எண்ணக்கருக்கள் தொடர்பான பிரயோகம் பயன்பாடுகளும் மேம்படுத்த வேண்டும்.

* பொருளாதார, சமூகக் காரணிகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பாக திருப்திகரமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

* இதற்காக இலங்கை மத்திய வங்கி, குடிசன தொகைமதிப்புத் திணைக்களம், நிதியமைச்சு ஆகிய நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிக்கைகள், பிரசுரங்கள் என்பவற்றை பரீட்சிப்பதற்கும் பழக்கப்பட வேண்டும். அதன் மூலம் தமது அறிவை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்